New Rubi Jewellers
நகைகளும்,
திருத்த வேலைகளும்
உங்கள்
தேவைகளுக்கு
உடனுக்குடன்
செய்து தரப்படும்
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

ASI Boucherie
ஆடு, மாடு, கோழி
இறைச்சி வகைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
195, rue du Fbg st-denis, 75010 Paris
Tel: 01 42 05 23 78
M° : La Chapelle
Gare du Nord

GB : Free
France : 0,30 €

# ஈழமுரசு®

முரசு 03 | 14 - 20 பெப்ரவரி 2012 | முழக்கம் 122

## ஜெனீவாவில் சிறீலங்காவுக்கு அழுத்தம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் முடிவு மகிந்த நாடுவிட்டு நாடு ஓட்டம்






## போர்க்குற்ற விசாரணை அழுத்தங்கள் தமிழ் மக்களின் விடிவிற்கா? பொன்சேகாவின் விடுதலைக்கா?



## அமெரிக்கா மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றுமா?



## ஒஸ்லோவிலிருந்து வன்னிக்கு வந்த கோரிக்கை

www.paristamil.com
www. பரிஸ்தமிழ். கொம்

AUTOSUR
CONTROLE TECHNIQUE AUTOMOBILE
உங்கள் வாகனங்களை Controle Technique
செய்து கொள்ள நீங்கள்
நாட வேண்டிய இடம்
Le Bourget விமானநிலையம் முன்பாக
C.T.M
Autosur C.T.M
Mathavan Balakrishnan
24 Route de Flandres,
95500 Bonneuil En France
Tél.: 01 45 91 06 78 Fax: 01 45 91 05 96
Portable: 06 68 10 83 85

EURO RESTO SERVICE
உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்
33 bis, rue du Chatêau Landon. 75010 Paris
M°: STALINGRAD / LA CHAPELLE
Tél.: 01 40 36 00 09 / 06 68 67 15 55

தமிழ்க்கதிர்
தமிழ்தேசியத்தின் அனல்க் கதிர்
www.tamilkathir.com

VIJAY V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92

ARC PROTECTION
VIDEO SURVEILLANCE
AU SERVICE DE LA SECURITE
CAMERAS EN COULEUR
138, Avenue Henri Barbusse - 93700 Drancy
Tel 0033 9 50 40 84 52 - Fax 0033 9 67 03 63 69
Portable 0033 6 11 55 90 84
arceurope@hotmail.fr

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indianne et Srilankaise
www.restaurantbharath.com www.cafe-bharath.com

VG CASH & CARRY
மளிகை ஸ்தாபனம்
ஆசிய மற்றும் ஆபிரிக்க
மளிகைப்பொருட்கள்.
34, Avenue de la République
93150 Le Blanc Mesnil
(à côté la Poste)
Tél.: 01 48 67 56 44

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

மாதாந்தம் 300 MB இணையம் இலவசம்

# Lycamobile

Appelez le monde pour moins cher

## 60 க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கான இலவச அழைப்புகள்..!

இணைப்புக் கட்டணம் இல்லை.!

**0** ct/நிமிடம்*

- இந்தியா
- இலங்கை
- மலேசியா
- ஐரோப்பா
- கனடா
- அமெரிக்கா
- சிங்கப்பூர்
- குவைத்
- சவூதி அரேபியா

*30€ வுக்கு மீள் நிரப்பும் பொழுது 600 நிமிடம் அல்லது குறுந்தகவல் (SMS) இலவசம்

| பிரான்ஸ் | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி | உள்நாட்டு குறுந்தகவல் |
|---|---|---|---|
| | 0 Ct/நிமிடம்* | 12 Ct/நிமிடம் | 9 Ct/(SMS) |

லில் இருந்து

Lycamobile → 0* Ct → Lycamobile

*அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புகள் பிரான்ஸிலிருந்து அல்ஜீரியா, சவூதி அரேபியா, பஹ்ரைன், வங்காளதேசம், கனடா, சீனா, கொலம்பியா, கோட்டே டிவோர், எகிப்து, அமெரிக்கா, ஐரோப்பா, பிரான்ஸ், ஹாங்கொங், இந்தியா, இந்தொனேசியா, ஈரான், ஈராக், ஜோர்டான், குவைத், லாவோஸ், லெபனான், மலேசியா, மொராக்கோ, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான், போலாந்து, றொமேனியா, ரஸ்யா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, துருக்கி, வியட்நாம் வீட்டுத்தொலைபேசிக்கும் மற்றும் எல்லா நாடுகளிலுள்ள லைக்காமொபைல்களுக்கும் பொருந்தும். இச்சலுகை மீள்நிரப்பிய நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புகளும், குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால் லைக்காமொபைலில் வழமையான கட்டணம் அறவிடப்படும். *சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. Lycamobile SARL 47 boulevard de Courcelles, 75008 Paris; 528 332 505 RCS Paris.
ஒவ்வொரு சலுகையல்லாத அழைப்புக்களுக்கும் இணைப்புக்கட்டணமாக €0.09 அறவிடப்படும்.

Lycamobile மீள் நிரப்பக்கூடிய இடங்கள்

01 77 72 23 22

www.lycamobile.fr

# ஈழமுரசு®

MAISON DES MEDIAS

முரசு 03 14 – 20 பெப்ரவரி 2012 முழக்கம் 122


"வரலாறு என்பது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தி அல்ல. அது மனிதனின் தலைவிதியை நிர்ணயித்து விடும் சூத்திரப்பொருளும் அல்ல. வரலாறு என்பது மனித செயற்பாட்டுச் சக்தியின் ஒரு வெளிப்பாடு. மனிதனே வரலாற்றைப் படைக்கிறான். மனிதனே தனது தலைவிதியையும் நிர்ணயிக்கிறான்."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# ஜெனீவாவில் சிறீலங்காவுக்கு அழுத்தம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் முடிவு

## மகிந்த நாடுவிட்டு நாடு ஓட்டம்

(14.02.2012, செவ்வாய்க்கிழமை)

சிறீலங்கா அரசு என்ன உறுதிமொழிகளை வழங்கினாலும் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் மகிந்த அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தில் எதுவித மாற்றங்களையும் செய்யப்போவதில்லை என்று அமெரிக்கா தெரிவித்திருக்கின்றது. பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் மரியா ஓட்டேரோ மற்றும் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய சந்திப்பின்போது அமெரிக்காவின் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரும் கலந்துகொண்டார். தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் மட்டுமே கலந்துகொண்டிருந்தனர். சுமார் ஒரு மணிநேரம் நடந்த இந்தச் சந்திப்பின்போது அரசியல் தீர்வு, அரசு – கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சின் தற்போதைய நிலைமை, தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் நடைமுறைப்பிரச்சினைகள், போர்க்குற்ற விசாரணை விவகாரம் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

தமிழ்க் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய முக்கிய பிரச்சினைகள் குறித்து அரசுடன் பேசுவதாக இதன்போது உறுதியளித்துள்ள அமெரிக்க இராஜதந்திரிகள், பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலிருந்து அரசு விலகி விடமுடியாது என்பதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகளின் அமுலாக்கம் என்பன பற்றி இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டிருக்கிறது. ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை அமுலாக்குவதில் சிறீலங்கா அரசு அக்கறை இல்லாமல் இருப்பதால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு வலியுறுத்தும் தீர்மானமொன்றை எதிர்வரும் ஜெனீவா மாநாட்டில் நிறைவேற்ற அமெரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இங்கு குறிப்பிட்டுள்ள அமெரிக்க இராஜதந்திரிகள், இப்போது அரசு வழங்கும் உறுதிமொழிகளை ஏற்று அந்தத் தீர்மானத்தை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யாது என்றும் குறிப்பிட்டுள்ளனர். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை சிறீலங்கா அரசு நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்பதில்

04ம் பக்கம் பார்க்க



ஈகப்பேரொளி முருகதாசனின் 3ம் ஆண்டு நினைவு

→ 04


A D IMMO

பிரான்ஸ் முழுவதும் வீடு வாங்க, விற்க, வாடகைக்குப் பெற நம்பிக்கையான முழுத் தமிழ் நிறுவனம்

APPARTEMENTS

| | | |
|---|---|---|
| APP 4P | LE GRAND | 175 000 Euro |
| APP 3P | NOISSY LE SEC | 170 000 Euro |
| APP 4P | CHOISY LE ROI | 175 000 Euro |
| APP 4P | BONDY | 170 000 Euro |
| APP 4P | BOBIGNY | 160 000 Euro |
| APP 3P | DRANCY | 155 000 Euro |
| APP 3P | EPINY | 150 000 Euro |
| APP 3P | LE BOURGET | 170 000 Euro |

PAVILLON

| | |
|---|---|
| DRANCY 4P | 270 000 Euro |
| BONDY 8P | 340 000 Euro |
| LA COURNEUVE 4P | 310 000 Euro |
| BOBIGNY 4P | 280 000 Euro |
| LE BOURGET 4P | 290 000 Euro |
| GAGNY 4P | 288 000 Euro |
| IE BLANC MESNIL 4 P | 260 000 Euro |
| SEVRAN 4 P | 255 000 Euro |



தம்பி : 06 27 50 09 57 அகந்தன் : 06 60 93 45 27

252, Rue Anatole France 93700 Drancy RER B - Drancy Tél : 01 48 30 72 62 Fax : 01 48 32 51 32

R.S.T MULTISERVICES ஆர்.எஸ்.ரி பல்சேவை நிறுவனம்

வீடு விற்பதற்கு வாங்குவதற்கு

100 % தொடக்கம் 110 % வரை வீட்டுக்கடன்

- வீட்டுக்கு தேவையான வங்கிக் கடன்
- தனிப்பட்ட கடன் (Crédit Personnel)

ஆகியவற்றுக்கு நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்

SERVICE FINANCIERE

உங்கள் சகல கடன்களையும் ஒருங்கிணைக்க எம்மை நாடுங்கள்.

RACHAT DE PRET

8 Bis, Rue de Verdun - 94190 Villeneuve Saint Georges

திரு- 01 45 99 22 76 தொ. நகல். 01 45 99 43 17

Email : Contact@avendreimmo.com Website : www.avendreimmo.com



ஈழமுரசு

Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE Gratuit
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16

இணையத்தளம்
www.eelamurazu.com

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

Impression / Printing:
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ

பிரித்தானியா:
Eelamurasu Weekly
E.Mail-eelamurazu.uk@gmail.com
078 3087 4808
MOHAN

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

கனடா:
Pulathil Weekly
E.Mail-pulathilcanada@gmail.com
P.O.BOX # 4068, 1235 McCowan Rd,
Scarborough, ON, M1H 0A4
416 418 0822

சந்தா விபரம்
(அஞ்சற் செலவு மட்டும்)
வருட சந்தா
பிரான்ஸ் 60€
ஐரோப்பா 65€
ஏனைய நாடுகள் 70€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதிபெறவேண்டும்.

# ஜெனீவாவில் சிறீலங்....

அமெரிக்கா அக்கறையுடன் இருப்பதாகவும் அமெரிக்க இராஜதந்திரிகள் இந்தச் சந்திப்பில் உறுதியாகத் தெரிவித்துள்ளனர் என கூட்டமைப்பு தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிறீலங்கா தொடர்பான பிரேரணை ஒன்று ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. சிறீலங்காவில் இடம்பெற்ற போர் தொடர்பில் விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஜனாதிபதிகள் ஐக்கிய நாடுகள் சபைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல் விவகாரங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றினூடாக சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும் வலியுறுத்தியுள்ளது என பிரித்தானிய தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறீலங்காவிற்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள மேற்குலக நாடுகள் அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. இதன் ஒரு கட்டமாக் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியாவுக்கு சென்றிருந்தார். அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மேற்குலக நாடுகள் ஈடுபட்டிருப்பதாக டில்லித் தகவல்கள் கூறுகின்றன. இதன் ஒரு கட்டமாக நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைக்கான சிறப்பு சமாதான தூதுவராகப் பணியாற்றியவருமான எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லி சென்றிருந்தார். அவர் இந்தியாவின் முக்கிய அரசியல்த் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பு அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேவேளை அமெரிக்கத் தரப்பில் சில உயர்மட்டப் பிரதிநிதிகள் புதுடில்லி செல்லும் வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிகிறது.

இந்நிலையில் சிறீலங்காவும் இந்தியாவின் ஆதரவைத் தக்க வைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. ஏற்கனவே கடந்த மாதம் 24ம் திகதி வெளிவிவகார அமைச்ஷர் ஜி.எல்.பீரிஸ் குறுகிய பயணம் ஒன்றை மேற்கொண்டு டில்லி சென்று திரும்பியிருந்தார். அடுத்து அவர் ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத்திட்டம் ஒன்றை மேற்கொண்டார். அதேவேளை இந்திய – சிறீலங்கா பாதுகாப்புக் கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, இந்திய அதிகாரிகள் பலருடனும் ஜெனீவாத் தீர்மானம் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளார். எனினும், ஜெனீவா கூட்டத்தொடரில் மேற்குலகின் சார்பில் சிறீலங்காவிற்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு இந்தியா ஆதரவு வழங்குமானால் அது சிறீலங்காவிற்குப் பெரும் பின்னடைவாக அமையும் என்றும் கருதப்படுகிறது. இந்த விடயத்தில் இந்தியா இன்னமும் குழப்ப நிலையிலேயே இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்க, ரொபேட் ஓ பிளேக் சிறீலங்கா சென்றிருந்த நிலையில், மகிந்த ராஜபக்ச பாகிஸ்தான் சென்றிருந்தார். இதனால் கொழும்பில் இரண்டு நாள்கள் மட்டுமே தங்கியிருந்த பிளேக், மகிந்த ராஜபக்சவிற்குமிடையில் நேரடிப் பேச்சுக்கள் நடைபெறவில்லை. பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தை நிறைவு செய்து கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறீலங்கா திரும்பிய மகிந்த ராஜபக்ச, அடுத்தகட்ட பயணமாக சிங்கப்பூர் செல்லவுள்ளதாக அவரது ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். பாகிஸ்தானிலிருந்து நாடு திரும்பியிருந்து மகிந்த ராஜபக்ச ஓரிரு நாட்களிலேயே சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொள்கின்றார். சிங்கப்பூர் அதிபரின் அழைப்பை ஏற்று இரண்டு நாள் பயணமாக மகிந்த ராஜபக்ச அங்கு செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துவரும் நிலையில், அமெரிக்க அதிகாரிகள் இலங்கைக்குள் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், அவர்களை நேரில் எதிர்கொள்ள முடியாமலேயே மகிந்த ராஜபக்ச இவ்வாறான பயணங்களை மாறிமாறி ஏற்பாடு செய்துள்ளதாக கூறப்படுகின்றது. மகிந்தவின் இப்பயணங்கள் இம்மாத இறுதி வரை தொடரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச ரீதியில் சிறீலங்கா எதிர்கொள்ளும் எந்த சவால்களையும் சாமாளிக்கும் நோக்கில் சிறீலங்காவிற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று அறிவித்துள்ள சீனா, ஜெனீவாவில் தொடங்கும் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் ஆசிய நாடுகள் சிறீலங்காவிற்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. இந்நிலையில் சீனாவின் ஆதரவு நாடுகளில் ஒன்றான சிங்கப்பூருக்கு மகிந்த பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிலைமை இறுக்கமடைந்து வரும் நிலையில் சிறீலங்காவின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையர்களில் ஒருவராக இருந்த கலாநிதி ஆனந்த மெண்டிஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். பக்கச்சார்பற்ற விதத்தில் நியாயமான முறையில் அச்சமின்றி நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய நிலைமை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குள் இல்லை என்ற காரணத்தால்தான் இந்த தீர்மானத்திற்கு தான்வர நேரிட்டதாக கலாநிதி ஆனந்த மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

## ஈகப்பேரொளி முருகதாசனின் 3ம் ஆண்டு நினைவு

'ஈகப்பேரொளி' முருகதாசனின் 3ம் ஆண்டு நினைவு கல்லறை வணக்க நிகழ்வு இலண்டனில் நடைபெற்றது. தியாகத்தின் உச்சமாய் தன்னையே தீயிற்கு இரையாக்கி சர்வதேசத்திடம் தமிழர்களுக்கான நீதியைக்கேட்டு சாவைத்தழுவிய 'ஈகப்பேரொளி' முருகதாசனின் மூன்றாம் ஆண்டான 12.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணிக்கு அவரின் வித்துடலை விதைக்கப்பட்டுள்ள விதைகுழி அமைந்திருக்கும் இலண்டன் Hendon Cemetery & Crematorium, London, NW7 1NB எனும் முகவரியில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு ஈகைப்பேரொளி முருகதாசன் மற்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக தம்முயிர்களை தீயினால் ஈகம் செய்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு 12.02.12 மாலை 6.30 மணியளவில் இலண்டனில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பொதுச்சுடரினை இளையோர் அமைப்பைச் சேர்ந்த ஜெயகோவர்த்தன் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஜெயானந்தமூர்த்தி அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகைச்சுடரினை ஈகைப் பேரொளி முருகதாசனின் தாயார் ஏற்றிவைக்க திருவுருவப்படங்களிற்கு அவரின் தந்தையார் மலர் மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மலர்வணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந் நிகழ்வில் சிறப்புரையினை ஜெயானந்தமூர்த்தி அவர்களும் சுதுமலைக் கவிஞர் திரு கந்தையா ராஜமனோகரனும் நிகழ்தினர். நடனம் கவிதைகள் எனத் தொடர்ந்த நிகழ்வு விடுதலைக் கீதங்களுடன் நிறைவு பெற்றது.

ஸ்ரீ அம்மா பகவானின் ஐஸ்வர்ய தீக்சை வகுப்பு
இந்தியாவின் ONENESS பல்கலைக்கழகத்திலிருந்து
இணையத்தினூடக நேரடியாக நடாத்தப்படுகின்றது

காலம்: Sat, 18th February 2012
நேரம்: 03.00pm till 07.00pm
இடம்: Ayappan Temple Hall
36 Masons Avenue,
Harrow, HA3 5AR
Contact: 07919551646 | 07831798115
07985953558 | 07771116102
அனைவரும் வந்து பங்குபற்றி உங்கள் வாழ்க்கையில்
ஐஸ்வர்யம், சுபீட்சம் பெற்று மகிழுங்கள்
அனுமதி இலவசம்

ஈழமுரசு

# அமெரிக்காவின் முடிவும் தமிழர்களின் எதிர்பார்ப்பும்

ஜெனீவாவில் சிறீலங்காவிற்கு எதிராகத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதில் அமெரிக்கா உறுதியாகிவிட்டதாக கூறப்படுகின்றது. முள்ளிவாய்க்கால் பாரிய இன அழிப்பு முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகளை நெருங்குகின்ற நிலையில்தான், அமெரிக்கா இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. ஜெனீவாவில் சிறீலங்காவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதற்கு முன்பாக, இப்படியான ஒரு நிலைமை ஏற்படும் என்பதனையும் அதனை தவிர்க்க சிறீலங்கா எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அமெரிக்கா சிறீலங்காவிற்கு பலமுறை தெளிவுபடுத்தியிருந்தது.

அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலர் கிலாரி கிளிண்டன் முதல் சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதர் வரை அமெரிக்காவின் பல உயர்மட்டத் தலைவர்கள் பல தடவைகள் சிறீலங்காவின் தலைவர்களை நேரில் சந்தித்தும் எடுத்துக் கூறிவிட்டார்கள். ஆனால், அமெரிக்கா எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை.

தமது சொந்த அரசியல் பிரச்சினைக்களுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளாக சிறையில் தள்ளியிருக்கும் போர் நடைபெற்றபோது படையினரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை, போர்க் குற்றச்சாட்டுக்களுடன் மகிந்த அரசு சிறையினுள் தள்ளியிருந்தால்கூட சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களில் இருந்து ஓரளவிற்கு சிறீலங்கா தப்பியிருக்கும். ஆனால், சிறீலங்கா இராணுவம் போர்க் குற்றங்களிலோ மனித உரிமை மீறல்களிலோ ஈடுபடவில்லை என்று மகிந்த அரசு விடாப்பிடியாக மறுத்துவருகின்றது. மகிந்த அரசின் இந்தப்போக்கு மட்டுமல்ல, ஈரான் போன்ற அமெரிக்காவிற்கு உவப்பான நாடுகளுடனான அதனது இறுக்கமான உறவும்தான் இப்போது இக்கட்டான ஒரு கட்டத்திற்குள் மகிந்த அரசைக் கொண்டுவந்துள்ளது.

சிறீலங்காவைக் காப்பாற்ற அமெரிக்கா எடுத்த அத்தனை முயற்சிகளும் தோற்றுப்போன நிலையிலேயே, சிறீலங்கா அதற்கு வளைந்து கொடுக்காத ஒரு நிலையிலேயே இவ்வாறான ஒரு முடிவிற்கு அமெரிக்கா வந்திருக்கும் என்பது திண்ணம்.

ஏனெனில், ஈராக்கில் சதாம் உசைனின் ஆட்சியை அகற்றுவதற்கும், ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியை அகற்றுவதற்கும், தனது சொந்த மக்களையே கொல்வதாகக் கூறி லிபியாவில் கடாஃபி ஆட்சியாளர்களை உடனடியாகவே அகற்றுவதற்கும், இன்று சிரியாவில் அதே காரணங்களுடன் அதன் ஆட்சியாளர் பசார் அல்-ஆசாத்தை அகற்றுவதற்கும் மிகவும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துவரும் அமெரிக்காவிற்கு சிறியதொரு தீவான இலங்கையில், மகிந்த குடும்ப ஆட்சியாளர்களை அகற்றுவதென்பது அவ்வளவு கடினமாக இருந்திருக்காது. எனவே, மகிந்த அரசைக் காப்பாற்றவே அது கடந்த மூன்று ஆண்டுகளாகப் போராடி, அது முடியாமல் போனதன் விளைவே தற்போதைய ஜெனீவாவாவில் தண்டிக்க எடுத்த முடிவு என்று கொள்ளமுடியும்.

எனவே, இது தமிழ் மக்கள் மீது கொண்ட கரிசனையால் வந்த முடிவாகக் கருதிவிடமுடியாது. எனினும், அமெரிக்காவின் இந்த முடிவு தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதே. சிறீலங்காவை ஐ.நா. தண்டிக்க வேண்டும் என்பதற்காகவே கடந்த மூன்று வருடங்களாக புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தொடர்ச்சியான பல போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இதன் தொடர்ச்சியாகவே இம்முறை என்றாலும் தண்டனை வழங்கவேண்டும் என்பதற்காக பெல்ஜியத்தின் ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்தில் இருந்து மூன்று தமிழர்கள் நீதி கேட்டு ஐ.நா. மனித உரிமைகள் அவையை நோக்கி கடும் குளிருக்கும் மத்தியில் நடை பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

சிரியாவில் இராணுவத்தின் தாக்குதலில் விழுகின்ற ஒவ்வொரு மரணத்தையும் உடனடியாக கணக்கிலெடுத்துக் கண்டிக்கின்ற ஐ.நா., நாள் தோறும் கொல்லப்படுபவர்கள், மாதத்தில் கொல்லப்பட்டவர்கள், இதுவரை ஒட்டு மொத்தமாகக் கொல்லப்பட்டவர்கள் என புள்ளிவிபரங்களை விரைவாக வெளியிட்டு சிரியாவில் ஆட்சியாளர்கள் தங்கள் சொந்த நாட்டு மக்கள் மீது நடத்துகின்ற படுகொலைகளை உலகிற்கு அம்பலப்படுத்திக்கொண்டிருக்கின்ற ஐ.நா. தமிழ் மக்களின் படுகொலை குறித்து பெரும் மௌனம் சாதித்துவருகின்றது.

இந்நிலையில், ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் கொடுக்கப்போகின்ற அழுத்தமும் தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களும் சிறீலங்காவின் இனப்படுகொலை முகத்தை அம்பலப்படுத்தும் என்று நம்பலாம். ஆனாலும், ஐ.நா. போர்க் குற்றச்சாட்டுக்களில் சிறீலங்கா தண்டிக்கப்படுவதன் ஊடாக அல்லது அந்தக் குற்றச்சாட்டில் ஒருசில சிறீலங்கா இராணுவத் தளபதிகளுக்கு தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக தமிழர்களுக்கு என்ன கிடைத்துவிடப்போகின்றது என்ற கேள்வியே எழுகின்றது. ஏனெனில் சிறீலங்காவிற்கு வழங்கப்படுகின்ற தண்டனை என்பது, குற்றவாளிகளுக்கான தண்டனையாக மட்டும் இல்லாமல் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் அமையவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

# ஈழத் தமிழர்கள் ஆள தனிப் பிராந்தியம் தேவை
## ஐரோப்பிய நாடாளுமன்றில் வைகோ பிரேரணை

ஈழத் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய தனிப் பிராந்தியத்தை வழங்கவேண்டும். இதற்காகப் புலம்பெயர் தமிழர்களின் உதவியுடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி ஐரோப்பிய நாடாளுமன்றில் பிரேரணையொன்றை கொண்டு வருமாறு கோரிக்கை விடுத்துள்ளார் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், தமிழ் நாட்டின் மூத்த அரசியல்வாதியுமான வைகோ.

ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஐரோப்பிய நாடாளுமன்ற நீதிமன்றம் ஆகியவற்றின் கீழாக இந்த சர்வஜன வாக் கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வைகோ தெரிவித்துள்ளார். இலங்கையின் வடபகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை உடன் திரும்பப்பெற வேண்டும் என சிறீலங்காவிற்கு அழுத்தம் கொடுக்க அந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்பட வேண்டுமெனவும் வைகோ தெரிவித்துள்ளார்.

பிரசல்ஸ் நகரில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய நாடாளுமன்ற மனித உரிமைகள் ஆணையகத்தின் உப கூட்டத்தொடரிலேயே வைகோ இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். ஈழத் தமிழர்களுக்கு சுயாட்சி கிடைக்கப்பெற வேண்டும் என மேற்குலகம் உள்ளிட்ட சர்வதேச சமூகம் வலியுறுத்தி வரும் நிலையில், வைகோவின் இந்த நடவடிக்கையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, சூடானிலிருந்து தென் சூடானை தனி நாடாகப் பிரிப்பதற்கு அண்மையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது தனிநாடாகப் பிரிந்துள்ளது தெரிந்ததே. அத்துடன், இந்திய தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர் வைகோ முன்வைத்துள்ள இந்தக் கோரிக்கை குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் கவனம் திரும்பியுள்ளதை அறியமுடிகின்றது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இம்மாதம் 27ம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஐரோப்பிய நாடாளுமன்ற மனித உரிமைகள் ஆணையகத்தில் இவ்வாறானதொரு விடயம் குறித்துப் பேசப்பட்டுள்ளமை சர்வதேசத்தின் கவனத்தை முழுமையாகத் தமிழர்களின் பக்கம் திருப்பியுள்ளது என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதேவேளை, ஐரோப்பிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை குறித்து சிறீலங்கா அரசு தனது இராஜதந்திரிகளின் ஊடாக முக்கியமான தகவல்களை அறிந்து வருகின்றது என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 10வது நாளாகத் தொடரும் நடைபயணம்

*நீதிகோரி பெல்ஜியத்திலிருந்து ஜெனீவா வரை கடந்த 5ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நடைபயணம் இன்று செவ்வாய்க்கிழமை 10வது நாளாக பனிபடர்ந்த வீதி வழியே கடும் குளிருக்கும் மத்தியில் லக்சம்பேர்க்கை கடந்து ஜேர்மனி நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. நடைபயணம் மேற்கொள்பவர்களை ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் லக்சம்பேர்க் நாடுகளில் வாழும் தமிழ்மக்கள் வரவேற்பளித்து அவர்களுக்கு சூடான நீராகாரங்கள் மற்றும் உணவு வகைகளையும் வழங்கி வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். குறிப்பாக பிரித்தானியாவிலிருந்து வாகனத்தில் வருகை தந்த மக்கள் உற்சாகமளிக்கும் விதமாக தாமும் இணைந்து நடந்தனர்.*




*மற்றும் இலண்டன், பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளில் இருந்து தொலைபேசி ஊடாக நடைபயணத்திற்கான தங்களது தார்மீக ஆதரவையும் வாழ்த்துகளையும் மக்கள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் மார்ச் மாதம் 5ம் திகதி ஜெனீவாவைச் சென்றடையும் இந்த நடைபயணத்தின் இறுதியில் பெரும் எழுச்சிப்பேரணி ஒன்றுகூடல் ஐ.நா. மனித உரிமைகள் அவையின் முன் நடைபெறவுள்ளதும் இதற்காக பிரான்சில் இருந்து முதற் தடவையாக தொடருந்துப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.*

# 28 மாதச் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரபல தமிழ் வர்த்தகர் கொழும்பில் கடத்தல்!

கொழும்பின் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவர் கடந்த 11ம் திகதி சனிக்கிழமை பிற்பகலில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார். வெள்ளவத்தையில் உள்ள அவரது வீட்டின் முன்பாகப் பட்டப்பகலில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தால் கொழும்பில் பரபரப்பு ஏற்பட்டது. 7 பேர் கொண்ட கும்பல் ஒன்றே இந்தக் கடத்தலில் ஈடுபட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. மின் உபகரண வர்த்தகரான இராமசாமி பிரபாகரன் (37) என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார். வெள்ளவத்தை பெனிக்குயிக் வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டின் முன்பாக நின்றிருந்த போது அவர் கடத்தப்பட்டார் என்று காவல்துறையினர் கூறுகின்றனர். பதுளையைச் சேர்ந்தவரான பிரபாகரன் கொழும்பை மையமாகக் கொண்டு வணிகம் செய்து வந்தார். அவரது செல்பேசிக்கு அழைப்பு எடுத்தால் யாரும் பதிலளிக்காமல் இருப்பதாக அவரது நண்பர்கள் தெரிவித்தனர்.

பிரபாகரன் ஏற்கனவே படையினரால் கைது செய்யப்பட்டு 28 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி விடுவிக்கப்பட்டிருந்தார். தன்னைத் தேவையற்றுத் தடுத்து வைத்திருந்தமைக்காக 10 கோடி ரூபா இழப்பீடு கேட்டு உயர் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு இன்னும் நிலுவையில் உள்ளது. இந்த நிலையிலேயே அவர் கடத்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியில் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். எனினும் விசாரணையின் பின்னர் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும் சுமத்தப்படவில்லை. இந்தச் சதி முயற்சியில் ஈடுபட்டிருந்தார் எனக் கூறப்பட்டுக் கைது செய்யப்பட்டவரும் பிரபாகரனின் நண்பருமான இராணுவ அதிகாரி ஒருவர் இன்னமும் தடுப்புக் காவலில் உள்ளார்.

இதேவேளை, கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும் இதுவரை கடத்தல் தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் சிறீலங்கா காவல்துறைப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். கடத்தலுக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

### முதலில் அரசாங்கத்திற்குள் இணக்கப்பாடு தேவை

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைப்பதற்கு முதல் அரசாங்கத்தின் தெளிவான நிலையை அறிந்து கொள்ள தெரிவுக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். எதிர்கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள அனைத்து கட்சிகளையும் ஒரு இணக்கப்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியது அவசியம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### ஈராக்கில் சிறீலங்காத் தூதரகம்

ஈராக்கில் இருந்த சிறீலங்காத் தூதரகத்தை உடனடியாக மீண்டும் திறக்குமாறு வெளிவிவகார அமைச்சை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

### மாதகல் இராணுவ வசமாகி 20 வருசம்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்குடாவில் உள்ள மாதகலை 1992ம் ஆண்டு சிறீலங்கா இராணுவத்தினர் கைப்பற்றினர். அன்று முதல் இப்போது வரை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே அந்த கிராமம் உள்ளது என்று அங்கு நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய டக்ளஸ் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

### கொழும்பு சென்றவர் காணாமல் போனார்

வியாபார நோக்கத்திற்காக கொழும்பு சென்ற, மாங்குளம் நபரொருவர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மாங்குளம் ஒலுமடுவைச் சேர்ந்த தில்லைநடராசா கந்தசாமி (37) என்பவரே மேற்படி காணாமல் போயுள்ளவராவார். கடந்த டிசம்பர் மாதம் 25ம் திகதி தனது வியாபார நோக்கத்திற்காக மாங்குளத்திலிருந்து வவுனியா ஊடாக கொழும்பு சென்ற குறித்த நபரிடமிருந்து இதுவரை குடும்பத்தாருடன் எதுவித தொடர்பும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உறவினர்கள் மற்றும் நண்பர்களின் இல்லங்களில் தேடியும் அவரின் தொடர்பு இல்லாமையை அடுத்து குறித்த நபரின் தாயாரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### இலங்கையில் 45 ஆயிரம் போதைப்பொருள் பாவனையாளர்!

நாள் தோறும் இலங்கையில் சுமார் இரண்டு கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பயன்படுத்தப்படுவதாக சிறீலங்கா தேசிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவுதெரிவித்துள்ளது. தேசிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு நாடு தழுவிய ரீதியில் ஆய்வு ஒன்றை நடாத்தியுள்ளது. நாட்டில் சுமார் 45 ஆயிரம் ஹெரோயின் போதைப் பொருள் பாவனையாளர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வருடாந்தம் 763 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. கொழும்பில் சுமார் 350 ஹெரோயின் விநியோகஸ்தர்கள் இயங்கி வருவதாகவும் இதில் 45 பேர் மொத்த வியாபாரிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதுதான் நாடு இந்த தள்ளாட்டம் தள்ளாடுதுபோல.

### கர்நாடகத்தில் முத்துக்குமார் நிகழ்வு

தமிழினத்தின் விடியலுக்காக தான் தேகத்தையே மெழுகென உருக்கிய ஈக தீபம் முத்துக்குமாரின் நினைவை ஏந்தும் நிகழ்வு கர்நாடக மாநிலம் பெங்களூரில் கடந்த 5ம் திகதி நடைபெற்றது. கர்நாடக மாநில தமிழர்களின் குரல் சார்பாக திரு கு.கணேசன் அவர்களால் பேன்சன் டவுன் ஐஎஸ்ஓ அரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் ‘உச்சிதனை முகர்ந்தால்’ இயக்குனர் திரு புகழேந்தி தங்கராஜ் அவர்கள் கலந்து கொண்டு போற்றுதல் உரை நிகழ்த்தினார். உணர்வுகளின் சங்கமமாய் உருகி ஓடிய இந்நிகழ்வில் தமிழ் திரு புலவர் பாவிசைக்கோ, பேராசிரியர் ராமமூர்த்தி, பேராசிரியர் டி.சி பிரகாசு, திரு கு,கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஒட்டுக்குழுவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை

நாட்டில் தற்போது எந்தப்பிரச்சினையும் இல்லை நமக்கென்று ஓர் அரசியல் அதிகாரம் உள்ளது. அதற்காக காணி அதிகாரம், காவல்துறை அதிகாரம் நமக்கு எதற்குத் தேவை? என மகிந்தவின் ஒட்டுக்குழுப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் இளைஞர் யுவதிகளுக்கான துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### 9 வயது சிறுமி மீது குடும்பஸ்தர் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் செல்பேசிக்கு சார்ச் போடச்சென்ற 9 வயது சிறுமியை குடும்பஸ்தர் ஒருவர் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பக்கத்து வீட்டிற்கு செல்பேசிக்கு சார்ச் செய்வதற்கு சிறுமி சென்றபோது அங்கிருந்த 38 வயதுடைய திருமணமான குடும்பஸ்தர் குறித்த சிறுமியுடன் தகாத முறையில் நடக்க முயன்றுள்ளார். இதனையடுத்து, குறித்த சிறுமியின் தாயாரால் கெடுக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமியை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக ஒப்படைக்கு

08ம் பக்கம் பார்க்க

# சீனாவிற்கு மாறிய சிறீலங்காவின் போக்குவரத்து

## இந்தியா அதிர்ச்சியில்


பாவனையில் உள்ள இந்தியத் தயாரிப்பு அசோக் லேலாண்ட் பேருந்துகள்.

சிறீலங்காவின் போக்குவரத்துச் சேவையில் (இ.போ.ச.) எப்போதும் இந்தியாவின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான இந்துஜா குழுமத்தின் பிரதான அங்கமான ‘அசோக் லேலாண்ட் (Ashok leyland)’ பேருந்துகளே மிகவும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த பல தசாப்தங்களாக இந்த வகைப் பேருந்துகளையே சிறீலங்கா பயன்படுத்தி வந்தது. ஆனால் தற்போது பேருந்து சேவைக்காக முதல் தடவையாக சீனாவில் இருந்து பேருந்துகளை இறக்கத் தொடங்கியுள்ளது. கடந்த வாரம் சீனாவில் இருந்து ஒரு தொகுதி பேருந்துகள் கொழும்பை வந்தடைந்துள்ளன. சிறீலங்கா சீனாவின் பக்கம் சாய்ந்துவருவதாக செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில், இந்தியாவைக் கைவிட்டு பேருந்துகளைக் கொள்வனவு செய்வதிலும் சீனாவைச் சார்ந்துவிட்டது இந்தியாவிற்கு கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

தலைநகருக்குள் வரும் பெருமளவு வாகனங்களைத் தடுப்பதற்கும், மக்களுக்கு சுகமான பயணத்திற்காகவும் இந்தப் பேருந்துகளை இறக்குமதி செய்துள்ளதாக சிறீலங்கா தரப்பு கூறுகின்றது.

கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளில் மட்டும் சுமார் 8000 பேருந்துகளை இந்தியாவின் அசோக் லேலாண்ட்



வந்திறங்கியுள்ள சீனப் பேருந்துகள்

நிறுவனத்திடம் இருந்து சிறீலங்கா கொள்வனவு செய்திருந்தது. அதாவது நாள் ஒன்றுக்கு சுமார் மூன்று பேருந்துகளை சிறீலங்கா வாங்கியிருக்கின்றது. ஆனால், தற்போது சீனாவைச் சார்ந்துவிட்டதால் இந்தப் பேருந்துகளின் கொள்வனவு மட்டுமல்ல ஏனைய பல வாகனங்களின் கொள்வனவும் சீனாவைச் சென்றடையப் போவதாக கருதப்படுகின்றது. இதனால் இந்திய நிறுவனம் தனது இலாபத்தில் பெரும் பங்கை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு யூலை முதல் செப்டெம்பர் வரையான காலப் பகுதியில் வாகன விற்பனையில் வழமையான விற்பனையை விட 29 வீதம் அதிகமான விற்பனைச் செய்திருந்த அசோக் லேலாண்ட் கடந்த ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையான காலாண்டுகளில் 6.9 வீதம் விற்பனை சரிவடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதுஇவ்வாறிருக்க, சிறீலங்காவுடனான இந்தியாவின் வர்த்தகம் (ஏற்றுமதி - இறக்குமதி) இதுவரையில்லாத அளவுக்கு 70 சதவீதம் அதிகரித்து 500 கோடி டொலராக (25,000 கோடி இந்திய ரூபா) அதிகரித்துள்ளது என சிறீலங்காவிற்கான இந்திய தூதர் அசோக் கே காந்தா கூறியுள்ளார். இலங்கையில் கடந்த மாதம் 26ம் திகதி நடந்த 63வது இந்திய குடியரசு தின விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், இலங்கையில் இந்திய தொழில் நிறுவனங்கள் சுமார் 10 கோடி டொலர் மதிப்புக்கு முதலீடு மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

நிலைமை இவ்வாறிருக்க, புத்தளம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தினை சிறீலங்கா அரசாங்கம் சீனாவிற்கு விற்பனை செய்ய முனைவதாக தகவல்கள் கசிந்துள்ளன. இந்தநிலையில் இவ்விடயம் குறித்து பொருளாதார அபிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவிடம் கடந்த 31ம் திகதி அலரி மாளிகையில் வைத்து செய்தியாளர்கள் வினவியபோது, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை சீனாவிற்கு விற்பனை செய்யும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் நிர்வாகப் பொறுப்புக்களை சீனாவிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளோம். இது தொடர்பில் தற்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறோம். எனவே விரைவில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

# என்ன முரண்!



சிறீலங்காவின் மத்திய வங்கி மீது 1996ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் கடுமையாகச் சேதமடைந்தது. சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாடுகளையும் உடைத்துக்கொண்டு கொழும்பு ஜம்பட்டா வீதியிலிருந்து வெடி பொருட்களுடன் புறப்பட்ட மணல் ஏற்றிய பாரவண்டியுடன் மத்திய வங்கியுள் புகுந்த கரும்புலிகள் குண்டுகளை வெடிக்க செய்திருந்தனர் என சிறீலங்காவில் அப்போது ஆட்சியில் இருந்த சந்திரிகா அரசு குற்றம்சாட்டியது. தாக்குதலில் மத்திய வங்கி கட்டடம் முழுமையாக சேதமடைந்தது. இவ் வழக்கில் தமிழீழ தேசிய தலைவர் மற்றும் தளபதிகள் சிலருக்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்து சிறீலங்கா உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அபயபிட்டிய தீர்பளித்திருந்திருந்தார். இவை எல்லோருக்கும் தெரிந்ததுதான். இனித்தான் விடயம் இருக்கின்றது. இந்தத் தாக்குதலில் சேதமடைந்த கட்டத்தின் ஒரு பகுதியை சிறீலங்கா இன்றும் திருத்தியமைக்காமால் அப்படியே வைத்திருக்கின்றது. பயங்கரவாதத் தாக்குதலின் அடையாளச் சின்னம் எனக்கூறி அதனை பாதுகாத்து வருகின்றது. ஆனால், யாழ்ப்பாணத்தில் தங்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட ஆசியாவின் மிகப்பெரும் நூல் நிலையத்தை தங்கள் கூலிக் குழுக்களைக்கொண்டு திருத்தியமைத்து தங்களின் கொடூரத்தின் அடையாளத்தை மறைத்துவிட்டார்கள்.



# தமிழ் மக்களின் விடிவிற்கா? பொன்சேகாவின் விடுதலைக்கா?

## போர்க்குற்ற விசாரணை அழுத்தங்கள்

இதயச்சந்திரன்

ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 19 வது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்று கொண்டுவரப் படுமென மத்திய மற்றும் தெற்காசியப் பிராந் தியத்திற்கான அமெரிக்க உதவி இராஜாங் கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் கூறிய தாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசு எத்தகைய உறுதி மொழி களை வழங்கினாலும், தீர்மானம் முன் வைக்கப்படுமென தமிழ்த் தேசியக் கூட்ட மைப்போடு நடாத்திய பேச்சுவார்த்தையில், றொபேர்ட் பிளேக்கும், மரியா ஓட்ரோவும் கூறிய விடயத்தில், கூட்டமைப்பின் கருத் தினைக்கூட அவர்கள் இருவரும் பரிசீலிக்க விரும்பவில்லையென்பது தெளிவாகிறது.

கூட்டமைப்போடு இது குறித்துப் பேசிப் பயனில்லை என்று அமெரிக்கப் பிரதி நிதிகள் தெரிவித்ததாகவும் தகவல்கள் உண்டு.

இதுதான் தமிழ் மக்கள் விரும்பும் அரசியல் தீர்வு என்பதனை அமெரிக்கத் தரப்பினரிடம் கூட்டமைப்பினர் உறுதிபடத் தெரிவித்திருக்க வேண்டும்.

அவ்வாறு தெளிவானதொரு அரசியல் நிலைப்பாட்டினை முன்வைக்காமல் பின்னடிப்பதாக விமர்சனங்கள் எழுவதை அண்மைக்காலமாகக் காணலாம்.

இருப்பினும் ஸ்டீபன் ராப், றொபேர்ட் ஓ பிளேக், மரியா ஓட்டோரோ போன்ற அமெ ரிக்க அரசின் உயர்மட்ட பிரதிநிதிகளின் பயண நிகழ்ச்சி நிரலில், நிரந்தரத் தீர்வு குறித்த விவகாரம் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மனித உரிமைப் பேரவையில், இலங் கைக்கு எதிரான தீர்மானமொன்றினை மேற் குலக அணியினர் கொண்டுவந்தாலும், நல்லிணக்க ஆணைக்குழுவில் கூறப்பட் டுள்ள பரிந்துரைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதாகவே அது அமையு மென அமெரிக்க பிரதிநிதிகள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள்.

இந்நிலையில், பாதுகாப்புச் சபை மற்றும் மனித உரிமைப் பேரவையை ஆட்டிப் படைக்கும் வல்லரசாளர்கள், சுயாதீன சர்வதேச போர்க்குற்ற விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்கிற தீர் மானத்தை முன்மொழியுமா என்ற சந்தேகம் எழுகிறது.

இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழு வெளியிட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற தீர் மானத்திற்கு, பேரவையிலுள்ள 47 நாடுக ளில் பெரும்பான்மையானவை ஆதரவு வழங்கும் வாய்ப்புண்டு.

அதேவேளை ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சுயாதீன போர்க்குற்ற விசாரணை ஒன்று நடாத்தப்பட வேண்டு மென்கிற தீர்மானத்தை முன்வைத்தால் சீனா. இரஷ்யா மற்றும இந்தியா சார்பு நாடுகள் அதனைப் பலமாக எதிர்க்கும் நிலை தோன்றும்.

அதற்கான அணிதிரட்டலில், வெளி நாட்டு அமைச்சர் ஜீ.எல். பீரிசின் தலை மையில் ஆபிரிக்காவிற்கும் கிழக்கு ஆசியா விற்கும் பல குழுக்கள் சென்றுள்ளதாக செய்திகள் வருகின்றன.

பிரிக்ஸ் (BRICS) எனப்படும் பிரேசில், இரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னா பிரிக்கா என்கிற வளர்ச்சியுறும் பெருண்மிய ஆதிக்க நாடுகளின் ஆதரவைக்கொண்டு, மேற்குலகின் வியூகத்தை இலகுவாக உடைத்து விடலாமென அமைச்சர் டி.யூ.குணசேகரா அண்மையில் தெரிவித்த கருத்து, நோக்கப் பட வேண்டிய தொன்றாகும்.

புவிசார் அரசியலில், மாறிவரும் உலக ஒழுங்கு, ஒடுக்கப்படும் தேசிய இனங்க ளின் விடுதலைப் போராட்டங்களிற்கு சாத கமாக அமைவது போல் தெரியவில்லை.

தேசிய இனப் பிரச்சினையை தமது பிராந்திய, பூகோள நலன்களை அடைவதற் கானஅழுத்தக் கருவியாக இவ் வல்லரசு கள் பயன்படுத்துவதை மனித உரிமைப் பேரவையில் காணலாம்.

சிரியாவிற் கெதிராக அரபு லீக்கின் துணையோடு, பாதுகாப்புப் பேரவையில் தீர்மானமொன்று முன்வைகப் பட்டபோது, சீனாவும், இரஷ்யாவும் தமது வீட்டோ என்கிற இராமபாணத்தை ஏவி, அதனை முறியடித்தன.

பேரவையின் 15 உறுப்பு நாடுகளில், இந்தியா உட்பட 13 நாடுகள் சிரியாவிற் கெதிரான தீர்மானத்திற்கு ஆதரவளித்தாலும் அத்தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கை விவகாரத்திலு, இதே வித மான மோதல் நிலைமை, வேறு பரிமாணத் தில் காணப்படுகிறது.

இங்கு மேற்குலகம் – இந்தியா என்ற வழுவழுத்த உறவுநிலை, இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்படுகிறது.

இலங்கை மீது மேற்குலகம் அழுத்தம் கொடுக்கும் போது, அதிலிருந்து விடுபட, தன்னாலான உதவிகளைச் செய்ய முடியு மென்கிற செய்தியைக் கூறியவாறு, மகிந்த அரசோடு நெருங்க முயல்கிறது இந்தியா.

இக் கருத்தியலின் அடிப்படையில், சுயாதீன சர்வதேச விசாரணை என்கிற இலங்கை உடனான உறவு முறிவு நிலைப் போக்கினை மேற்குலகம் மேற்கொண்டால், நிச்சயம் அதனை இந்தியா எதிர்க்கும்.

**இலங்கை மீது மேற்குலகம் அழுத்தம் கொடுக்கும் போது, அதிலிருந்து விடுபட, தன்னாலான உதவிகளைச் செய்ய முடியுமென்கிற செய்தியைக் கூறியவாறு, மகிந்த அரசோடு நெருங்க முயல்கிறது இந்தியா. இக் கருத்தியலின் அடிப்படையில், சுயாதீன சர்வதேச விசாரணை என்கிற இலங்கை உடனான உறவு முறிவு நிலைப் போக்கினை மேற்குலகம் மேற்கொண்டால், நிச்சயம் அதனை இந்தியா எதிர்க்கும்.**

ஆகவேதான், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டு மென்கிற அழுத்தத்தைக் கொடுக்க, மேற்குலகம் முயற்சிக்கிறதெனாலாம்.

இதனூடாக இலங்கை அரசின் மீது சர்வதேச நெருக்கடியை உருவாக்கி, ஆட்சி மாற்ற மொன்றினை ஏற்படுத்த மேற்குலகம் விரும்புகிறது.

ஏற்கனவே அமெரிக்கா மற்றும் ஐரோப் பாவில் உருவாகியுள்ள கடன் நெருக்கடி, ஏனைய உலக நாடுகளிலும் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்து வதைக் காண்கிறோம்.

ஈரான் மீதான மேற்குலகின் பொருளா தாரத் தடை நகர்வால், இலங்கையில் பெற் றோலிய பொருட்களின் விலை உயர்ந்துள் ளது.

நாட்டின் கடன் தொகை அதிகரிப்பதால், கடன் பெறும் அளவை 200 மில்லியன் டொலர்களால் அதிகரிக்குமாறு பாகிஸ்தானு டன் ஒப்பந்த மொன்றில் கைச் சாத்திட் டுள்ளார். இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அஜீத் நிவாட் கப்ரால்.

தேவையில்லையென்று அடம் பிடித்த, சர்வதேச நாணய நிதியத்தின் எட்டாவது தவணைக் கொடுப்பனவான 800 மில்லி யன் அமெரிக்க டொலர்களைத் தருமாறு கெஞ்சுகிறது இலங்கை அரசு.

அத்தோடு யாழ்ப்பாணம் செழிப்புறுகிறது என்று, என்னதான் கண்காட்சிகளை அரசு நடத்தினாலும், மக்கள் மீது செலுத்தப்படும் வரிச்சுமை குறைவடையவில்லை.

இதற்கெதிராக மக்களை அணிதிரட்டிப் போராடும் ஆளுமை இரணில் விக்கிரமசிங் காவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை என்கிற யதார்த்தத்தையும் மேற்குலகம் புரிந்து கொள்கிறது.

ஆகவே விடுதலைப் புலிகளை யுத்தத் தில் வெற்றி கொண்ட மகிந்த அரசு மீதான பெரும்பான்மை சிங்கள மக்களின் பேரா தரவு பலமாக இருப்பதால், அதே யுத் தத்தை வழிநடத்திய சரத்பொன்சேகாவி னால் மட்டுமே, மகிந்தவிற்கு எதிரான மாற்று அரசியலை முன்னெடுக்க முடியு மென மேற்குலகம் கருதுவதை நோக்கலாம்.

ஏற்கனவே ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகா தோல்வியுற்ற நிலையில், இரண்டாவது தடவையாக அவரை கள மிறக்கும் முயற்சியைத் தவிர வேறு தெரிவு இருப்பதாக தெரியவில்லை.

ஆனால், போர்க்குற்ற விசாரணை என் கிற அஸ்திரத்தைப் பயன்படுத்தி, சிறை யிலிருக்கும் பொன்சேகாவை வெளியில் கொண்டுவர முடியுமாவென்று முயற்சித்துப் பார்க்கிறது மேற்குலகம்.

இந்த வியூகத்தை முறியடிப்பதற்காகவே, மன்னிப்புக் கோரினால் விடுதலை செய் வோமென, பல தூதுவர்களை அனோமா பொன்சேகாவிடம் அரசு அனுப்பிக் கொண் டிருக்கிறது.

மன்னிப்புக் கேட்டு அடிபணிந்து சென் றால், அதனையே பெரும் பரபரப்பாக மாற்றி விடலாமென்று மகிந்தர் எண்ணியிருந்தார்.

ஆனாலும், மன்னிப்புக் கோராமலே, அவரை வெளியில் கொண்டுவரும் வழி வகைகள் எம்மிடம் உண்டென மகிந்த எதிர்ப்பு வல்லரசாளர்கள் சத்தியம் செய்த தால், அத்தகைய சரணடைவுப் பாதையை அனோமா கொம்பனி கைவிட்டு விட்டார் கள் போல் தெரிகிறது.

ஆகவே தமிழ் மக்களைவிட, அனோமா பொன்சேகா குழுவினரே மனிதஉரிமைப் பேரவையின் கூட்டத் தொடரை உன்னிப் பாக அவதானிப்பார்கள் என்று நம்பலாம்.

இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது ஓரிரு தினங்கள் பின்பாகவோ சரத்பொன்சேகா விடுதலை செய்யப்பட் டால். மேற்குலகின் தீர்மானங்கள், ஐ.நா மனித உரிமைப் பேரவையில் கைவிடப் படும்.

கடை வாடகைக்கு

La Courneuve Metro வில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் சகல வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய 40 M2 விஸ்தீரணமுள்ள கடையும், 30 M2 விஸ்தீரணமுள்ள வீடும் வாடகைக்கு உள்ளது. வாடகை 850€

10 M முகப்பில் கண்ணாடி மற்றும் rédeau métallique புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் lavabo + Wc+ douche உள்ளது.

தொடர்புகளுக்கு 06 59 79 68 83

மணமகன் / மணமகள் தேவை

பிரான்சில் வதிவிட அனுமதி உள்ள 44 வயதுடைய பெண்ணுக்கு மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தற்பொழுது இந்தியாவில் வசித்துவரும் 54 வயதுடைய மணமகனுக்கு உறவினர்கள் மணமகளைத் தேடுகின்றனர். மறுமணம் முடிப்பதற்கும் பெற்றோர் சம்மதம் தெரிவித்துள்ளனர். புலம் பெயர்வாழ் பெண் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு 06 63 35 70 30
(மாலை 18.00 மணிக்கு பின்னர்)

கடை BAILL விற்பனைக்கு

Lachapelle கடைத் தெருவில் 35 M2 விஸ்தீரணமுள்ள கடை Baill விற்பனைக்கு உள்ளது.
உடனேய திறக்கக்கூடிய வகையில் உள்ளது.

தொடர்புகளுக்கு
01 53 26 59 24
06 99 92 92 96

மாறும், சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதுவான் உத்தவிட்டுள்ளார். இக்குடும்பம் வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் வந்து குடியிருந்தவர்கள் என்பதோடு கணவன் இல்லாததால் தாயே பிள்ளைகளை கூலி வேலை செய்து கவனித்து வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

## சிறீலங்கா ஹொக்கி அணிக்கு எதிர்ப்பு – திரும்பி அனுப்பிவைப்பு!

பயிற்சிக்காக தமிழகம் சென்ற சிறீலங்கா ஹொக்கி அணியினருக்கு எதிராக நடைபெற்ற ஆர்பாட்டம் காரணமாக அவ் அணி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஹொக்கி பயிற்சி பெறுவதற்காக கடந்த 9ம் திகதி சிறீலங்கா ஹொக்கி அணி ஒன்று சென்னை எழும்பூர் விளையாட்டு திடலுக்கு சென்றுள்ளது. அதன்போது அவர்களுக்கு எதிராக தமிழர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இதன் காரணமாக பயிற்சி எடுக்க முடியாத நிலையில் குறித்த ஹொக்கி அணி திருப்பி அனுப்பட்டுள்ளது. இவ் எதிர்ப்பு ஆர்பாட்டத்தை நாம் தமிழர் மற்றும் தமிழர் எழுச்சி இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர். ஆர்பாட்டம் செய்த நூற்றுக்கணக்கானோர் காவற்றுறையினர் கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

## சவுதி சிறையில் இலங்கை பெண் தற்கொலை

சவுதி அரேபியாவின் மலாஸ் பெண்கள் சிறைச்சாலையில் கைதி ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக றியாத்திலுள்ள சிறீலங்காத் தூதரகம் தெரிவிததுள்ளது. ஒரு பெண்ணை கொலை கொலை செய்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு மலாஸ் பெண்கள் சிறையில் தடுப்புக் காவலில் இருந்த பெண்ணே மேற்படி தற்கொலை செய்து கொண்டவராவார். இவரது சடலத்தினை இலங்கைக்கு கொண்டுவருவது தொடர்பில் அவர்களின் குடும்பத்தினரின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக சிறீலங்காத் தூதரகம் தெரிவித்துள்ளது. இவரது விபரங்கள் வெளிவரவில்லை.

## விடுதலைப்போராட்டத்தில் சிறப்பான வரலாற்றுப்பதிவு 'தேன் கூடு'

போராட்ட வரலாற்றை தெரிவிக்கும் திரைக்காவியமான 'தேன் கூடு' திரைப்படம் முக்கிய பிரமுகர்களுக்காக 02.02.2012 அன்று பிரசாத் ஆய்வக திரையரங்கில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், நடிகரும் கவிஞருமான நோர்வே ஜெயபாலன், தோழர் தியாகு, இயக்குநர் கௌதமன், பெ.மணியரசன், முத்துக்குமார் ஆவணப்படம் எடுத்த தோழர் செல்வராஜ், புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பெரியார் திராவிடர்கழகம், காஞ்சி மக்கள் மன்றம் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் மற்றும் பல தமிழுணர்வாளர்கள் கலந்துகொண்டார்கள்.

## கொடிகாமத்தில் பாடசாலை மாணவி கடத்தல்!

யாழ். தென்மராட்சிப் பிரதேசத்தின் கொடிகாமம் பகுதியில் கெற்பேலி கிராமத்தில் ஆள் நடமாட்டம் குறைவான பகுதியில் வைத்து முச்சக்கர வண்டிகள் இரண்டில் வந்த இனம்தெரியாத நபர்களினால் கடந்த 10ம் திகதி மாலை 16 வயது பாடசாலை மாணவி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். பாடசாலையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு விட்டு வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த பாடசாலை மாணவி கடத்தல் தொடர்பாக கொடிகாமம் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்தக் கடத்தல் தொடர்பாக மாணவியின் தாயாரல் கொடிகாமம் சிறீலங்கா காவல் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. யாழ். தென்மராட்சியில் உள்ள கச்சாய் பாடசாலை ஒன்றில் கா.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 16 வயதுடைய மாணவியே கடத்தப்பட்டவராவர்.

## யாழிலிருந்து கண்டி சென்ற இளைஞன் சடலமாக மீட்பு

உறவினர் ஒருவரின் திருமண நிகழ்வுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு சென்ற இளைஞன் ஒருவர் கடந்த 11ம் திகதி சனிக்கிழமை மாலை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கோப்பாயைச் சேர்ந்த தர்மலிங்கம் சிவாதரன் என்ற 24 வயது இளைஞனே மேற்படி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த இளைஞனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக கண்டி போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இளைஞன் கொலை செய்யப்பட்டாரா? தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது தவறுதலாக கிணற்றில் விழுந்தாரா? என்பது குறித்து கண்டி காவற்றுறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெல்லாவெளியில் ஆணொருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீள்குடியேற்றப்பட்ட வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பலவத்தை கிராமத்திலுள்ள தோட்டமொன்றிலிருந்து ஆணொருவரின் சடலமொன்று இன்று காலை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. ஒல்லிமடுவாள் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.கணேசமூர்த்தி (54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. கிராம மக்கள் வழங்கிய தகவலையடுத்து இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கால்வாயிலிருந்து தமிழ் இளைஞரின் சடலம் மீட்பு

சிறீலங்காவின் வத்தளை, அலபடவத்தை, ஹெமில்டன் கால்வாயிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் கடந்த 8ம் திகதி காலையில் மீட்கப்பட்டுள்ளது. பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை என்ற முகவரியைக் கொண்ட 32 வயதுடைய ஜெயராம் மகேஸ்வரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம், மரண விசாரணைக்காக ராகமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவுக்குத் தகவல் வழங்கிய

## மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்கவும் சரவணபவனும்!

### – விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல் –



சிறீலங்கா அரச நிர்வாகத்தின் இரகசிய தகவல்களை வழங்கும் உளவாளியாக சிறீலங்கா இராணுவத்தின் சிரேஷ்ட தளபதியான மேஜர் ஜெனரல் ஒருவர் அமெரிக்காவிற்கு தகவல் வழங்கியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. முன்னாள் இராணுவப் பேச்சாளரும், இராணுவ ஊடகப் பிரிவின் பணியாளருமான மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க சில முக்கியமான தகவல்களை அமெரிக்காவிற்கு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதான சமிக்ஞை அதிகாரியாகவும், பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி மற்றும் ஆய்வு பிரிவின் பொறுப்பதிகாரியாகவும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மூன்று படையணிகளின் கட்டளைத் தளபதி



யாகவும் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க கடமையாற்றியுள்ளார். அரசியல் கடத்தல்கள் மற்றும் கப்பம் கோரல்கள் என்ற தலைப்பில் இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் ராஜபக்ச நிர்வாகத்தின் இரகசிய தகவல்களை வழங்கும் உளவாளியாக பிரசாத் சமரசிங்க கடமையாற்றினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தூதரகத்தின் ஜேம்ஸ் டி.மூர் என்ற அதிகாரியினால் இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவுக்கு தகவல் வழங்குகின்றவர்களில் ஒருவராக உதயன் மற்றும் சுடர்ஒளி ஆகிய பத்திரிகைகளின் உரிமையாளரும் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஈஸ்வரபாதம் சரவணபவன் செயல்பட்டு இருக்கின்றமை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து 2006ம் ஆண்டு யூன் 26ம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்துள்ளதை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

மகிந்த ராஜபக்சவுக்கும், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நல்லெண்ண தூதுவராக 2006ம் ஆண்டின் யூன் மாத இறுதியில் ஈஸ்வரபாதம் சரவணபவன் செயல்பட்டு இருக்கின்றார். மகிந்த ராஜபக்சவின் செய்தியை தமிழ்ச்செல்வனுக்கு அனுப்பி இருக்கின்றார். தமிழ்ச்செல்வன் இச்செய்திக்கு மின்னஞ்சல் மூலம் சரவணபவனுக்கு பதில் கொடுத்திருந்தார். ஆனால் தமிழ்ச்செல்வனால் அனுப்பப்பட்ட மின்னஞ்சலை மகிந்த ராஜபக்சவுக்கு காண்பிக்கின்றமைக்கு முன்பாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு 2006ம் ஆண்டு யூன் 26ம் திகதி காண்பித்து இருக்கின்றார் சரவணபவன். ஜனாதிபதி மகிந்தருக்கு தமிழ்ச்செல்வனின் பதிலை இன்னமும் அனுப்பவில்லை என்றும் தூதரக அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்திருப்பதாக அந்தக் கேபிள் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உதயன் பத்திரிகை மீது சிறீலங்காக் கடற்படையினரும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என பசில் ராஜபக்ச கூறியுள்ளார். 2006ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ம் திகதி நடந்த இந்தச் சந்திப்புக் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக்கினால் அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய தகவல் குறிப்பிலேயே இவ்விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான உதயன் பத்திரிகையை ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் கடற்படையினரும், ஈ.பி.டி.பி.யினரும் தீயிட்டுக் கொளுத்தியிருக்கலாம் என பசில் ராஜபக்ச சந்தேகம் வெளியிட்டுள்ளார். இலங்கையின் தற்போதைய பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகிய தரப்பினர் ஆயுதங்களை பேணி வரலாம் என பசில் ராஜபக்ச கூறியுள்ளார். இவ்விரு அமைப்புக்களது உறுப்பினர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறு அரசு ஏற்கனவே கோரியுள்ளதாகப் பசில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். இவ்விரு அமைப்புகளது உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு கருணாவும், டக்ளஸ் தேவானந்தாவுமே பொறுப்பு என்பதனை பசில் ராஜபக்ச தெளிவுபடுத்தி உள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறீலங்காவின் அடிமைத் தமிழ்க் கூலிக்குழுக்கள் பற்றியும் விக்கிலீக்ஸ் தகவல்களை வெளியிட்டுள்ளது. டக்ளஸ் தேவானந்தா மற்றும் கருணா குழுவினர் ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்று நம்புவதாக அமைச்சர் பசில் ராஜபக்ச அமெரிக்காவிடம் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. 2006ம் ஆண்டு ஒக்டோபர் 4ம் திகதி முன்னாள் அமரிக்க தூதுவர் ரொபட் ஓ பிளெக் பசில் ராஜபக்சவை சந்தித்தபோது இந்த தகவல் பரிமாறப்பட்டுள்ளது. இதனை ரொபட் ஒ பிளேக் அமரிக்க ராஜாங்க திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார். இந்த நிலையில் தங்களது உறுப்பினர்களை தாமே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும் என்று அரசாங்கம் டக்ளசிடமும் கருணாவிடம் கோரியுள்ளதாக பசில் குறிப்பிட்டுள்ளார். 2006ம் ஆண்டு செப்டம்பர் 29ம் திகதியன்று கருணா குழுவின் உறுப்பினர் ஒருவர் கொழும்பில் உள்ள வர்த்தகர்களை கடத்தி கப்பம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டார். அதனை தொடர்ந்து அவரின் சகாக்களான 13 பேரும் கைதுசெய்யப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் வர்த்தகர்களை கடத்தி கப்பம் பெறுவதாக வதந்திகள் பரவியபோதும் கருணா குழுவினரே உள்ளூர் குழுக்களுடன் இணைந்து இவ்வாறான விடயத்தில் ஈடுபட்டு வருவதாக பசில் ராஜபக்ச ரொபட் ஒ பிளெக்கிடம் குறிபிட்டதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

# ஒஸ்லோவிலிருந்து வன்னிக்கு வந்த கோரிக்கை

## சேரமான்

## தந்திரிகளின் மறுமுகம் - 42

சேரமானின் இந்தத் தொடர் கட்டுரைக்கு இதில் பெயர்குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவித்து தங்களது மறுப்பை எழுத்துமூலமாகத் தருவார்களானால் அதனைப் பிரசுரிப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

[ஆ-ர்]

**போர்** நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கான முன்னோடி முயற்சியாகவும், அமெரிக்காவுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடனும், 24.12.2008 அன்று இராசரீக மொழியில் நத்தார் – புத்தாண்டு நல்வாழ்த்துச் செய்தியொன்றை அமெரிக்க பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் ஜேம்ஸ் கிளாட் அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்தமை பற்றி எமது கடந்த தொடரில் பார்த்திருந்தோம். இதற்கான அதிகாரபூர்வப் பதிலை ஏறத்தாழ ஒரு வாரத்திற்குப் பின்னர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கு கிளாட் அவர்கள் அனுப்பி வைத்த பொழுதும், அதற்கு முன்னர் சிறியதொரு குறிப்பொன்றை அனுப்புவதற்கு அவர் தவறவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அனுப்பிய நல்லெண்ணச் செய்திக்கு நன்றிகூறும் வகையில் 26.12.2008 அன்று ஜேம்ஸ் கிளாட் அவர்களால் எழுதப்பட்ட அச் சிறுகுறிப்பு பின்வருமாறு அமைந்திருந்தது:

**"அன்புள்ள திரு.நடேசன் அவர்களுக்கு,**

**உங்கள் செய்திக்கு நன்றி. புத்தாண்டுக்குப் பின்னர் மீண்டும் எமது தொடர்பாடல்களை ஆரம்பிப்போம்.**

**உங்கள் உண்மையுள்ள**
**ஜே.சி.சி"**

கிளாட் அவர்களின் சிறுகுறிப்பு வன்னியை சென்றடைந்த அதேநேரத்தில் நோர்வேயிலிருந்து பிறிதொரு செய்தியொன்று வன்னியை சென்றடைந்திருந்தது. உருத்திரகுமாரனின் நெருங்கிய நண்பரும், கே.பியின் ஆலோசகர்களில் ஒருவராக விளங்கியவருமான ஒஸ்லோவில் வசிக்கும் பாஸ்கரன் என்பவராலேயே அச்செய்தி வன்னிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்த காலப் பகுதியில் நோர்வேயுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட உயர்மட்ட தொடர்பாடல்களில் கணிசமான தாக்கத்தை செலுத்தக்கூடிய ஒருவராகவே பாஸ்கரன் விளங்கியிருந்தார். ஒஸ்லோ வாழ் தமிழர்களின் வாக்கு வங்கியைப் பயன்படுத்தி நோர்வே அரசியலில் ஈடுபட்ட ஒருவர் என்ற வகையில் பாஸ்கரன் அவர்களுக்கு இருந்த தொடர்புகள் இவ்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தன எனக்கூறலாம். இதன் காரணமாக 2008ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்ததை தொடர்ந்து நோர்வேயுடனான நேரடிச் சந்திப்புக்களுக்கான வாய்ப்புக்கள் தடைப்பட்ட நிலையில், பாஸ்கரன் ஊடாக நோர்வேயுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்திகளைப் பரிமாறிக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தையாளர் பாத்திரத்தை வகிப்பதற்கு தளபதி சூசை, தளபதி சொர்ணம், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், அனைத்துலக தொடர்பகப் பொறுப்பாளர் வீ.மணிவண்ணன் ஆகியோர் வாயிலாக கே.பி வெளியிட்ட விருப்பத்தை ஏற்று அதற்கான நியமனத்தை மேற்கொள்வதற்கு தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தயக்கம் காட்டிய பின்புலத்திலும், கிளிநொச்சிக்கான சமர் உக்கிரமடைந்த நிலையிலுமே இச்செய்தியை வன்னிக்கு பாஸ்கரன் அவர்கள் அனுப்பி வைத்திருந்தார்.

நிரந்தர போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக வன்னியைத் தவிர வேறு எந்த வெளிநாட்டிலும் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கு நோர்வே தயாராக இருப்பதாகவும், ஆனால் அதிகாரம் பொருந்திய பிரதிநிதி ஒருவரை வெளிநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் நியமித்தால் ஒழிய அவ்வாறான சந்திப்பும், போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் சாத்தியப்படப் போவதில்லை என்பதே வன்னிக்கு பாஸ்கரன் அவர்கள் அனுப்பிய செய்தியின் சாராம்சமாக இருந்தது.

புலம்பெயர்வாழ் தமிழர்களின் தலைவராகவும், முடிவெடுக்கும் அதிகாரம்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரதிநிதியாகவும் உருத்திரகுமாரன் நியமிக்கப்படுவதில் டில்லி கொண்டிருந்த விருப்பத்தை ஏற்கனவே இந்திய இராசதந்திரிகளான எஸ்.பி.சிங், கிருஷ்ணன் ராஜன் போன்றோர் வெளியிட்டிருந்தாலும்கூட, அப்பொழுது இதனை ஈழத்தீவில் கேந்திர நலன்களைக் கொண்டிருந்த பிறிதொரு வல்லரசு நாட்டின் புலனாய்வு நிறுவனம் விரும்பவில்லை.

இது குறித்தும், உருத்திரகுமாரனின் டில்லிப் பயணத்தை தடுத்து நிறுத்துவதற்கு குறிப்பிட்ட வல்லரசுப் புலனாய்வு நிறுவனத்தின் அனுசரணையில் இயங்கிய உருத்திரகுமாரனின் உதவியாளரான வழுதி முற்பட்டமை தொடர்பான தகவல்களையும் ஏற்கனவே கடந்த தொடர்களில் நாம் வெளிக்கொணர்ந்தமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கக்கூடும். இதில் சுவாரசியமான விடயம் என்னவெனில், இந்தியாவின் வெளியக உளவு அமைப்பான 'றோ' நிறுவனத்துடன் முரண்பட்டிருந்த இதே வல்லரசுப் புலனாய்வு நிறுவனத்தின் மறைமுக ஆசீவாதத்துடனேயே தாய்லாந்தில் கே.பி அவர்களின் இருப்பு உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்புலத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவது தொடர்பான நோர்வேயின் நிலைப்பாடு என்று கூறப்பட்ட செய்தியை கே.பியின் ஆலோசகர்களில் ஒருவராக விளங்கியவரும், உருத்திரகுமாரனின் நெருங்கிய நண்பருமான பாஸ்கரன் அவர்கள் வன்னிக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இச்செய்தியின் இன்னுமொரு அம்சமாக ஆயுதங்களைக் கீழே போடுவதற்கான சமிக்ஞைகளை வெளியிடுவதன் ஊடாகவே போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு அனைத்துலக சமூகத்தின் ஆதரவை தமிழீழ விடுதலைப் புலிகள் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கருத்தையும் மிகவும் சூசகமான முறையில் பாஸ்கரன் அவர்கள் முன்வைத்திருந்தார். அதாவது ஆயுதக் களைவின் ஊடாக இந்தோனேசியாவின் பாண்ட் ஆசே மாநிலத்தில் 2005ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சமாதான உடன்படிக்கையைத் தழுவியே ஈழப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியே நோர்வே சிந்திப்பதாகவும், நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் அவர்களை மேற்கோள்காட்டி தனது செய்தியில் பிற்குறிப்பு ஒன்றையும் பாஸ்கரன் இணைத்திருந்தார்.

மூன்று பக்கங்களில், தமிழில் பாஸ்கரன் அவர்களால் எழுதப்பட்ட அச்செய்தியின் சில பகுதிகளை கீழே தருகின்றோம்:

"...அடுத்து முக்கியமாக தமிழர் தரப்பை தாம் எந்த சந்தர்ப்பத்திலும் சந்திக்க தயாராகவிப்பதாகவும், தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவிற்கு பின்னர் தமிழர் தரப்பு பிரதிநிதிகளை இலங்கை தவிர்ந்த வேறு எங்காவது சந்திப்பதற்கு பல தடவைகள் தாம் விருப்பம் தெரிவித்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து சாதகமான சமிக்ஞை தமக்கு கிடைக்கவில்லை என தெரிவித்தார். நேரடியான தொடர்பாடல்களை தொடர்ச்சியாக பேணுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிகள் யாரையாவது வெளிநாட்டில் (இலங்கை தவிர) எந்த இடத்திலும் தான் நேரில் சென்று சந்திக்கத் தயாராக விருப்பதாக உளவிருப்போடு தெரிவித்தார்.

தற்போது நடைபெறும் யுத்தத்தால் சமாதான நடவடிக்கைகள் யாவும் முடங்கிய நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டிய திரு.ஹன்சன் பௌவர், குறைந்த பட்சம் நேரடித் தகவல் பரிமாற்றத்திற்காக என்றாலும் விடுதலைப் புலிகள் யாரையாவது தமது பிரதிநிதியாக நியமிக்கும்படி வலியுறுத்திக் கூறினார். தொலைபேசி வழியாக தாம் வன்னியுடன் தொடர்பிலுள்ள போதிலும் நேரடித் தொடர்பு மிகமிக முக்கியமானது என்பதையே அவரது பேச்சு உணர்த்தி நின்றது.

அடுத்து அமெரிக்காவில் வரவிருக்கும் புதிய அரசை தாம் சந்திக்கவிருப்பதாக தெரிவித்த திரு.ஹன்சன் பௌவர் அவர்கள் இந்தியாவின் விருப்பத்திற்கு மாறாக இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா தனித்து முடிவெடுக்கும்? என தான் எண்ணவில்லை என தெரிவித்ததோடு, அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சு ஒரு வழியில் செல்லும் போது பாதுகாப்பு அமைச்சும் (பென்ரகன்) அதே வழியில் தான் செல்லும் என திட்டவட்டமாக கூறமுடியாது எனவும் தெரிவித்தார். இதே நிலைப்பாடு இந்தியாவிற்கும் பொருந்தும் எனவும் குறிப்பிட்டார்.

...பிற்குறிப்பு:

பொதுவாக திரு.ஹன்சன் பௌவர் அவர்களுடன் பணிபுரியும் பல பணியாளர்கள் தற்போது வெளிவிவகார அமைச்சின் வேறு பிரிவுகளில் பணிபுரிவதை அவதானிக்க முடிந்தது. சமாதான பேச்சுக்களுக்கான சாத்தியக்கூறுகள் தெரியாததால், இங்கையில் சமாதானம் தொடர்பாக ஒரு மந்த நிலை தென்படுவதால் பணியாளர் குறைப்பு நடந்ததாகவே நான் எண்ணுகின்றேன்.



தமிழீழ அரசியல்த்துறைப் பொறுப்பாளர்களான சு.ப.தமிழ்ச்செல்வன், பா.நடேசன் ஆகியோர் ஹன்சன் பேளவரை வன்னியில் வரவேற்றபோது...

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி எவரையாவது சந்திக்கவேண்டும் என்ற முழுமுனைப்புடனே இருக்கும் திரு.ஹன்சன் பௌவர் தமிழ் மக்கள் படும் துன்பம் தொடர்பாக தனது கவலையையும் பகிர்ந்து கொண்டார். தமிழர் தரப்பு பேரம் பேசும் சக்தியை இழந்துவிடுமோ என்ற ஐயம் அவரில் மேலோங்கியிருந்ததையும் என்னால் உணர முடிந்தது. ஒரு அரசு என்ற வகையில் இலங்கையரசு ஒரு தீவிரவாத இயக்கத்திற்கெதிராக நடத்தும் யுத்தத்தில் கூடியவரையில் மற்றைய நாடுகள் அக்கறை செலுத்தாதது ஒன்றும் புதியவிடயமில்லை என்பதையும் சொல்லாமல் சொல்லவும் தவறவில்லை.

சுவிஸ் நாட்டின் அரசியல் முறை, இங்கிலாந்து நாட்டின் அரசியல் முறையிலான தீர்வு, இனப்பிரச்சினைக்கு தீர்வாகலாம் என்று முன்னர் பேசிய நிலையில் தற்போது ஓர் தளர்வு ஏற்படுவதை உணர்கின்றேன், இப்பொழுது இந்தோனேசியாவில் ஏற்பட்ட தீர்வுமுறை பொருந்துமா என்ற வகையில் இவர்களது எண்ணம் செல்வதையும் என்னால் அவதானிக்க முடிகிறது."

(தொடரும்)



# செய்திகளும் எழும் கேள்விகளும்

**செய்தி:-** தொடருந்துப் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய ஒப்பந்த நிறுவனம் தமக்கு போதுமான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதில்லை என இலங்கையைச் சேர்ந்த தொழிலாளர்கள் முறையிட்டுள்ளார்கள். வசதிகள் எதுவுமின்றி தாங்கள் தொழில் புரிய வேண்டிய நிலையில் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரையான 136 கிலோ மீற்றர் நீளத்துக்கு தொடருந்துப் பாதை அமைக்கும் பணிகள் தற்போது ஓமந்தை பகுதியில் இடம்பெற்று வருகின்றன. இதன் ஆரம்ப கட்டப் பணிகளுக்காக தமிழ், சிங்கள தொழிலாளர்களும் இந்தியர்களும் உட்பட 800 பேர் வரையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

**எழும் கேள்வி:-** செய்கின்ற வேலைக்கு ஊதியமே கொடுக்காத இந்தியா, தமிழர்களுக்கு 49,000 வீடு கட்ட 1404 கோடி மற்றும் இலங்கையின் மனித வள மேம்பாட்டிற்கு 100 கோடி ரூபாக்களை எப்படி வழங்கப்போகின்றது?

★★★★

**செய்தி:-** சைப்ரஸ் அரசு அண்மைக்காலமாக சிறீலங்கா நலனில் பாரிய அக்கறை செலுத்தி வருவதாகவும் அதற்கு தமது மக்களும் தமது அரசும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளதாகவும் சிறீலங்காவின் பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார். இலங்கைக்கான சைப்ரஸ் தூதுவராகக் கடமையாற்றி நாடு திரும்பும் முன்னாள் தூதுவர் நப்சிகா கிறிஸ்டிக்குப் பிரியாவிடை வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** ஊர் திரும்பும் சைபீரிய வாத்து, இலங்கைத் தமிழரின் உண்மையான கதையை எடுத்துச்செல்லுமா?

★★★★

**செய்தி:-** தீர்வுப் பேச்சில் புலிகளை விடவும் கூடிய நிபந்தனைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விதித்துவருகிறது என சிறீலங்கா பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, ஜனாதிபதி மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோது குற்றம்சாட்டினார்.

**எழும் கேள்வி:-** தமிழீழத்தை விடவா?

★★★★

**செய்தி:-** யாழில் பெரிதளவான திருட்டு சம்பவங்கள் தொடக்கம் சிறியளவான திருட்டுக்கள் உட்பட ஜனவரி மாதத்தில் மட்டும் 86 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சிறீலங்காக் காவல்துறையின் யாழ்.காவல்த்துறை தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக அதிகளவில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற வண்ணமுள்ளதாகவும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இரவு வேளைகளில் வீதிரோந்தில் ஈடுபட்டு மக்களின் உடமைகளுக்கு பாதுகாப்பாக காவல்துறையினர் இருப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** பூனையே பாலுக்கு காவலாக்கும்?

★★★★

**செய்தி:-** ஊர் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களை கொண்டிருக்கும் கட்சிக்கு எப்படி வாக்களிக்க முடியும்? ஈ.பி.டி.பி கட்சியை இணைத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டதனாலேயே வடக்கில் அரச கட்சி மண் கவ்வ வேண்டி ஏற்பட்டது என ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தாவிடம் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கேள்வி எழுப்பினர்.

**எழும் கேள்வி:-** கேள்வி எழுப்பியவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா?

★★★★

**செய்தி:-** 13வது பிளஸ்சில் எதை உள்ளடக்குவது என்பது பற்றி தீர்மானிக்கவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளதென சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** நாடாளுமன்றத் தெரிவிக்குழுவில் யாரை உள்ளடக்குவது என்பதைத் தீர்மானிக்க இன்னொரு குழு அமைக்கப்படுமா?

★★★★

**செய்தி:-** தமிழர்கள் அதிகம் வசிக்கும் இலங்கையின் வட கிழக்கு மாகாணப் பகுதியில் இருந்து இராணுவம் விரைவில் திரும்பப் பெறப்படும் என்று ஈ.பி.டி.பி டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ. மாதகல் ஆக்கிரமிப்புப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது அவர் இதனைக் கூறினார்.

**எழும் கேள்வி:-** அப்துல் கலாமைச் சந்தித்தபிறகு அடிக்கடி கனவு காணுகின்றாரோ?

# பூனையில்லா வீட்டில் எலி துள்ளுகின்றது!

யாழ்குடாவில் தற்போது அரங்கேறிவரும் சம்பவங்களை நோக்கும் போது மரணம் மலிந்த பூமியாக காணப்படுவதை உணரக் கூடியதாக உள்ளது. பொருளாதாரத்தைப் பொறுத்தளவில் அங்கு நாளாந்தம் ஒரு சிறிய குடும்பத்துக்கு ஆயிரம் ரூபா போதாமையாக உள்ளது. விலை வாசி ஏற்றம் நாளும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்திவருகின்றது. அங்கு அதி உச்ச ரீதியில் பண வீக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் உளரீதியில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது. பல குடும்பங்கள் யுத்தம் இடம்பெற்ற சூழ் நிலையில் பாதிக்கப்பட்டதைவிட தற்போது அதிகமாகப் பாதிக்கப்படுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யாழில் நாளாந்தம் தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்கள் மீட்கப்பட்டுவருகின்றன. குடும்பத்தை நிர்வகிக்கும் குடும்பத் தலைவர்களே அதிகமாகத் தற்கொலை செய்துகொள்வதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆயினும் இச்சடலங்கள் குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அண்மையில் யாழில் மீட்கப்பட்ட சடலங்களில் பல இனந்தெரியாத முறையில் படுகொலை செய்யப்பட்ட நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளமை பொதுமக்களும் உறவினர்களும் வழங்கிய தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது.

சிங்கள இனவாதத்துக்கு துணைபோவோர் மட்டுமே அங்கு வாழக்கூடியதாக உள்ளது எனவும் ஏனையவர்கள் கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அச்சத்துடனேயே நாட்களை நகர்த்துகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கொள்ளைச் சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்தே காணப்படுகின்றன. ஆட்கள் இல்லாத வீடுகள், பாதுகாப்பற்ற வீடுகள் மற்றும் ஆண் துணையற்ற வீடுகள் என நன்கு இனங்காணப்பட்டு, சிங்கள அடிவருடிகளான ஒட்டுக் குழுக்களால் கொள்ளைகள் திட்டமிட்டு நிகழ்த்தப் படுகின்றன.

தற்போது தாம் நினைத்ததை நிறைவேற்றுவதிலேயே அரசுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்கள் செயற்பட்டுவருகின்றன. இது பூனை இல்லாத வீட்டில் எலி துள்ளி விளையாடுவதாய் அமைந்துள்ளது.

அதாவது கடந்தவாரம் வடமாகணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை மடக்கி யாழ் மத்திய கல்லூரியில் நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு இடையூறு விளைவித்த நூற்றாண்டு மண்டபமும் இடித்தளிக்கப்பட்டதான அதிர்ச்சிச் சம்பவம் அனைவரையும் கவலை கொள்ளவைத்துள்ளது.

வடமாகாண ஆளுனர் சந்திரசிறீ மற்றும் ஒட்டுக்குழு அமைச்சர் டக்ளசின் இச் செயற்பாட்டிற்கு வடபகுதி கல்விச் சமூகம் கடும் அதிர்ப்தியை வெளியிட்டுள்ள அதேவேளை, ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டுள்ளது.

ஆரம்பிக்கப்பட்டு பின்னர் நிதிப்பற்றாக்குறை காரணமாக முழுமையாக நிறைவேற்றப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த குறித்த நீச்சல் தடாகம் அமைக்கும் வேலைகள், வடமாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்ட 4.5 மில்லியன் ரூபாவினை வடமாகாண ஆளுனர் மடக்கிக் கொடுத்துள்ளார்.

கட்டி முடிவடைந்த மேற்படி நீச்சல் தடாகத்தினை திறந்து வைப்பதற்கு மகிந்தவை யாழுக்கு அழைத்திருந்தனர். அதற்கான ஏற்பாடுகள் பலமாக யாழ் மத்திய கல்லூரியில் இடம்பெற்றன. கல்லூரியை சுற்றி காப்பற் வீதிகள், மண்டபங்கள் வகுப்பறைகள் எல்லாம் புதுப்பொலிவு பெற்றுள்ளன.



# 64 தமிழர் சொத்துக்களை சூறையாடும் சிங்களம்

**– கந்தரதன்**

இவ்வாறு எல்லாவகையான ஏற்பாடுகளையும் சிறந்த முறையில் செய்துகொண்டிருக்கும்போது யாழ் மத்திய கல்லூரிக்கு சென்ற டக்ளஸ் நீச்சல் தடாகத்திற்கு முன்னால் உள்ள 100 வருடங்கள் பழைமை வாய்ந்த கட்டடத்தினை இடித்து மகிந்தவும் அவருடன் வருகின்ற பிரமுகர்களும் அமர்வதற்கான மேடையினை அமைக்குமாறு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவினை நடைமுறைப்படுத்த மறுத்த பாடசாலை அதிபர் அக் கட்டடத்தின் பழைமையான வரலாறுகளைக் கூறி அக்கட்டடம் வரலாற்று பொக்கிசம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று என்றும் தெரிவித்துள்ளார். தாக்குதல் நடத்தும் தொனியில் மிரட்டிய டக்ளஸ், நான் மீண்டும் வந்து பார்க்கும்



போது இந்தக் கட்டடம் இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்.

அதன் பின்னரும் இடிக்கப்படாமல் இருந்த அக்கட்டடம், இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதால் உடனடியாக இடிக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சிடம் இருந்து பாடசாலைக்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பின்னர் அக் கட்டடம் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினால் கடும் சீற்றமடைந்துள்ள யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள், கடும் எதிர்ப்பினை வெளியிட்டதுடன், யாழ். கல்விச் செயற்பாடுகளிலும் அரசியல் தனது ஆதிக்கத்தினை கடுமையான முறையில் செலுத்தி வருகின்றது என சாடியுள்ளனர். இந்நிலையில் வேலையற்ற பட்டதாரிகள் மகிந்தவை சந்திப்பதற்காக யாழ் பெருமாள் கோவிலடிப் பகுதியில் ஒன்று கூடியிருந்தனர். இதனையறிந்த யாழ்.காவல்துறையினர், அவர்களை கலைந்து செல்லுமாறு போலியான பிடியாணைப் பத்திரமொன்றைக் காட்டி விரட்டியடித்தனர்.

இதனையடுத்து, வேலையற்ற பட்டதாரிகள் டக்ளசிடம் சென்றனர். இவர்களின் வருகையை அறிந்த டக்ளஸ், பட்டதாரிகளை நீண்ட நேரம் காக்க வைத்துவிட்டு, உங்களில் நூறு பருக்கு மட்டுமே நியமனம் எனவும் நீங்கள் மகிந்தவை முன்னரே ஆதரித்திருந்தால் உங்களுக்கு நியமனம் முதலே கிடைத்திருக்கும் நீங்கள் மகிந்தவை ஆதரிக்காமல் விட்டமையினாலேயே இந்த நிலைமை என கடும் தொனியில் மிரட்டியுள்ளார்.

அத்துடன் மகிந்தவின் யாழ் வருகையையொட்டி மக்களுக்கு பல கெடுபிடிகளை இராணுவத்தினரும் ஒட்டுக்குழுக்களும் மேற்கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எம் தமிழ் உறவுகளே இது சிந்திக்கும் நேரமல்ல செயற்படும் நேரம்.

*(சூறையாடல்கள் தொடரும்)*

# அமெரிக்கா மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றுமா?

தாயகத்தில் இருந்து வீரமணி

ஜெனீவாவில் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் அமெரிக்கா சிறீலங்காவிற்கு எதிரான தீர்மானமொன்றை கொண்டுவரவுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் குறித்து ஈழத்தமிழ் மக்கள் சிறியதொரு மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

இந்தச் செய்திகளின் தொடர்ச்சியாக அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதி விசாரணைக்கான தூதுவர் ஸ்டீபன் ரெப் இலங்கை வந்துள்ளமையும், அவர் தமிழர் பிரதேசங்களுக்கு வந்து மக்களுடன் கலந்துரையாடியுள்ளமையும் மக்களுக்கு இந்த நம்பிக்கையை கொடுத்திருக்கின்றது.

ஆனால், அமெரிக்காவின் இந்த நகர்வு குறித்து தமிழ் மக்கள் அபரிமிதமான நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை யாழ்.குடாநாட்டு மக்களின் கருத்துக்கள் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது.

2008 ஆம் ஆண்டு தீவிரம் பெற்ற யுத்தம் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தமாக மாறி வன்னியில் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்டபோது, தமிழர்கள் இந்தியாவையும் அமெரிக்காவையும் நம்பியிருந்தனர். பாரிய கப்பல்கள் சகிதம் அமெரிக்கா கடல்வழியாக வரும் என்றும், அவற்றின் மூலம் பொதுமக்களும் போராளிகளும் மீட்கப்படுவார்கள் என்றும் அப்போது தமிழ் மக்கள் வெகுவாகவே நம்பியிருந்தனர். யுத்த வலயத்தில் சிக்குண்டிருந்த மக்கள் மட்டுமன்றி வடக்குக் கிழக்கு உட்பட ஏனைய புலம்பெயர்ந்த நாடுகளில் வசித்த தமிழ் மக்கள் மத்தியிலும் இந்தக் கருத்துக்கள் வேகமாக பரவியிருந்தன.

மக்களின் இந்த அதீத நம்பிக்கைக்கு காரணமும் இல்லாமலில்லை. சிறுபான்மை மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க கூடியவரும், சிறுபான்மை மக்களின் உரிமைகளில் கூடிய கவனம் செலுத்துபவருமான பராக் ஒபாமா அப்போது அமெரிக்காவின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருந்தமையே தமிழ் மக்களை இந்த நம்பிக்கைக்குள் ஈர்த்திருந்தது.

ஆனால் உலக நாடுகளில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களையும், நாசகார குண்டுகளையும் சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது வீசி அவர்களை கொன்று குவித்துக் கொண்டிருந்தபோது, இதே அமெரிக்கா பார்த்துக் கொண்டிருந்தது. தமிழ் மக்களை கொன்று குவிப்பதற்காக சிறீலங்கா அரசிற்கு அழிவு ஆயுதங்களை வழங்கிய நாடுகளை தண்டிப்பதற்கோ, தட்டிக்கேட்பதற்கோ பதிலாக அந்த நாடுகளுடன் அமெரிக்கா நட்புரிமை பாராட்டிக் கொண்டிருந்தது.

ஒரு இனத்தை எந்த வகையில் அழித்தொழிக்க முடியுமோ, எந்த வகையில் துன்புறுத்த முடியுமோ, அத்தனை கொடூரங்களையும் மேற்கொண்ட சிறீலங்கா அரசை தண்டிக்காவிட்டாலும் தட்டிக்கேட்காமலிருந்த அமெரிக்காவின் செயல் குறித்து, ஈழத்தமிழ் மக்கள் இன்றுவரை கடும் விசனத்துடனும் கவலையுடனும் இருக்கின்றனர்.

யுத்தம் நிறைவடைந்து 3 வருடங்களை எட்டுகின்ற தற்போதைய நிலையில் சிறீலங்காவிற்கு எதிரான யுத்தக் குற்ற தீர்மானமொன்றை கொண்டு வருவதற்கு அமெரிக்கா முயற்சியெடுத்திருப்பது குறித்து தமிழ் மக்கள் மனதில் சிறியதொரு மகிழ்ச்சி நிலவுகின்றபோதிலும் அந்த மகிழ்ச்சிக்குள் சந்தேகப் பார்வையும் தலைதூக்கியுள்ளது.

சிறீலங்காவிற்கு எதிரான தீர்மானமொன்றை கொண்டு வரும் பட்சத்தில் அது இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவிபுரியுமென்று ஜெனீவாவுக்கான அமெரிக்க தூதுக்குழுவின் பேச்சாளர் டேவிட் கெனடி கருத்து வெளியிட்டிருக்கின்றார். இக்கருத்து தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாக இருக்கின்றபோதிலும், என்ன நோக்கத்துடன் தற்போது அமெரிக்கா இந்த திட்டத்தை செயற்படுத்துகின்றது என்பதை தங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் யாழ்.குடாநாட்டிலுள்ள சில புத்திஜீவிகள் கூறியுள்ளனர்.

சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் கடும்போக்குடன் செயற்படும் சிறீலங்கா அரசாங்கத்தை தண்டிப்பது போன்று பாசாங்கு செய்வதன் மூலம் தனது பூகோள நலன்களை சாதிப்பதற்கு அமெரிக்கா முற்படுகின்றதோ என்று தமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும், இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதி விசாரணைக்கான தூதுவர் ஸ்டீபன் ரெப்பின் செயற்பாடுகள் வித்தியாசமான முறையில் அமைந்திருந்தமை தமிழ் மக்களின் மனங்களை கவர்ந்துள்ளது.

ஸ்ரீபன் ரெப் கடந்த 8ம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை சந்தித்திருந்தார். ஏனைய நாடுகளிலிருந்து வருகை தரும் தூதுவர்களைப்போல் அல்லாது பல்வேறு விடயங்களையும் அவர் கேட்டறிந்திருக்கின்றார். குறிப்பாக யாழ்.மாவட்டத்திலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தின் நிலைகள் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய இடங்கள், இராணுவத்தினர் தற்போது அமைத்துள்ள புதிய முகாம்கள் தொடர்பான விபரங்கள் போன்றவற்றை விரிவாக கேட்டறிந்தார். யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்டத்தின் கட்டமைக்கப்பட்ட பெரிய புவியியல் வரைபடமொன்றினூடாக மேற்படி விபரங்களை அவர் அறிந்து கொண்டார்.



மேலும் யுத்தத்தின்போது காணாமல்போனவர்கள் தொடர்பான விபரங்கள், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார். அரச அதிபர் சிறீலங்கா அரசிற்கு சார்பான கருத்துக்களை கூறியபோதிலும் ஸ்டீபன் ரெப் அதனை பெரியளவில் கவனத்தில் எடுக்கவில்லை.

மறுநாள் 9ம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்ற தூதுவர் செல்வபுரத்திலுள்ள யூதா தேவாலயத்தில் பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். இதுவரை வடக்குக் கிழக்கு மாகாணங்களிற்கு வருகை தந்த ஏனைய நாட்டுத் தூதுவர்கள் எவரும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறியாத நிலையில், அமெரிக்கத் தூதுவர் மக்களைச் சந்தித்துள்ளமை மக்கள் மனதில் சிறியதொரு நம்பிக்கையினைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்கத் தூதுவர் என்பதை அறிந்த மக்கள் தமது வேதனைகளை வெளிப்படையாகவே கொட்டித்தீர்த்தனர். யுத்தகாலத்தில் காணாமல்போனவர்கள் தொடர்பில் அவரிடம் எடுத்துக் கூறிய மக்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் நேரடியாக இராணுவத்திடம் தாங்கள் கையளித்த தமது பிள்ளைகள், தமது கணவன்மார் தொடர்பிலும் இதுவரை எந்தவொரு தகவலும் இல்லையென்று கண்ணீர் மல்க கதறியழுதவாறு கூறினர்.

1990 ஆம் ஆண்டு யுத்தம், 2004 ஆம் சுனாமி இயற்கைப்பேரழிவு அதனைத் தொடர்ந்து இறுதி யுத்தம் என்று பல பேரழிவுகளை சந்தித்த பின்னர் தற்போது மீளக்குடியேறியுள்ள தங்களுக்கு இதுவரை எந்தவித அடிப்படைத் தேவைகளும் ஏற்படுத்தித் தரப்படவில்லை என்றும் கூறினர்.

மேலும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றும் அவர்கள் இராணுவத்தினரால் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் சில பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.


இலங்கையில் ஏனைய இனங்களைப்போன்று தமிழ் இனமும் சமமான உரிமைகளுடன் வாழ விரும்புவதாகவும் கூறிய முல்லை மக்கள், இவ்விடயத்தில் அமெரிக்கா தலையிட்டு நிலையான நிம்மதியான தீர்வொன்றை பெற்றுத்தர வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அமெரிக்கத் தூதுவர் ஏறக்குறைய 3 மணித்தியாலங்கள் வரை மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் வேதனைகளைப் பதிவாக்கினார்.

10ம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்ற அமெரிக்கத் தூதுவர் ஸ்டீபன் ரெப் குழுவினர் அங்கும் பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடினர். முதல்நாள் வியாழக்கிழமை முல்லைத்தீவில் தனியிடமொன்றில் பொது மக்களைச் சந்தித்ததால் அவர்கள் சென்ற பின்னர் இராணுவத்தினர் அந்த மக்களை விசாரணைக்குட்படுத்தியதை அறிந்த அமெரிக்கத் தூதுவர் கிளிநொச்சியில் பொது இடத்தில் மக்களைச் சந்திக்காமல், பல்வேறு இடங்களுக்கும் சென்று நேரடியாகவே மக்களுடன் கலந்துரையாடினார். முல்லைத்தீவு மக்கள் கூறிய அதே வேதனையான கருத்துக்களையே கிளிநொச்சி மக்களும் அமெரிக்க தூதுவரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

மக்களின் வேதனைகளையும் விம்மல்களையும் பதிவாக்கிச் சென்றுள்ள அமெரிக்கா, சிறீலங்கா அரசு தொடர்பிலும் ஈழத்தமிழர் தொடர்பிலும் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது என்பதே தமிழ் மக்கள் மத்தியிலுள்ள எதிர்பார்ப்பாகவுள்ளது. நிலையான தீர்வு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து ஈழத்தமிழ் மக்களும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் தொடர்சியாக நடத்தி வரும் போராட்டங்களின் மத்தியில் அமெரிக்கா தற்போது தமிழ் மக்கள் மீது கரிசனை காட்டுவதாக வெளிப்படுகின்றது. இந்தக் கரிசனையானது தமிழ் மக்களின் நலன்களுக்குச் சார்பானதா என்ற சந்தேகம் நிலவுகின்ற நிலையில் சார்பானதாக அமையவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

உலக வல்லரசான அமெரிக்கா நினைத்தால் ஈழத்தமிழ் மக்களுக்கு நிலையான நிம்மதியான தீர்வொன்றைப் பெற்றுதர முடியுமென்று இன்றுவரை தமிழ் மக்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை வீண்போக கூடாது. அமெரிக்கா மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்றக் கூடாது. சர்வதேச நாடுகளும் அமெரிக்காவும் இணைந்து தமிழ் மக்களுக்கு நிலையானதொரு தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தொடர்ந்தும் குரல் கொடுக்கவேண்டும் என்பதே ஈழத்தமிழ் மக்களின் இன்றைய எதிர்பார்ப்பாகவுள்ளது.

**அண்மையில் சென்னையில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் ஜெ.பிரபாகரன் எழுதி, பென்னி குயிக் பதிப்பகம் வெளியிட்ட 'அன்பார்ந்த சிங்கள மக்களுக்கு...' எனும் கடித வடிவிலான நூல் சிங்கள மக்களை மட்டுமல்ல தமிழர்களையும் உலக மக்களையும் சிந்திக்கத்தூண்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது. விரைவில் ஆங்கிலம், சிங்களம் உட்பட வேறு மொழிகளில் வெளிவரவுள்ள இந்நூலின் தமிழ்ப் பதிப்பை ஈழமுரசு வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**




# அன்பார்ந்த சிங்கள மக்களுக்கு...

அரசுகளுக்கிடையிலான பிரச்சனைகளை தீர்ப்பதற்காகத்தான் ஐ.நா முதற்கொண்டு பல்வேறு அமைப்புக்கள் இருக்கின்றனவே பிறகு எதற்கு அரசுகளுக்கு ஆயுதங்கள்?

அரசுகளுக்கே ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளே ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையின்றி ஆயுதங்களின் மீது நம்பிக்கை வைத்திருக்கும்பொழுது, இனவெறியால் தமது அனைத்துப் பாதுகாப்பையும் இழந்த மக்கள் தமது இறுதிப் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் மீது நம்பிக்கைவைத்துப் போராடுவது எப்படிக் குற்றமாகும்?

உலகில் இராணுவம் இல்லாத ஒரு நாடு வற்றிக்கான் 0.44 சதுர கிலோ மீற்ரறில் 108 ஏக்கர் ரோமக் கத்தோலிக்கத் திருத்தலம் தான் அந்த நாடு. இராணுவம் எதுவும் இல்லாமலே பாதுகாப்பு இந்த உலகில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேபோல் ஒவ்வொரு நாட்டின் பாதுகாப்பையும் மற்றெல்லா நாடுகளும் உறுதி செய்ய முடியாதா? இதைச் செயல்ப்படுத்த முனைந்தோமானால் நம் உலகிற்கு எதற்கு இராணுவம்? தனக்கு அளிக்கும் பாதுகாப்பை கூட இந்த மனித சமுகம் தமக்கு அளித்துக் கொள்ளவில்லை என்று அந்த வற்றிக்கான் கடவுள் நினைக்கமாட்டாரா? ஏன் புத்தர் நினைக்க மாட்டாரா? மனித சமுகத்தின் மீது நம்பிக்கை வைத்து உலகில் இராணுவத்தைக் கைவிட முயலும் நாட்டை நாம் எல்லோரும் எதிர்பார்த்து காத்திருப்போம்.

சரி நமது விசயத்திற்கு வருவோம். பொதுவாக ஒரு போர் அல்லது கலவரம் நடக்கும் பொழுது அதே நேரத்தில் தாக்கப்படுவோரின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. தாக்குதல் முடிவுக்கு வரும் போது சூறையாடலும் முடிவுக்கு வருகிறது. ஆனால் இலங்கையில் மே 2009 இல் போர் முடிந்த பிறகே ஒரு வெறித்தனமான சூறையாடல் தொடங்கியிருக்கிறது. தமிழர்களின் நிலங்களையும், கடல் வளங்களையும் அடைய கால்நூற்றாண்டு காத்திருந்த வெறித்தனத்தோடு அதன் மீது பாய்ந்திருக்கின்றீர்கள். ஊர்களின் தமிழ்ப் பெயர்களை நீக்கிவிட்டு சிங்களப் பெயர்கள். தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள். தமிழர் பகுதிகளில் புத்த விகாரைகள். படுகொலைகளின் பயம் மக்களிடம் நீங்கிவிடாமல் இருக்க தமிழர் பகுதிகளில் போர் நினைவுச் சின்னங்கள். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் தமிழர் நிலங்களில் இராணுவத்திற்கான பல உயர் பாதுகாப்பு வலையங்கள் என இப்படி பல வழிகளிலும் உங்கள் அரசு தமிழ்ப் பகுதிகளை சூறையாடிக் கொண்டு வருகிறது. மிகவும் சட்டபூர்வமாகவும் வெகு விரைவாகவும் நடைபெற்றுவரும் சூறையாடல் இது. இந்த விரைவாக நடைபெற்றுவரும் சூறையாடல். இது இந்தச் சூறையாடலின் நோக்கம் தமிழர் பூர்வீகத்தை அழிப்பது.

தமிழர்களுக்கு அதிகாரம் பிரித்துத் தரப்பட வேண்டும் என்று உலகநாடுகள் கோருகின்றன. ஒரு அதிகாரம் செலுத்தப்பட வேண்டுமானால், அதைச் செலுத்துவதற்கு ஒரு நிலப்பரப்பு இருக்க வேண்டும். தமிழருக்கு தரப்படும் அதிகாரங்கள் என்பன தமிழ்ப் பகுதிகளில் செலுத்தப்படுவனவாக இருக்க வேண்டும். ஆனால் தமிழ்ப் பகுதி ஒன்றே இல்லாமல் தமிழருக்கு அதிகாரம் பிரித்தல் என்பது ஏமாற்றுப் பேச்சு. உலக நாடுகள் தமிழர்களுக்கு சம உரிமை, போர்க் குற்ற விசாரணை என்று மெதுவாகச் சொல்லி வரட்டும். அதற்குள் நாம் தமிழர் பகுதிகளில் சூறையாடலை வேகமாக நடத்தி தமிழர் பூர்வீகத்திற்கான அடையாளங்களை இல்லாமல் செய்துவிடுவோம். அதன் பிறகு சம உரிமையோ, ஈழமோ அதைப் பேசுவதற்கான அடிப்படைகளோ இலங்கையில் இருக்காது. மெல்ல மெதுவாக நகரும் போர்க்குற்ற விசாரணை விசயத்தில் மீறிப்போனால் தீர்ப்பில் 10 சிங்களவர்களின் உயிர் போகும். போகட்டும். ஆனால் தமிழர்களுக்கு ஈழக்கனவு மட்டுமல்ல இனம் என்ற நிஜம் கூட இல்லாமல் போய் விடும். இதுதான் உங்களின் எதிர்காலக் கனவு.

உங்கள் கணக்கைப் போலவே, உலக நாடுகளுக்கும் இலங்கை குறித்து ஒரு கணக்கு இருக்கும். தமிழர்களுக்கும் குறிப்பாக புலம்பெயர் தமிழர்களுக்கும் ஒரு கணக்கு இருக்கும். இதில் யாருடைய கணக்கு வெல்லும் என்று கூறுவதற்கு ஜோசியம் எதுவுமில்லை. தனது தரப்பு நியாயங்களால் உலக மக்களையும், உலக நாடுகளையும் நீங்கள் உங்கள் பக்கம் ஈர்க்கும் வாய்ப்பு இல்லை. அதற்கான தேவையும் உலக ஆதரவும் நீங்கள் போரில் வென்ற மே 2009 உடன் முடிந்து விட்டது. உலக அளவில் உங்களுக்கு ஆதரவை ஏற்படுத்தி தந்த பயங்கரவாத எதிர்ப்பு என்ற சொல்லுக்கு ஈடாக இன்னொரு சொல் உங்களுக்கு மீண்டும் வாய்க்கவே இல்லை. மேலும் உள்நாட்டில் உங்கள் உடனடி இலக்கான தமிழர் பூர்வீகத்தை அழித்து முடிப்பது என்பது அவ்வளது விரைவான காரியமுமில்லை. உலக நாடுகளின் கவனத்தின் கீழ் உங்கள் நாடு இருப்பதால் நீங்கள் இதில் உங்களின் வேகத்தை மட்டுப்படுத்தியே ஆகவேண்டும். எனவே உங்கள் கணக்கு சரியாகவே இருந்தாலும் அது நிறைவேறுவதற்கான உலக சூழல் உங்களுக்கு சாதகமாக இல்லை என்றே சொல்லிவிட வேண்டும்.

> **பொதுவாக ஒரு போர் அல்லது கலவரம் நடக்கும் பொழுது அதே நேரத்தில் தாக்கப்படுவோரின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. தாக்குதல் முடிவுக்கு வரும் போது சூறையாடலும் முடிவுக்கு வருகிறது. ஆனால் இலங்கையில் மே 2009 இல் போர் முடிந்த பிறகே ஒரு வெறித்தனமான சூறையாடல் தொடங்கியிருக்கிறது. தமிழர்களின் நிலங்களையும், கடல் வளங்களையும் அடைய கால்நூற்றாண்டு காத்திருந்த வெறித்தனத்தோடு அதன் மீது பாய்ந்திருக்கின்றீர்கள்.**



இரண்டாவதாக உலக நாடுகளோட கணக்கைப் பார்ப்போம். உங்கள் விசயத்தில் உலக நாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கணக்கு இருக்கும். அவர்களுக்கு ஒரு நலன் இருக்கும். உங்கள் அரசின் போர்க் குற்றங்களை காட்டி இலங்கையில் தத்தமது நலன்களை வளர்த்துக் கொள்வது உலக நாடுகளின் நோக்கமாகும். மற்றப்படி ஈழம் என்பது அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இப்போது இல்லை. இந்த நலன்களுக்கான போட்டியில் அவை ஒன்றிணைந்து உங்கள் விசயத்தில் ஒரு முடிவுக்கு வரமாட்டா. இந்த காலதாமதம் உங்களுக்கு ஒரு சாதகமாக இருந்து வருகிறது. இதே காலத்தில் உங்களைக் காப்பாற்றுவதற்கு சீனாவினதும், இந்தியாவினதும் பிடி உங்கள் மேல் இறுகிக் கொண்டே வருகிறது. இந்தியாவிற்கும், சீனாவிற்கும் அடிமையானாலும் பரவாயில்லை. ஈழம் அமைந்துவிடக் கூடாது என்று உங்கள் அரசின் மூர்க்கத்தனம் இவ்விரு அரசுகளுக்கும் சாதகமாக உள்ளது. ஒரு வேளை ஈழம் அமையுமானால் இன்று இந்தியாவினதும் சீனாவினதும் தோள்களில் இருக்கும் சிங்கள அணி அவர்களின் கால்களில் இருக்க வேண்டிய நிலைவரலாம். ஏனெனில் நீங்கள் தஞ்சமடைந்திருக்கும் சீனா உங்கள் கடல்பரப்பில் நிறைய எதிர்கால திட்டங்களை வைத்திருக்கும் மோசமான ஒரு வணிக அரசு. இந்தியா அண்டைய பிராந்திய வல்லரசு. உலக நாடுகள் கணக்கிலே, அவர்களுக்கிடையிலான போட்டியிலே சீனாவும், இந்தியாவும்தான் அதிக நலன் பெறுபவர்கள் என்பதிலே சந்தேகமில்லை.

மூன்றாவதாக தமிழர்தரப்பு கணக்கைப் பார்ப்போம். உலக நாடுகளையும் உலக மக்களையும் தம்பக்கம் ஈர்க்க அவர்களுக்கு உங்கள் அரசின் மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள் பெரிதும் பயன்படுகின்றன. ஐ.நா போர்க்குற்ற விசாரணைக் குழுவின் அறிக்கையும், சனல்–4 ஆவணப் படமும் இதில் முதன்மைப் பங்காற்றுகின்றன. இதேநேரத்தில் தமிழர்களிடையே ஒரு பிரிவினர் உலக மக்களையும் உலக நாடுகளையும் ஈர்ப்பதற்கு ஈழத்தில் பொதுசன வாக்கெடுப்பு கோரிக்கையை முதன்மையாக வலியுறுத்தி வருகின்றனர். இது முற்றிலும் சனநாயகக் கோரிக்கையாக இருப்பதால் உலக மக்களின் ஈர்ப்பை பெறும் வாய்ப்புடையது. இது உலக நாடுகளின் சனநாயகப் பண்பை கேள்விகளுக்குள்ளாக்கும் என்பதால் உலகில் பெரும்பான்மை ஆதரவைப் பெறும் வாய்ப்பும் உடையது. போரில் உலக ஆதரவைப்

(19ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் நகர்வு

# பிராந்திய வல்லாதிக்கப் போட்டியா தமிழர்கள் மீதான கரிசனையா?

தாயகத்தில் இருந்து **இளங்கீரன்**

"கடற்கரையோரத்தில் குழந்தைகளைப் போல் மணலைக் கையால் குவித்துவிட்டு, ஆறு தடிகளால் அமைத்துக் கொண்ட கூடாரத்தினுள்ளேயே நாங்கள் வாழ்ந்தோம், காற்று புக முடியாதளவு நெருக்கமாக அடுத்தடுத்து, ஆயிரக்கணக்கில் கூடாரங்களை அமைத்துக் கொண்டு மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

ஒருநாள் காலை எங்கள் கூடாரத்திற்கு முன்னால் எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்தது, நான் எனது பிள்ளைகளை பங்கருக்கு ஓடுங்கள் என்று சொல்வதற்குள், அடுத்து ஒரு செல் வீழ்ந்தது, அவ்வாறே கண்மூடி முழிப்பதற்குள், அடுத்தடுத்து செல்கள் வீழ்ந்தன. புகை மூட்டமாகவிருந்தது. எனது முதுகுப்புறத்தில் விறைப்பை உணர்ந்தேன்.

அதற்குப் பின்னர் என்ன நடந்தது என்றே தெரியாது. பின்னர்தான் தெரியும் அங்கே வீழ்ந்து வெடித்த செல்லில் ஒன்று எனது கூடாரத்தின் மீதும் வீழ்ந்தது. என்னுடைய நான்கு பிள்ளைகளும், மருமகனும், ஒரு வயது பேரப்பிள்ளையும், கணவரும் இறந்து போய்விட்டனர். இயலாத நானும், என் விதவை மகளும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்."

இப்படித்தான் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோட ஒரு தாய் அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் போர்க் குற்றங்களுக்கான விசேட தூதுவர் ஸ்டிபன் ரெப் தலைமையிலான குழுவின் முன்னால் சாட்சி சொன்னார். தன்னுடைய நான்கு பிள்ளைகளை போர் தின்ற பின்னர் மனநோயாளியாக்கப்பட்ட இந்த தாய், இன்று அதிலிருந்து விடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

யுத்தத்தில் விலைமதிப்பற்ற உயிர்களை பலி கொடுத்துவிட்டு, இன்று ஒரு அரை நிரந்த வீடு கூட கிடைக்கப்பெறாத நிலையில், முள்ளந்தண்டு இயலாத நிலையில், தன்னுடைய விதவை மகளின் உழைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் சோகம், யாருக்கும் தெரியாத கதை. யுத்தம் தீர்ந்துவிட்ட பெரு மூச்சின் பின்னால் ஆடம்பரத்தில் லயித்துப்போயிருக்கும் இந்த தேசம் இதை பார்க்கப்போவதுமில்லை.

யாரைநோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்? வாழவேண்டும் என்பதற்காய், சாகத் தயாரான மனிதர்கள் வாழ்ந்த தேசத்தில், ஆறாத வடுக்களும், தீராத ரணங்களும் புரையோடிக் கிடக்கின்றது. எல்லாவற்றையும் மறந்துவிடுவோம் என்று சொல்கிறார்கள். எதை மறப்பது? ஏன் எங்கள் மரணங்கள் அவ்வளவு மலிவானவையா? தலையிழந்த பனைமரங்களையும், அடர்ந்து வளர்ந்த எருக்கலம் செடிகளையும் மறக்க முடியுமா?

அண்மையில் அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் பூகோள போர்க்குற்றங்களுக்கான தூதுவர் ஸ்டீபன் ரெப் தலைமையிலான குழுவினர் இலங்கையின் வட புலத்திலுள்ள 5 மாவட்டங்களிற்கும் சென்று போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களைச் சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், அவற்றை பதிவு செய்தும் கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது பெருமளவு மக்கள், தமது நிலைப்பாடுகள் தொடர்பில் நேரடியாக தெரிவித்திருக்கின்றனர். எனினும் இது எந்தளவிற்கு வெற்றியளிக்கும், தமிழ் மக்களுக்கொரு நின்மதியான வாழ்வைப் பெற்றுக் கொடுக்கும் என்பதில் எமக்கு இன்னமும், நம்பிக்கையில்லை என்பதே உண்மை. யுத்தம் முடிந்து 3 வருடங்களாகின்றது. ஆனால் அப்போதெல்லாம் வந்து ஆவணங்களைப் பெறாத அமெரிக்கா இப்போது ஏன் வந்து எடுக்கின்றது என பலரிடம் கேள்வியிருக்கின்றது.

நிச்சயமாக அமெரிக்க அரசாங்கத்திடம் சிறீலங்கா அரசாங்கம், இறுதி யுத்தத்தின் போது புரிந்த போர்க்குற்றங்கள், மற்றும் மனிதத்துவத்திற்கெதிரான குற்றங்கள் குறித்து தெரியும், அதற்கான ஆதாரங்களையும் கூட அமெரிக்கா தன்னிடம் வைத்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. சில தினங்களுக்கு முன்னரும் கூட சரணடைய வந்தவர்களை கொல்ல உத்தரவிடப்பட்ட தன் ஒலிப்பதிவு தன்னிடமிருப்பதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

ஆனால் அந்த தகவல் அல்லது ஆவணம் தற்போதுதான் அமெரிக்க அரசாங்கத்திடம் இருந்திருக்கவில்லை. யுத்தம் முடிந்தவுடனேயே குற்றம் புரிந்தவர்கள் தொடர்பாகவும், எவ்வாறான யுத்தம் இடம்பெற்றது, எவ்வாறு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள், மக்கள் குடிமனைகள் மீது குண்டுகள் வீசப்பட்டனவா? எவ்வகையான குண்டுகள் வீசப்பட்டன? உடலில் அல்லது கண்களில் எரிவை ஏற்படுத்தக் கூடியதாக அவை இருந்தனவா? போன்ற கேள்விகளுக்கு அமெரிக்காவிடம் சகல ஆதாரங்களுடனும், செய்தி இருக்கின்றது. இந்நிலையில் இங்கு வந்து, மக்களைச் சந்தித்து அவர்கள் சொல்வதைக் கேட்கவேண்டிய அவசியமும் கிடையாது. ஆனால் சிலவேளை இந்த ஆதாரத்தை கொடுத்து முறையான ஆதாரமொன்றினை உருவாக்குவது காரணமாக இருக்க முடியும்.

மக்களோடு பாதிக்கப்பட்ட ஒவ்வொரு துறையிலிருந்தும், ஒருவரை எழுமாற்றாக தெரிவு செய்து, அவரிடமிருந்தே தகவல்கள் பெறப்பட்டன. எனவே அமெரிக்காவிடம் சகலவிதமான தகவல்களும் இருக்கின்றன. முறையான ஒரு ஆதாரத்தைப் பெற்றுக் கொள்ளவே இலங்கைக்கு வந்து இங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து, அவர்களிடமிருந்து கருத்துக்களை பதிவு செய்து கொண்டு சென்றுள்ளனர்.

எனவே இதன் மூலம் தமிழ் மக்களின் கடந்த 30 வருடகால இன்னல் நிறைந்த வாழ்வுக்கொரு நின்மதி கிடைக்குமெனில், அமெரிக்கா மீது உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும், தேசியத்தை ஆதரிக்கும் சக்திகள் பற்றுக்கொள்ளும் என்பதுடன், அமெரிக்கச் சார்பு நிலைப்பாடும் இறுக்கமானதாக மாற்றம் காணும். இந்த நிலையில் வரலாற்றுக் கடமையினை அமெரிக்கா செய்யுமா என்பதில் மேலே சொன்னதைப் போன்று நம்பிக்கையில்லை.

**அமெரிக்காவிடம் சகல ஆதாரங்களுடனும், செய்தி இருக்கின்றது. இந்நிலையில் இங்கு வந்து, மக்களைச் சந்தித்து அவர்கள் சொல்வதைக் கேட்கவேண்டிய அவசியமும் கிடையாது. ஆனால் சிலவேளை இந்த ஆதாரத்தை கொடுத்து முறையான ஆதாரமொன்றினை உருவாக்குவது காரணமாக இருக்க முடியும்.**



அமெரிக்கா சாதாரண தமிழர் விடயத்தில், அதிகமான அக்கறை காண்பித்துக் கொள்வதற்கு மிகவும் முக்கியமான காரணம், அமெரிக்கா தனது பிராந்திய நலனில் அக்கறை காண்பிப்பதற்கே. குறிப்பாக இதே அமெரிக்கா யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது சுமார் 5 இலட்சம் வரையான மக்கள் யுத்த வலயத்திற்குள் உள்ளனர். அவர்களை காப்பாற்றவேண்டும் என போராடியிருக்கவில்லை,

மாறாக புலிகள் அழிவதையும், புலிகளுடனிருந்த மக்கள் அழிவதையும், அமெரிக்கா விரும்பியிருந்தது என்பதே உண்மை. இதே போல் தற்போது அதிகளவு அக்கறை காண்பித்துக் கொள்ளக் காரணம், சிறீலங்கா அரசாங்கம் இன்று ஈரான், சீனா போன்ற அமெரிக்க எதிர்ப்பு நாடுகளுடன் நெருக்கமான உறவுகளில் அகலக்கால் பதிந்து விடக்கூடாது என்பதே.

எனவே இதுவொரு இராஜதந்திர ரீதியான அரசியல் செயற்றிட்டமாக இருப்பதுடன், அது இந்தப் பிராந்தியத்தில் தன்னுடைய செல்வாக்கையும் பலத்தையும் பயன்படுத்தும் வகையில் அமெரிக்காவின் இந்தச் செயற்றிட்டம் முன்வைக்கப்படுகின்றது. எனவே எத்தனை பேர் வரினும், எத்தனை பேர் எமது பிரச்சினைகளை கேட்டுக் கொண்டு சென்றிருப்பினும் எமக்கு ஒரு தீர்வினை வழங்க முடியவில்லை.

இந்த நிலைப்பாட்டில் எள்ளவும் மாற்றம் காணப்படப்போவதில்லை. எமக்கான சுதந்திரத்தை நாமே போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதேபோல் நீண்டகால போரின் பின்னர், நலிந்திருக்கும் எமது சமூகம் இந்த பிராந்திய போட்டியினை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டால் அது மிகப்பெரும் வெற்றியாக அமையும்.


Nisan Euro Exo Marché
உங்கள்
சகல மளிகைத்
தேவைகளுக்கும்
ஒரே இடம்!
01 48 35 45 03
37, Av.Paul Vaillant Couturier
93120 La Courneuve


DISHNY Restaurant
Ouvert 7 Jours sur 7
11h 30 à 23h 30
212, rue du Faubourg St-Denis
75010 Paris
உங்களை அன்புடன் வரவேற்கின்றது
Réservation: 01 40 05 18 36


WESTERN UNION
MGS
195, rue du Fbg. St.Denis - 75010 Paris
25 வருடங்களைக்
கடந்து எமது சேவை தொடர்கிறது...
Tél:. 01 42 05 12 46 - Fax : 01 46 07 36 07


23, rue Cail - 75010 Paris
Tél.: 01 46 07 82 90
M: Gare du Nord La Chapelle
இந்திரா உணவகம்
இலங்கை
இந்திய
உணவுகளின்
சுவையகம்.
INDRA
RESTAURANT


64, rue louis blanc
75010 PARIS
Tél: 01 42 05 16 66
உங்கள் சாதாரண தோற்றத்தை
கவர்ச்சியானதாக்கும்
கலை வண்ணம் எம்மிடம் உள்ளது.
NEW SAGANA
COIFFURE


மேனகா அழைப்பிதழ்கள்
குறைந்த விலையில்....
INVITATIONS
MENAKA CARD
CHENNAI - INDIA
தமிழாலயம் ISHWARA
19 rue Cail - 75010 Paris
Tél.: 01 53 26 59 21 Fax: 01 53 26 90 88


SKY ROSE
Installation Satellite & Electronics
Nekkasat - Opticum- Xsat -Strong-
Medion - Aston
Eurobird 9° Hotbird 13° LNB 30€
14, Rue Cail
75010 Paris
Tél : 01 77 17 63 58
Port : 06 11 15 30 00


விமல்
Vimal Directeur Commercial
1 Bis rue du chemin Vert
93800 Epinay sur Seine
Tél / Fax : 01 39 83 68 81 Rép. : 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00


தங்க மாளிகை
THANKA MALIKAI
தங்க நகைகள்
ஆடை அணிகலன்கள்
அன்பளிப்பு பொருட்கள்...
199 rue de Fbg.St.Denis
75010 PARIS
01 42 05 39 05


NEW MADRAS
Spécialitées Indiene & Srilankaise
உங்கள் விருப்பம் போல்...விழாக்கள்,
கொண்டாட்டங்களுக்குத்தேவையான
உணவு வகைகளை
பெற்றுக்கொள்வதற்கு உகந்த இடம்!
5 Rue Caill - 75010 PARIS
Tél : 01 42 05 08 94


ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.
COIFFURE
VITHUSA
TÉL: 01 48 34 90 44
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152


Mob: 06 13 06 20 29
Tel : 01 39 80 85 23
BABY
BALOON DECORATION


SRI MAHAL
உங்கள் அனைத்து
மளிகைத்
தேவைகளுக்கும்.
197, rue du Fbg St.Denis
75010 PARIS
Tél : 01 46 07 83 12


S.P TRADERS
உங்கள்
மளிகைத்தேவைகள் அனைத்தும்
ஒரே கூரையின் கீழ்!
197,Rue Faubourg Saint-Denis
Tél : 01 40 36 53 99 75010 PARIS
M° : Gare du Nord / La Chapelle


La Gare
EXO MARCHE
DRANCY
RER முன்பாக.
அனைத்து மளிகைத்
தேவைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்.
214, rue Anatole France; 93700 Drancy
Tél : 01 48 95 24 80


AMBAL
STORE
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.St.Denis-75010 PARIS


M.S Photo
உங்கள் மங்கள
நிகழ்வுகளை
பதிவாக்கிக்கொள்ள.
RATHAN & RUBHAN
Tél: 06 69 08 29 38


திருப்பதி
வீடியோ
அனைத்து மங்கள
நிகழ்வுகளுக்கும்!!!
மகேசன் 01 60 17 74 86
WWW.THIRUPPATHYVIDEOS.COM

# ASCES

22 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

எமது பாடசாலையில் Collège, Lycée வகுப்பு பாடங்கள் கற்பிக்க Bac +2 தகைமையுள்ள மாணவர்கள் தேவை

E-mail : asces@free.fr Tél : 06 68 12 57 19

4வது கிளை DRANCYஇல் ஆரம்பம்
Grande section முதல் lycée வகுப்புகள் வரை
église Saint Louis
33, rue George Marie 93700 Drancy
Gare அருகில்
திங்கள் - வியாழன் வெள்ளி 17.30 மணி

LYCEE வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
LA COURNEUVEஇல்
35, rue Maurice Lachâtre
93120 La Courneuve
சனி - ஞாயிறு 9.30 -18.30 மணி
திங்கள் - வெள்ளி 14 - 20 மணி

Crimée
3, place de joinville 75019 paris
சனி - ஞாயிறு 9.30 - 18.30 மணி
புதன் 14 - 17 மணி

Bobigny
38, rue Garston Crepin 93000 Bobigny
திங்கள் - புதன் 17.30 - 19.30 மணி
சனி 14 -18 மணி

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்பு
03.03.2012 சனி - ஞாயிறு 1.30 மணி
12.02.2012 ஞாயிறு 10.30 மணி (ஒருநாள் வகுப்பு La Courneuve )
13.02.2012 திங்கள் 10.30 மணி (ஒருநாள் வகுப்பு Paris)
20.02.2012 திங்கள் - செவ்வாய் பி.ப 15.30 மணி
09.02.2012 வியாழன் - வெள்ளி 11 மணி (Bobigny)

Cambridge University பரீட்சைக்கான வகுப்புகள் (Starters, Movers, Flyers, Ket, Pet,Fle)

கணனி வகுப்பு HARDWARE
19-02-2012 ஞாயிறு 11 மணி
windows, office, hardware, web design

அண்மையில் இலங்கையிலிருந்து வந்த மாணவர்களுக்கான
விசேட பிரஞ்சு வகுப்புகள் ஏழு நாட்களும்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ, நடனம், சங்கீதம் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன் கிட்டார் வகுப்புகள்
தையல் icing, hairstyle, facial வகுப்புகள் ஆரம்பம்


புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் – பிரான்ஸ்
பாரதி விளையாட்டுக் கழகம் – அம்பாள் விளையாட்டுக் கழகம் – பிரான்ஸ்
இணைந்து வழங்கும் சித்திரைத் திங்களின் சிறப்பு நிகழ்வு

விண்ணப்ப முடிவு திகதி 20.02.2012

# முத்தமிழ் விழா 2012 13.05.2012

## அறிவுத்திறன் போட்டிகள் விண்ணப்பப்படிவம் 25.02.2012

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் யாவும் 20.02.2012க்கு முன்னதாக
ARIVUTHIRAN - 2012, Chez: CAFÉ BHARATH, 67, Rue Louis Blanc, 75010 PARIS

**போட்டிக்கான விதி முறைகள்:**
- போட்டிக்கான திகதியில் போட்டியாளர் குறித்த வயதெல்லையைத் தாண்டாதவராக இருத்தல் வேண்டும்.
- போட்டிக்கான விண்ணப்பங்கள் 20.02.2012 க்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கவும்.
- 20.02.2012க்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- ஒவ்வொரு போட்டிக்கும் அனுமதிக்கட்டணமாக தலா மூன்று யூரோக்களை (நிகழ்வு நடை பெறும் இடத்தில்) நேரடியாகச் செலுத்த வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதுமாகும்.

பரீட்சைக்கான மேலதிக விண்ணப்பப்படிவங்களையும், விபரங்களையும் கீழ்க்காணும் இணையத் தளங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
▶ pungudutivufrance.wordpress.com, ▶ pungudutivu.info ▶ tamilkathir.com, ▶ pathivu.com, ▶ sangathie.com, ▶ paristamil.com

### விண்ணப்ப படிவம் – அறிவுத்திறன் போட்டி – 2012

01. முழுப்பெயர் : ______________________

02. சொந்தமுகவரி : ______________________

______________________

03. தொலைபேசி இலக்கம்: ______________________

04. பிறந்ததிகதியும். இடமும்: ______________________

05. விண்ணப்பதாரர் சார்ந்த கல்வி நிறுவனம்: ______________________

______________________

விண்ணப்பதாரர் தனிப்பட்ட முறையில் பங்குகொள்ளுமிடத்து. பெற்றோர் அல்லது பாதுகாவலர்

06. பெயர்: ______________________

07. தொலைபேசி இலக்கம்: ______________________

அல்லது கைத்தொலைபேசி இலக்கம்: ______________________

______________________ஆகிய நான் மேலே தரப்பட்ட அத்தனை தரவுகளும் சரியானவை என உறுதிப்படுத்துவதுடன்.

1. ______________________ போட்டி

2. ______________________ போட்டி

ஆகிய ①/② போட்டிகளில் பங்கெடுத்துக்கொள்வதுடன். போட்டி விதி முறைகளைப் பூரணமாகப் பின்பற்றுவதுடன். நடுவர்களின் தீர்ப்பினையும் பூரண சம்மதத்துடன் ஏற்றுக்கொள்வேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.

______________________ ______________________

ஒப்பம் ஒப்பம்
பெற்றோர் – பாதுகாவலர் – ஆசிரியர் விண்ணப்பதாரர்


BEST SEA FOOD
(S.A.R.L - SANTHOSH - Import Export)
மீன்வகைகள் அனைத்தும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இங்கே நாடவும்
17 Rue Perdonnet, 75010 PARIS Tel : 01 44 65 34 18
Gare de Nord - La Chapelle
06 46 84 23 69


The First & Best Tamil Tailors in Paris
GOUNA TAILORS
பரிஸ் நகரில்
தமிழரின்
முதல்தரமான
தையலகம்.
8 RUE CAIL 75010 PARIS
TÉL : 01 42 05 03 95


Kingstravels
நியாயமான கட்டணம்
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்.
30, rue Philipe de Girard - 7510 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
kingstravels@orange.fr
La Chapelle | Gare du Nord


GOWRI-VILLAS
Spécialitées Indiene & Srilankaise
பிறந்த நாள், திருமணம் மற்றும்
உங்கள் வைபவங்கள் எதுவாகினும்
சைவ, அசைவ உணவுகள்,
பலகார வகைகள் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுகொள்ள...
53, rue Louis Blanc, 75010 PARIS
Tél : 01 42 05 72 65


Blanc Mesnil - Drancyயில் தமிழர்களுக்கான புதிய உதயம்
NARU COIFFURE
21, AV DE LA REPUBLIQUE
93150 LE BLANC MESNIL
06 59 49 16 80
RER: B - DRANCY


தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 யூரோவுக்கு மேல் பொருட்கள்
வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60


Garage Mahendran
திருத்த வேலைகள்,
Carosserie வேலைகள்,
85-87, rue de Strasbourg, 93200 St Denis
Tél.: 01 48 21 93 31 / 06 17 91 47 66
Hôpital Delafontaineக்கு அருகாமையில்
Lundi au Samedi 8h30 à 19h


Sport சாரதி பயிற்சி நிலையம்
14 ஆண்டுகள் இலங்கையிலும், பரிசில் ஐந்து வருடமும் சாரதி பயிற்சி நிலையம் வைத்திருந்த
அனுபவத்தவர்கள் Villiers Le Bel இல் தமிழ், ஆங்கிலம், பிரெஞ், ஹிந்தி மொழிகளிலான
பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பறிக்கப்பட்ட சாரதிப்பத்திரத்தை மீளப்பெறவும்
புள்ளிகள் பறிக்கப்படுவதைத் தடுக்கவும்,
இழந்த புள்ளிகளை மீளப்பெறவும்
Sport Auto Ecole - 4, rue de Jules Ferry, 95400 Villiers Le Bel
Tél.: 01.39.94.10.28 / 06.13.38.85.50


S.P.RAJU JEWELLERY
பழைய நகைகளுக்கு
புதிய நகைள் வழங்குகிறோம்!!!!
வாடிக்கையாளர்களுக்கு சிறப்புச் சலுகைகளை
வழங்கிவரும் நாம் பிறந்திருக்கும் 2012
இப்புதுவருடத்தில் தங்கநகை சேமிப்புத் திட்டத்தை
ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.
13 rue du Fbg St Denis
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail
75010 Paris
Tél: 01 46 07 43 42


KABISHA IMMOBILIER
வீடு வாங்குதல், விற்றல், வாடகை, மற்றும் கடன் வசதிகளும்
பொ. கண்ணதாசன்
அலுவலக நிர்வாகி
122, Avenue du Maréchal Leclerc - 93330 Neuilly sur Marne
Tél.: 01 43 81 99 46 - Fax: 09 70 62 70 36
email: kannathasan-kabishaimmobilier@hotmail.fr
www.kabishaimmobilier.com
FNAIM


ASIAN WEDDING PLANNER
Pour toutes vos réception dans le plus beaux salons
Décoration Florale
Location De Salle
Traiteur
Animation DJ
Location de Materiel
Service de Restauration
Video & Photo
மற்றும் உங்கள் மங்கள வைபவங்களுக்கான
அனைத்துத் தேவைகளுக்குமான எங்களின் சேவைகள்
Contact : Bernard (Ravi) : 06 03 46 89 87 - Jeeva : 06 43 30 45 88


தன இலட்சுமி மஹால்
THANAA LAKSHMI MAHAL
Textiles & Jeweleries
ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன் குறுகியகால இடைவெளியில்
தரமாகச் செய்து கொடுக்கப்படும்
பொன்னுருக்கல், தோடு குத்துதல், சிறப்பாக நடாத்தப்படும்
நவரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
Tél.: 01 48 36 40 75 - Port 06 50 17 51 91 - Fax: 01 79 64 12 61
122, Av P.V. Couturier - 93120 La Courneuve


Noisiel, Torcy, Lognes,
Noisy Champs வாழ் மக்களுக்காக....
இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும்
ஆசிய மளிகைப்பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடல் உணவு வகைகள்,
தொலைபேசி அட்டைகள்
Nila Cash & Carry
8, Allée Boris Vian - 77186 Noisiel
Tél: 09 51 89 69 80
Noisiel RERக்கு முன்பாக,
Mairie Annexe du Luzard, Police Municipale, Hotel Hipotel Marne la vallée,
பாடசாலைகள், சந்தை ஆகியவற்றுக்கு அருகில்
NILA CASH & CARRY
ALIMENTATION GENERALE
Lycamobile

# இது பிரிக்கமுடியாத உறவு !?

- விவேகன் -



எந்தவித அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் சிறீலங்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவில் பாதிப்பு ஏற்படாது என சிறீலங்காவுக்கான ஈரானிய தூதுவர் கலாநிதி நபி ஹசனிபோர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இந்த உறவினை அமெரிக்கா மற்றும் சிறீலங்காவின் எதிர்க்கட்சி உள்ளிட்ட எந்தவொரு தரப்பினராலும் கூட தடுக்க முடியாது என்றும் அவர் அவர் உறுதிபடக் குறிப்பிட்டார்.

ஈரானில் இஸ்லாமிய புரட்சி ஏற்பட்டு 33 ஆண்டு நிறைவு மற்றும் தேசிய தினம் ஆகியவற்றினை சனிக்கிழமை ஈரான் கொண்டாடியது. இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றியபோது ஈரானியத் தூதர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அமெரிக்காவினால் ஈரானிய எண்ணெய் தொடர்பில் தற்போது விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்பில் சிறீலங்காவுக்கான ஈரான் தூதுவர் மேலும் கூறுகையில், அமெரிக்காவின் ஒருதலைபட்சமான இந்த தடையின் ஊடாக சிறிய நாடுகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறான பொருளாதாரத் தடைகளினை ஐக்கிய நாடுகள் மாத்திரமே விதிக்க முடியும். அமெரிக்கா போன்ற ஏனைய நாடுகள் இவ்வாறான ஒருதலைபட்சமான தடைகளை விதிப்பது சட்ட விரோதமான செயலாகும் எனவும் ஈரான் தூதுவர் குற்றம்சாட்டினார்.

'ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளினால் பொருளாதாரத் தடை விதிக்கப்படுவது இன்று நேற்றல்ல. கடந்த 50 வருடங்களாக பொருளாதர தடைவிதிப்பு இடம்பெற்று வருகின்றது. ஆனால் குறித்த பொருளாதார தடைகளுக்கு மாற்றீடான வழிகளை ஈரான் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இது போன்றே தற்போது ஈரான் தொடர்பில் உலக நாடுகளுக்கு அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைக்கும் மாற்றுவழி காணப்படும் எனவும் அவர் தெரிவித்தார். அமெரிக்காவின் இந்தத் தடைகளுக்கு மத்தியில் எரிபொருள் மற்றும் தேயிலை ஆகியன தொடர்ச்சியாக இரு நாடுகளுக்கிடையில் பறிமாறப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். சுமார் 32 வருட நெருங்கிய உறவினை கொண்ட சிறீலங்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவு தொடர்ந்து நீடிக்கும் எனவும் சிறீலங்காவுக்கான ஈரான் தூதுவர் மேலும் அழுத்தமாகக் தெரிவித்தார். ஆனால், இந்த உறவு எவ்வளவு காலம் நீடிக்க அமெரிக்கா அனுமதிக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏனெனில், இந்தியா தனது மசகு எண்ணெய் தேவையில் 20 சதவீதத்தை ஈரான் மூலம் நிறைவேற்றி வருகின்றது. இதைக் குறைத்துக் கொள்ளும்படி இந்தியாவை அமெரிக்கா தொடர்ந்து நிர்பந்தித்து வருகிறது. எனினும், அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக இதைக் குறைக்க முடியாது என்றும் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி திட்டவட்டமாக தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய் அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார். இது இந்தியாவை அமெரிக்கா ஓரளவுக்கு என்றாலும் அடிபணிய வைத்து விட்டது என்றே கருதப்படுகின்றது.

கடந்த வாரம் வாஷிங்டனில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாயிடம் இதுகுறித்து பேசப்பட்டுள்ளது. அமெரிக்கா தனது நட்பு நாடுகளிடம், ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதியை படிப்படியாகக் குறைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதாக ரஞ்சன் மத்தாயிடம் கூறப்பட்டது. கடந்த டிசம்பர் 29ம் திகதி அதிபர் ஒபாமா கையெழுத்திட்ட கடிதம் ஒன்றில், ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி தொடர்பாக மாற்று வழிகளைக் கண்டுபிடிக்குமாறும், மசகு எண்ணெய் இறக்குமதியில் ஈரானைச் சார்ந்திருப்பதை (180 நாட்களுக்குள் அதாவது 6 மாதங்களுக்குள்) குறைத்துக் கொள்ளும்படியும் நட்பு நாடுகளிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யாமல் அதைத் தவிர்ப்பது எப்படி ? என்பது குறித்து டில்லியுடன் பேச்சு நடத்தப்பட்டதாகவும் நூலண்ட் தெரிவித்திருந்தார். ஒவ்வொரு நாடும் எந்தெந்த பணிகளுக்காக ஈரானை சார்ந்துள்ளது என்று தரம்பிரித்து அதனடிப்படையில் ஈரானை சார்ந்திருப்பதிலிருந்து விலகி இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே ஒவ்வொரு நாடும் அதன் செயல்பாடு அடிப்படையில் தரம் பிரிக்கப்படும் என்றார் நூலண்ட்.

இந்நிலையில், ஈரான் மீதான தடைகளால் சிறீலங்காவிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் அதனை நிவர்த்தி செய்வதற்கான தெரிவுகள் தொடர்பாகவும் விபரிப்பதற்காக, பயங்கரவாதிகளுக்கு நிதி அளித்தல் மற்றும் நிதி தொடர்பான குற்றச் செயல்களுக்கான அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச் செயலாளர் லியூக் பிரௌனின் கடந்த வியாழக்கிழமை கொழும்பு சென்றிருந்தார்.

ஈரானிடமிருந்து தனது எரிபொருள் தேவையில் 93 சதவீதத்தை சிறீலங்கா இறக்குமதி செய்கிறது. ஒபெக் அமையத்தின் இரண்டாவது பெரிய எண்ணெய் உற்பத்தியாளரான ஈரானிலிருந்து பெறப்படும் மசகு எண்ணெய் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் வடிகட்டப்படுகிறது. 50 ஆயிரம் பரல்கள் இந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் தினமும் வடிகட்டப்படுகின்றன. அதேவேளை, ஓமான் மற்றும் சவுதி அரேபியாவுடன் இறக்குமதிகள் தொடர்பாக சிறீலங்கா பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கிறது. ஆனால், ஓமானிய மசகையோ சவுதியின் மசகையோ நேரடியாக சபுகஸ்கந்தவில் சுத்திகரிக்க முடியாது. இதனால், குறிப்பிட்டளவு சதவீத மசகே ஈரானிய மசகுடன் சேர்த்து சுத்திரிக்க வேண்டியுள்ளது. அத்துடன் முக்கியமான மற்றொரு விடயமாகக் காணப்படுவது ஈரான் 7 மாத கடனுக்கு அனுமதியளித்திருக்கும் விடயமாகும். இந்தக் கடன்தான் சிறீலங்காவை ஈரானை விட்டுப் பிரியாமல் ஒட்டி உறவாட வைத்துள்ளது. எனவே, சிறீலங்காவை ஈரானிடம் இருந்து பிரித்தெடுக்கவேண்டியது அமெரிக்காவிற்கு மிகவும் முக்கியமாகவுள்ளது.

> **இந்தக் கடன்தான் சிறீலங்காவை ஈரானை விட்டுப் பிரியாமல் ஒட்டி உறவாட வைத்துள்ளது. எனவே, சிறீலங்காவை ஈரானிடம் இருந்து பிரித்தெடுக்கவேண்டியது அமெரிக்காவிற்கு மிகவும் முக்கியமாகவுள்ளது.**

கொழும்பு சென்றிருந்த அமெரிக்க திறைசேரியின் உதவி செயலாளர் லியூக் பிரௌனின் தலைமையிலான அமெரிக்கத் தூதுக்குழு, இலங்கை பெற்றோலியத் துறை செயலாளர் மற்றும் ஈரானுக்கான சிறீலங்காவின் கொடுப்பனவுகளில் நேரடியாக சம்பந்தப்பட்ட சிரேஷ்ட அதிகாரியை சந்தித்துப் பேசி அவர்களைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் இறங்கியிருந்தனர்.

ஆனால், இந்த விடயத்தில் அமெரிக்காவிற்கு எதிராகவே சிறீலங்கா செயற்பட முனைந்துள்ளதாக கூறப்படுகின்றது. காரணம், ஈரானின் அணு அபிலாசைகளுக்கு டொலர் நிதியாக பயன்படுத்தப்படுவதாக அமெரிக்கா கருதுகின்றது. டொலர்கள் மூலமான கொடுக்கல் வாங்கல்களை துண்டித்தால் ஈரானின் நடவடிக்கைகளை தடுக்க முடியும் என்று கருதித்தான் ஈரான் மீதான தடை அறிவிப்பை அமெரிக்கா கொண்டு வந்தது. ஆனால், எண்ணைய்க்கு டொலரைக் கொடுக்கும் சிறீலங்காவிற்கு இது அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பாக மாற்று நடவடிக்கைகளைக் கண்டறியுமாறு கடந்த வாரம் சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதிகாரிகளைப் பணித்திருந்தார். இதனையடுத்து டொலர் மூலமாகச் செலுத்துவதுதான் பிரச்சினை என்றால், வேறு நாணயங்களில் பணத்தைச் செலுத்தி ஈரானைப் பாதுகாக்க சிறீலங்கா முனைந்துள்ளது. அதாவது, ஈரானிய மசகு எண்ணெய்த் தேவைகளுக்கான கொடுப்பனவை ரூபாவின் மூலம் மேற்கொள்வது தொடர்பாக இந்தியா பரிசீலித்து வருகிறது. இந்தியாவின் முடிவைப் பின்பற்றி டொலரிலும் பார்க்க ஏனைய நாணயங்களில் மசகு எண்ணெயைக் கொள்வனவு செய்வதன் மூலம் ஈரான் மீதான அமெரிக்காவின் தடைகளினால் ஏற்படும் பாதிப்பை தாங்கள் தவிர்த்துக்கொள்ளவதுடன், ஈரானின் நட்பையும் பாதுகாக்க முடியும் என்று சிறீலங்கா கருதுகின்றது.

சிறீலங்கா எடுத்துள்ள இந்த முடிவு அமெரிக்காவிற்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது. மசகு எண்ணையின் விலையை டொலரில் இருந்து ஈரோவிற்கு மாற்ற முனைந்தமையாலேயே ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசைன் அழிக்கப்பட்டதாகவும், இதே சிந்தனை கொண்ட வெனிசுவேலா அதிபர் ஹுகோ சாவேஸ் தற்போது அமெரிக்காவினால் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்நிலையில், ஈரானின் எரிபொருளையும் வேறு நாணயங்களுக்கு மாற்ற அமெரிக்கா அனுமதிக்காது என்றே கருதுகின்றார்கள். இந்நிலையில், எரிபொருள் கொடுப்பனவிற்காக சிறீலங்கா வேறு நாணயத்தைப் பயன்படுத்த முனைவது அமெரிக்காவிற்கு எதிரானதாகவே கருதப்படும். இது சிறீலங்காவிற்கு பாரிய ஆபத்தான ஒன்றாகவே இருக்கும் என்றும் கூறுகின்றார்கள். எனவே, சிறீலங்காவின் மீதான அமெரிக்காவின் கோபத்தின் எதிரொலி முதலில் ஜெனீவாவில் ஒலிக்கலாம் என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எதனையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். பார்ப்போம்.

## கபறினா இறைச்சிக்கடை

தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...

BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc
75010 Paris

207, rue fbg st Denis
75010 Paris

Mo : La Chapelle Ou Gare du Nord

Tel : 01 40 34 05 35 Fax : 01 40 34 09 76

Tel : 01 46 07 46 35 Fax : 01 46 07 41 30



## New LUCKY Coiffeur

உங்கள்
எண்ணம் போல்
சிகை அலங்காரம்
செய்துகொள்ள!

40, rue Philippe de Girard,
75018 PARIS

## 3S VDR

Tamil, Hindi video
Cartes Teléphoniques

21. Bd de la Chapelle
75010 Paris

01 42 09 87 70 / 06 17 06 76 33

## La Courneuve Cash & Carry

உங்கள் மளிகைத்
தேவைகள்
அனைத்திற்கும்

1, rue des Prevoyants
93120 La Courneuve

Tél.: 06 60 20 61 47

## VICHNESH SHOP

அனைத்து வகையான மளிகைப்
பொருட்கள் மற்றும் அனைத்து
நாடுகளுக்கான தொலை பேசி
அட்டைகள் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்

8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

## சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்

நகர சபையில் திருமணம் செய்ய, நகர சபையில் திருமண அறிவிப்பு கொடுக்க, குடும்பத்தை ஸ்பொன்சர் செய்ய, வெளிநாட்டு அமைச்சு மூலம் ஸ்பான்சர் செய்ய, தேசிய பிரஜா உரிமை கோர, பொலிசில் வாகனச்சாரதிப் பத்திரம் மாற்ற, பொலிசில் வதிவிட உரிமைப் பத்திரம் (விசா) பெற, நீதிமன்றத்தில் பெயர் மாற்றம் செய்ய, ஒபிரா மற்றும் கமிசனுக்கு விண்ணப்பிக்க

- எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
- நேரில் வருபவர்களுக்கு நாளே மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

## MINI MARCHÉ

பலசரக்கு வாணிபம்

உங்கள் அனைத்து மளிகைத் தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்

4, rue Ernest Prevost
93330 Aubervilliers

01 49 37 15 97

## NIPPON COIFFEUR



La Courneuve இல்
அனுபவமிக்க சிகை
அலங்கரிப்பாளர்களின்
கைவண்ணத்தில்

19 av Paul Vaillant Couturier Port: 0751301218
93120 LA COURNEUVE M° : La Courneuve

## ARC EUROPE DRANCY

138. Avenue Henri Barbusse - 93700 Drancy

VENTE GSM ACCESSOIRES

Reparation et Deblocage

138. Avenue Henri Barbusse - 93700 Drancy
Tel 0033 9 50 40 84 52 - Fax 0033 9 67 03 63 69
Portable 0033 6 11 55 90 84
arceurope@hotmail.fr

## RATHUS COIFFURE



உங்கள் எண்ணம் போல
சிகை அலங்காரம்
செய்து கொள்ள

Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY Tél.:09 53 04 00 57

## Appartement விற்பனைக்கு

Blanc Mesnil இல் நல்ல நிலையில் உள்ள
F4 Appartement விற்பனைக்கு உள்ளது.
விலை 195 000 €
Le bourgetயில் இருந்து 152ம் இலக்க Busல் 6நிமிடம்
Gare du Nordல் இருந்து 350ம் இலக்க Busல் 20நிமிடம்
தொடர்புகளுக்கு :
01 48 19 58 42 / 07 61 58 89 96

## NSV CASH & CARRY

ALIMENTATION GENERALE

N.S.V. பல் பொருள் வாணிபம்

IMPORT - EXPORT

TEL /FAX : 01 48 60 96 45

10 Ave. Henri Barbusse 93150 Le Blanc Mesnil

## GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால்
தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப் பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும்
நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு
Monthly or Quarterly pest Control Vist மிகவும் மலிவான
விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
079 8358 9993
077 2346 7012

## VANNI BOUCHERIE



லா சப்பலில்
உங்களை வரவேற்கின்றது.

VANNI BOUCHERIE
வன்னி இறைச்சிக்கடை

26 rue perdonnet 75010 Paris
M°: La chapelle / Gare du nord
Tél : 01 40 36 15 63 / Port: 06 68 96 43 16

## DRANCY M.G.A COIFFURE

மக்களின் நன்மதிப்பைப்பெற்ற
சிகையலங்கார நிலையம்

M.G.A COIFFURE
முடிவெட்டு 7€



20 rue Roger Salengro, 93700 Drancy
திரைசரி பப்ளிக்கு முன்னால்
Bus : 146/148 Arrêt : Georges Ducerf
Tel : 06 66 66 06 13

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## நறுமணப் பொருட்கள் உற்பத்தியில் உலகில் இந்தியா முதலிடம்

நறுமணப் பொருட்கள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ளது. 2000ம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் ஒட்டுமொத்த அளவில் சுமார் 22.56 இலட்சம் தொன் நறுமணப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கடந்த் பத்து ஆண்டுகளில் உற்பத்தி மேலும் அமோக வளர்ச்சி கண்டுள்ளது. இந் நிலையில் இந்தியாவின் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதியும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நறுமணப் பொருட்கள் பட்டியலில் மிளகாய், மிளகு, மஞ்சள், சீரகம், தனியா, வனிலா, ஜாதிக்காய், ஏலம், இஞ்சி உள்ளிட்ட பல பொருள்கள் இடம்பெறுகின்றன.



இந்தியாவின் நறுமணப் பொருள்களுக்கு உலகம் முழுவதுமாக நல்ல வரவேற்புள்ளது. அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்றில் உலக நாடுகளின் நறுமணப் பொருட்கள் உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பல்வேறு தகவல்கள் வெளிவந்துள்ளன. அத்துடன் சில குறிப்பிட்ட பொருள்களின் பிறப்பிடம் பற்றிய புள்ளிவிவரங்களும் தரப்பட்டுள்ளன. உலகில் கராம்பு முதன் முதலாக தோன்றிய நாடு இந்தோனேசியாவில் உள்ள மோலுக்காஸ் ஆகும். லவங்கத்தின் பிறப்பிடம் இந்தியா மற்றும் இலங்கை என தெரிகிறது. மிளகு முதலில் மேற்கு இந்தியாவில் மலைப்பிரதேசங்களில் தோன்றியுள்ளது. ஜாதிக்காயின் பிறப்பிடம் பப்புவா நியூ கினியா மற்றும் மோலுக்காஸ் ஆகியவை ஆகும். வனிலாவின் பூர்வீகம் மெக்சிகோ என்று கூறப்படுகிறது.

சர்வதேச அளவில் நறுமணப் பொருட்கள் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் இருந்து வரும் நிலையில் சீனா இரண்டாவது இடத்திலும் (5.85 இலட்சம் தொன்), இந்தோனேசியா மூன்றாவது இடத்திலும் (2.61 இலட்சம் தொன்), பாகிஸ்தான் நான்காவது இடத்திலும் (2.08 இலட்சம் தொன்), நைஜீரியா ஐந்தாவது இடத்திலும் (1.46 இலட்சம் தொன்), எதியோப்பியா ஆறாவது இடத்திலும் (1.11 இலட்சம் தொன்), மெக்சிகோ ஏழாவது இடத்திலும் (91,755 தொன்) உள்ளன. மற்ற நாடுகள் அனைத்துமாக ஆண்டுக்கு 1.05 இலட்சம் தொன் நறுமணப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, உலகின் மொத்த நறுமணப் பொருட்கள் உற்பத்தி ஏறக்குறைய 49 இலட்சத்து 39 ஆயிரத்து 990 தொன் என கணக்கிடப் பட்டுள்ளது.

இதில் உலக அளவில் ஏறக்குறைய 4 இலட்சம் தொன் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 2011ம் ஆண்டில் 150 கோடி டொலருக்கு நறுமணப் பொருட்கள் ஏற்றுமதியாகியுள்ளன. இதில், மதிப்பின் அடிப்படையில் மிளகு ஏற்றுமதி 33 சதவீதமாகவும் உள்ளது. நறுமணப் பொருள்களில் வர்த்தகப் பயிர்களில் ஒன்றாக உள்ள மிளகு, உலகம் முழுவதுமாக நறுமணப் பொருள்களில் தனி செல்வாக்கு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் இது உணவு வகைகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மருத்துவ குணங்கள் உள்ளதாக நம்பப்படுகிறது. குடமிளகாய் ஏற்றுமதி 22 சதவீதமாகவும், வெந்தயம் ஏற்றுமதி 15 சதவீதமாகவும் உள்ளது. மஞ்சள் மற்றும் இஞ்சி ஏற்றுமதி முறையே 8 சதவீதம் மற்றும் 6 சதவீதமாக உள்ளது. ஏலக்காய் ஏற்றுமதி 4 சதவீதமாகவும், வனிலா ஏற்றுமதி 2 சதவீதமாகவும் இருந்து வருகிறது.

## 8700 பேரை நீக்க பெப்சி முடிவு

குளிர்பான தயாரிப்பு நிறுவனமான பெப்சி 8700 பேரை வேலை நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளது. 30 நாடுகளில் 3 இலட்சம் பேர் பெப்சி நிறுவனத்தில் பணிபுரிகின்றனர். இதில் தற்போது 3 விழுக்காடு அளவுக்கு ஆட்குறைப்பு மேற்கொள்ளப்படுகிறது. இந் நிறுவனத்தின் 4வது காலாண்டு முடிவை வெளியிட்ட பெப்சி நிறுவனமானது, 2012ம் ஆண்டுக்கான திட்டமிடல்களையும் விலை குறைப்பு அறிவிப்புகளையும் தெரிவித்துள்ளது. இதில் 8700 பேரை பணி நீக்கம் செய்வதுடன் குளிர்பான விளம்பரங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கவும் முடிவு செய்துள்ளதாக அதன் முதன்மை செயல் அதிகாரி இந்திரா நூயி தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் விளம்பரங்களுக்கு தற்போது செலவிடப்படும் தொகையான 500 மில்லியன் டொலரை 600 மில்லியன் டொலராக உயர்த்தவும் பெப்சி நிறுவனம் முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். குறிப்பாக வட அமெரிக்கா சந்தையை இலக்கு வைத்து விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும் என்றார் நூயி. மேலும் தற்போதைய நிச்சயமற்ற பொருளாதார நிலை நீடிக்குமேயானால் நடப்பு 2012ம் ஆண்டு தமது நிறுவனத்துக்கு இலாபமும் நட்டமும் இல்லாத இடைநிலை ஆண்டாக இருக்கும் என்றார் அவர். மற்றொரு குளிர்பான நிறுவனமான கொக்கோ கோலா, கடந்த செவ்வாய்க் கிழமையன்று விலைக் குறைப்பை அறிவித்திருந்த போதும் ஆட்குறைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

Shamrock Education Centre
வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில்
14 rue J B Clement 94200 Ivry Sur Sein
M 7: Mairie d'Ivry RER (C) Ivry sur seine
23 rue du Depart 75014 Paris
திங்கள் முதல் ஞாயிறு வரை M Montparnasse
Tel : 7J7: 01 45 48 82 40 / 06 08 02 68 21
shamrockeducation@yahoo.fr
திறமையான ஆசிரியர்களினாலும், பல்கலைக்கழக மாணவிகளினாலும் கலைப்பாடங்கள் உட்பட அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
www.shamrockeducation.net / www.shamrockeducation.com

## அன்பார்ந்த சிங்கள......

*பெற பயங்கரவாத எதிர்ப்பு என சிங்கள அணி பயன்படுத்திய சொல் போல போர்க் குற்றச்சாட்டும், பொதுசன வாக்கெடுப்பும் உலக ஆதரவைப் பெற தமிழர்கட்கு கிடைத்திருக்கும் இரண்டு மந்திரச் சொற்கள் ஆக உள்ளது. உங்கள் அளவிற்கு ஒற்றுமையுடன் இருந்து ஈழத் தமிழர்கள் இவ்விரண்டு சொற்களையும் பயன்படுத்தி உலக மக்களிடமும், உலக நாடுகளிடமும் சொல்வார்களேயானால் அவர்கள் ஈழம் வெல்லும் வாய்ப்பு அதிகம். மொத்தத்தில் சர்வதேச நிலமைகள் உங்களைக் காட்டிலும் தமிழர்களுக்கே அதிகம் சாதகமாக உள்ளது. இந்த நிலமைகள் உங்களுக்கு மூன்று எதிர்கால வாய்ப்புக்களைக் கொடுக்கலாம்.*

1. ***ஈழ விடுதலையின் மூலம் உங்கள் அந்நியச் சார்பை நிறுத்தி ஓரளவேனும் சுதந்திர நாடாக தொடர்வது.***
2. ***ஈழத்தை தடுக்கும் முயற்சியில் வெற்றியடைந்து அம் முயற்சிக்கான விலையாக நீங்கள் அந்நியர் கையில் அடிமை நாடாவது.***
3. ***ஈழத்தைத் தடுக்கும் முயற்சியிலும் தோல்வியடைந்து நீங்களும் அந்நியர்கையில் அடிமை நாடாவது.***

*இயல்பாகவே உங்கள் மனம் ஒரு நான்காவது வாய்ப்பை தேடும். ஈழத்தையும் தடுத்து நீங்களும் சுதந்திர நாடாவது என்பதே.*

*அந்த நான்காவது வாய்ப்பு உண்மையில் அப்படியொரு வாய்ப்பு சாத்தியமில்லை. உங்களின் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு இவற்றை விலை கொடுக்காமல் நீங்கள் ஈழத்தை தடுக்க அந்நிய நாடுகளின் உதவியை பெறமுடியாது. என்ன விசித்திரம் என்றால், ஈழவிடுதலையும், உங்கள் எதிர்கால நலன்களும் இப்போது ஒரே திசையில் இணையாக பயணம் செய்யத் தொடங்கியிருப்பதுதான். எனவே மேற்சொன்ன 3 எதிர்கால வாய்ப்புகளில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது, ஈழத்தின் எதிர்காலத்தைப் பற்றியது மட்டுமல்ல, உங்கள் எதிர்காலத்தையும் பற்றியது என்பதை கணக்கில் கொள்க.*

*தமிழர் மீதான கடந்த அரை நூற்றாண்டு தாக்குதல்களில் சிங்கள மக்களுக்கு பெரிதும் நேரடியாக பங்கில்லை. இதனாலேயே சிங்கள மக்களுக்கு இவற்றில் பொறுப்பு இல்லை என்று நீங்கள் இனி ஒதுங்கிக் கொள்ள முடியாது. உங்கள் அரசுகளும், இனவெறியர்களும் செய்து வரும் வெறியாட்டங்களுக்கு ஆதரவு தரும் பாத்திரத்தை ஆரம்ப காலம் முதல் நீங்கள் வகித்துவருகீறீர்கள். உங்களின் இந்த ஆதரவைப் பெறவே, சிங்கள அரசியல் கட்சிகள் இன அரசியல் நடத்தி இன்று இரண்டு இலட்சம் தமிழர்களை அழித்துள்ளன என்பதை நீங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். ஆரம்பக்காலங்களில் இந்த ஆதரவுக்கு இன அரசியலின் அறியாமை ஒரு காரணம் எனக் கொண்டாலும், இன்றுவரை அதே அறியாமை நீடிப்பதாக எடுத்துக்கொள்ள முடியாது. எனவே தான் இக்கடிதம் உங்கள் அரசுகளை மட்டுமன்றி, உங்களையும் தார்மீகப் பொறுப்பாக்கும் வண்ணம் எழுதப்படடுள்ளது.*

*கடந்த 2011 உள்ளாட்சித் தேர்தலில் சிங்களவர்களும் தமிழர்களும் நேரெதிரான வகையில் வாக்களித்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் அனைத்து சிங்கள கட்சிகளையும் நிராகரித்து தமிழர் கட்சிகளுக்கு மட்டுமே வாக்களித்திருக்கிறார்கள். நீங்களோ, அதைவிட ஒருபடி மேலே போய், கட்சிகளையெல்லாம் நிராகரித்துவிட்டு 1,40,000 தமிழர்களை கொன்ற இராஜபட்சேவை மட்டுமே ஆதரித்திருக்கிறீர்கள். இன்னமும் இலங்கையின் ஒற்றுமைக்காக வாதாடும் சிலர் சொல்கீறார்கள், இது உங்களின் அறியாமை என்று. நீங்கள் தான் அவர்களுக்குச் சொல்லவேண்டும், இது உங்களின் அறியாமையா? தெளிவா? என்று.*

*உங்கள் தலைவர்கள் உலகத்திற்குச் சொல்லலாம், இது உள்ளாட்சி தேர்தல் என்றும், இதையெல்லாம் வைத்து ஈழமக்கள் ஈழ உணர்வோடு வாக்களித்திருக்கிறார்கள் என கருதக்கூடாது என்றும். அப்படியானால் ஈழமக்கள் உங்களிடமிருந்துந்து பிரிந்து செல்ல விரும்பவில்லை என்று நேரடியாகவே வாக்களித்து நிரூபிக்கும்? வண்ணம் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்திவிடுங்களேன். உண்மை தெரியட்டும். ஒரு சனநாயகமான தீர்வு கிடைக்கட்டும். உங்களில் எத்தனை சிங்களர்கள் இதற்கு நேர்மையுடன் தயாராக இருக்கிறீர்கள்? ஈழமக்கள் ஈழம் வேண்டாம் என்று வாக்களித்து விட்டால், ஈழத்தைத் தடுக்க நீங்கள் எந்த அந்நியர் காலிலும் விழவேண்டியதில்லையே. ஈழம் அமைவதைத் தடுக்க உங்களுக்கு இப்படி ஒரு நேர்மையான வழி இருக்கும் போது, எதற்கு உங்கள் நாட்டை அந்நியர்க்கு அடகு வைக்க வேண்டும்?*

*உங்கள் சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைப்படியில் நீங்கள் இருக்கும் வரை, நடுநிலையான கருத்துக்கள் கூட தமிழர்களின் நயவஞ்சகமாகவே உங்களுக்கு தோன்றும். சரி, தமிழர்களின் கருத்தை நீங்கள் கேட்க வேண்டாம். உங்கள் இனத்திலேயே சிங்களர், தமிழர் என்று பேதம் பார்க்காமல் நீதிக்கும், நேர்மைக்கும் குரல் கொடுக்கும் பல சிறந்த மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் கருத்துக் கேளுங்கள். எது உண்மை, எது நேர்மை என்பது விளங்கும். ஈழத்திற்கெதிரான போரில், உங்கள் இனத்தின் எத்தனை ஆயிரம் இளைஞர்களின் இன்னுயிரை இராணுவத்தில் இழந்திருப்பீர்கள். எவ்வளவு பொருளாதார முன்னேற்றங்களை இழந்திருப்பீர்கள். இவற்றிற்கும் மேலாக இன்று உங்கள் நாடே ஒரு சர்வதேசப் பொறியில் சிக்கி உள்ளது. இதற்கு மேலும் என்ன விலை கொடுத்தாவது ஈழத்தை அழிப்போம் என உங்கள் சிங்கள ஆட்சியாளர்கள் செயல்படுகிறார்கள். இப்படியே நீங்கள் விலை கொடுத்துக் கொண்டே இருங்கள்? உங்கள் ஆட்சியாளர்கள் விலை பெற்றுக்கொண்டே இருப்பார்கள். ஒரு நாள் நீங்கள் அனைத்தையும் இழந்து நிற்கும் பொழுது, ஈழம் மலர்ந்து நிற்கப் போகிறது. எதிர்காலத்தில் சனநாயகமடைந்த சிங்கள இனம் கடந்த தலைமுறையினரின் அநாகரீக செயல்களுக்காக தலை குனிந்து நிற்கப்போகிறது.*

*ஒரு கடிதத்திற்கான நாகரீகத்தையும் மீறி உங்களை கடுமையாக எழுதிவிட்டேனோ, என எண்ணி ஒரு முறை படித்துப்பார்க்கிறேன். இல்லை, உண்மைகள் கடுமையாக இருப்பதால் ஒரு பொய்மையற்ற கடிதம் கடுமையாக அமைந்துவிட்டது என உணர்கிறேன். உங்கள் நியாயங்களை இக்கடிதம் எடுத்துரைக்கவுமில்லை என நீங்கள் நினைக்கலாம். பிறர் மண்ணை ஆக்கிரமிப்பவர்கள் எவராயினும், அவர்கள் பக்கம் என்ன நியாயத்தை தேடுவது என எனக்குத் தெரியவில்லை. எப்படியிருப்பினும் இக்கடிதம் உங்களுக்கு கசப்பானதே. நோயைத்தீர்க்கும் மருந்தின் கசப்பாகவே நீங்கள் இதைக் கொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் இக்கடிதம் உங்கள் மனதை நிச்சயம் புண்படுத்தும். அதற்காக மனம்வருந்தி இக் கடிதத்தை முடிக்கிறேன்.*

***பத்தாயிரம் ஆண்டுகள் பின்னே போனால்,***
***நாமெல்லாம் சகோதர குடும்பங்கள்.***
***ஒரு இலட்சம் ஆண்டுகள் பின்னே போனால்***
***ஒரு தாய்க்கு பிறந்த சகோதரர்கள்,***
***இதில் யாருக்கு யார் அந்நியர்கள்?***

*(முற்றும்)*



இனியவைகூறல் குறள்-94

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

இன்சொல் பேசி எல்லோரிடத்திலும் கனிவுடன் பழகுவோர்க்கு நட்பில் வறுமை எனும் துன்பமில்லை.

# இதுவும் விலகிப்போகும்

மன்னர் வீரமல்லர், போர்க்களத்தில் இருந்து மின்னல் வேகத்தில் குதிரையில் தப்பித்து வந்து கொண்டிருந்தார். களைப்பு தாங்காமல் அடர்ந்த காட்டிலிருந்த அந்த மரத்தடியில் அமர்ந்து இளைப்பாறினார்.

'அப்பாடா! இனி எதிரிப்படைகளால் எனக்கு எந்த ஆபத்தும் இல்லை' என்று சொல்லி நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

'இதுவும் விலகிப்போகும்' என்று பக்கத்து ஆசிரமத்தில் இருந்து வந்த குரலைக் கேட்டு, ஆசிரமத்துக்குள் நுழைந்தார் மன்னர்.

'சூரியனைக் கண்டு தாமரை இதழ் விரிக்கும், நிலவைக் கண்டு அல்லி இதழ் விரிக்கும். இது நிலையன்று. இதுவும் விலகிப்போகும். வெற்றியும் விலகும், தோல்வியும் விலகும்' என்று தன் சீடர்களுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார் குரு. மன்னர் நிற்பதைப் பார்த்த அவர், மன்னரின் அருகே வந்தார்.

'குருவே, வணக்கம். நான் மருத நாட்டு மன்னன். போரில் தோற்று நாடிழந்து இங்கே தப்பி வந்துள்ளேன்' என்று வேதனையோடு சொன்னார் வீரமல்லர்.

'இதுவும் விலகிப்போகும்' என்று ரத்தினச் சுருக்கமாக ஆறுதல் சொல்லி, குடிலுக்கு அழைத்துச் சென்றார் குரு.

மன்னருக்கு உணவளித்து இளைப்பாற வைத்தார். அப்போது எதிரிப்படை வந்து மன்னரைக் கைது செய்தது.

குரு மன்னரைப் பார்த்து, 'இதுவும் விலகிப்போகும்' என்று புன்னகைத்தபடி வழி அனுப்பி வைத்தார்.

வீரமல்லரை, தங்களை மன்னர் தங்கி இருக்கும் இடத்திற்கு காவலர்கள் அழைத்துச் சென்றனர். அப்போது எதிரி மன்னர் தன்னைத் துரத்தும் சிங்கத்திடம் இருந்து தப்பித்து ஓடி வந்து கொண்டிருந்தார். அதைக்கண்ட படை வீரர்கள் தாங்கள் உயிர் தப்பினால் போதும் என்று வீரமல்லரை விட்டுவிட்டு ஓடினர்.

'என்னைக் காப்பாற்றுங்கள்...' என்று வீரமல்லர் பின் மறைந்து நின்றார் எதிரி மன்னர்.

சிங்கத்தைக் கொன்று எதிரி மன்னரைக் காப்பாற்றினார், வீரமல்லர்.

'நான் உன் பகையாளி. உன்னுடைய நாட்டையே அபகரித்தவன். இருந்தும் என் உயிரைக் காத்த நீயே உயர்ந்த மனிதர். கைப்பற்றிய உன்னுடைய நாட்டை திருப்பி அளிக்கிறேன். இனி நாம் நண்பர்களாக இருப்போம்' என்று கூறி, வீரமல்லரை கட்டிக் கொண்டார் எதிரி மன்னர்.

'இதுவும் விலகிப்போகும்' என்று குரு சொன்னதன் பொருள் வீரமல்லருக்கு இப்போது தெளிவாகப் புரிந்தது.

*- தா. ஆறுமுகம்*

## தெனாலி ராமன் கதைகள்

# நீர் இறைத்த திருடர்கள்

ஒரு சமயம் விஜயநகர ராஜ்யத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. பருவ மழை தவறி விட்டதால் குளம், குட்டை, ஏரி எல்லாம் வற்றிவிட்டது. தெனாலிராமன் வீட்டுக் கிணற்றிலும் நீர் குறைந்து அதிக ஆழத்திற்குப் போய்விட்டது. இதனால் தினமும் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச மிகவும் சிரமப்பட்டான் தெனாலிராமன்.

இந்த சமயத்தில் ஒரு நாள் இரவு நான்கு திருடர்கள் தன் தோட்டத்தில் பதுங்கி இருப்பதைக் கண்டான். உடனே வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம், "அடியே, நம் நாட்டில் பருவ மழை தவறிவிட்டதால், பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எனவே நிறைய திருட்டு நடக்க ஆரம்பித்து விட்டது. பஞ்ச காலம் முடியும் வரை நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எனவே நாம் ஒரு காரியம் செய்வோம்" என்று வெளியே பதுங்கியிருந்த திருடர்களுக்கு கேட்கும் வண்ணம் உரத்த குரலில் பேசினான்.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று தெனாலிராமனின் மனைவி கேட்டாள்.



"வீட்டிலுள்ள நகை, மற்றும் விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் இந்தப் பெட்டியில் போட்டு பூட்டு. நாம் இந்தப் பெட்டியை யாருக்கும் தெரியாமல் கிணற்றில் போட்டு விடலாம். பஞ்சம் தீர்ந்து திருட்டுப் பயம் ஒழிந்ததும் மீண்டும் கிணற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்" என்று முன்போலவே உரக்கக் கூறினான் தெனாலிராமன். திருடர்களும் இதைக் கேட்டனர்.

அதே சமயம் இரகசியமாக தெனாலிராமன் தன் மனைவியிடம் திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கூறி ஒரு பழைய பெட்டியில் கல், மண், பழைய பொருட்களை எல்லாம் போட்டு மூடினான். அந்தப் பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கி வந்து கிணற்றுக்குள் 'தொப்' பென்று போட்டு விட்டு வீட்டுக்கு திரும்பிவிட்டான் தெனாலிராமன்.

திருடர்களும், தெனாலிராமன், வீட்டிற்குள் புகுந்து திருடும் நம் வேலையை சுலபமாக்கிவிட்டான். நாம் எளிதாக கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

பெட்டியை எடுக்க கிணற்றுக்கு அருகே வந்தனர் திருடர்கள். கிணறு ஆழமாக இருந்ததால் உள்ளே இறங்கப் பயந்த திருடன் ஒருவன், ?அண்ணே! தண்ணீர் குறைவாகத்தான் உள்ளது. நாம் நால்வரும் ஏற்றம் மூலம் மாற்றி மாற்றி நீரை இறைத்து விட்டால் சுலபமாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு போகலாம்? என்று கூறினான். அதைக்கேட்ட மற்றவர்களும் அவன் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டனர். அதன்படி ஒருவர் மாற்றி ஒருவர் ஏற்றம் மூலம் நீர் இறைக்கத் தொடங்கினர்.

சற்று நேரம் கழித்து வேறு வழியாக தோட்டத்திற்கு சென்ற தெனாலிராமன், திருடர்கள் இறைத்து ஊற்றிய நீரை தன் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கும், கொடிகளுக்கும், பயிர்களுக்கும் பாயுமாறு கால்வாயைத் திருப்பி விட்டான்.

இப்படியே பொழுது விடிந்தது விட்டது. ஆனால் கிணற்றில் தண்ணீர் குறையவில்லை. இதனால் திருடர்களும், "நாளை இரவு மீண்டும் வந்து நீரை இறைத்து விட்டு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று பேசிக் கொண்டு சென்றனர்.

அப்போது தோட்டத்திலிருந்து வந்த தெனாலிராமன் அவர்களைப் பார்த்து, "நாளைக்கு வரவேண்டாம். நீங்கள் இறைத்த தண்ணீர் இன்னும் மூன்று தினங்களுக்குப் போதும். எனவே மூன்று தினங்கள் கழித்து வந்தால் போதும். உங்கள் உதவிக்கு நன்றி நண்பர்களே!" என்று கூறினான்.

திருடர்களுக்கு இதைக் கேட்டதும் மிகவும் அவமானமாய் போய்விட்டது. தங்களை ஏமாற்றி நீர் இறைக்கச் செய்த தெனாலிராமனின் அறிவை மனத்திற்குள் எண்ணி வியந்தனர். மேலும் அங்கே இருந்தால் எங்கே மாட்டிக் கொள்வோமோ என்ற அச்சத்தில் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தனர் திருடர்கள்.


# இளையோர் உலகம்

இளையோர்களே இது உங்களுக்கான உலகம். இங்கு உங்கள் ஆக்கங்களை, ஆரோக்கியமான விடயங்களை மற்றவர்களுடன் எழுதிப் பகிர்ந்துகொள்ளுங்கள். இது உங்களுக்கான களம்...

## புதிர்க் கேள்வி

### மறைந்த விலங்கு

இந்தக் குதிரைக்குள் இன்னொரு விலங்கு மறைந்திருக்கிறது. அது என்ன என்று கண்டுபிடியுங்கள். பார்க்கலாம். முடியாதவர்கள் அடுத்தவாரம் வரை பொறுத்திருங்கள்.



**சென்ற புதிர் கேள்விக்கான விடை**


அனிதாவிடம் 7 பென்சில்களும், கார்த்தியிடம் 5 பென்சில்களும் இருந்தன.

## புத்திசாலி ஒட்டகச் சிவிங்கி




சராசரி மனிதர்களைப் போல் 3 மடங்கு உயரம் வளரும் ஒட்டகச் சிவிங்களால் தண்ணீர் குடிக்காமல் இரண்டு வாரம் வரை உயிர் வாழ முடியும். ஆழ்ந்த தூக்கம் என்றால் அது ஒட்டகச் சிவிங்கிகளுக்கு மிகக் குறைவுதான். நின்று கொண்டே அவற்றால் தூங்க முடியாது. இதனால் அவ்வப்போது தூங்கி எழுந்து கொள்ளும். தரையில் நான்கு கால்களையும் பரப்பி வைத்து தலையைக் கீழே வைத்த நிலையில்தான் ஒட்டகச் சிவிங்கிகள் தூங்க முடியும். அந்தத் தூக்கமும் கூட சில நிமிடங்கள்தான். குட்டி பிறந்த ஒரு சில மணி நேரங்களில் எழுந்து நிற்க முடியும். தாயுடன் குட்டி 15 மாதங்கள் வரைசேர்ந்தே வாழும். சிங்கமும், சிறுத்தையும்தான் ஒட்டகச் சிவிங்கிகளுக்கு கிலி தருபவை. தனியாக இருந்தால் இந்த இரண்டு மிருகங்களும் தங்களை வேட்டையாடித் தின்றுவிடும் என்பதால் புத்திசாலித் தனமாக எப்போதும் வரிக்குதிரை, மான் போன்ற பிராணிகளின் கூட்டத்தினருடன் சேர்ந்தே காணப்படும்.

## இதற்கு விளக்கம் வேண்டாமே...!



பிரித்தானியா

# சிறுமியைக் கடத்திவந்து 10 வருடங்கள் பாலியல் அடிமையாக நடத்திய வயோதிபத் தம்பதிகள்!



பாகிஸ்தானில் இருந்த அநாதரவான, செவிப்புலனற்ற 10 வயது சிறுமியொருவரை பிரித்தானியாவுக்குக் கடத்தி வந்து அவரை 10 வருட காலமாக பாலியல் அடிமையாக நடத்திய தம்பதிகள் தொடர்பான வழக்கு பிரித்தானிய மின்ஷல் வீதி கிறவுண் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தினசரி பல தடவைகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட இந்த சிறுமி சமையல், சுத்தப்படுத்தல், தைத்தல், உடைகளைக் கழுவுதல், 'அயன்'பண்ணுதல் போன்ற வேலைகளைச் செய்யவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.



தடுத்து வைத்திருந்த வீடு

தரையில் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் உறங்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

இரவில் இவர் தப்பிச் சென்றுவிடாதபடி இவர் இருக்கும் இடம் பூட்டியே வைக்கப்பட்டிருக்கும்.

தற்போது சுமார் 20 வயதாகும் மேற்படி சிறுமி அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறிய அறையில் மலசலகூட வசதியோ தண்ணீர் வசதியோ இருக்கவில்லை. இதனால் தாகமேற்படும் போதும் இயற்கைக் கடனை கழிக்க வேண்டிய தேவை ஏற்படும் போதும் தான் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையின் கதவைத் தட்டி குறிப்பிட்ட ஜோடியின் கவனத்தைத் தன்பக்கம் திசை திருப்ப முயற்சிப்பது வழமையாகும். ஒரு போதும் பாடசாலைக்கு செல்லாத இந்த சிறுமிக்கு பிரித்தானிய அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிக் கொடுப்பனவுகளை பெறுவதற்கு வசதியாக தனது பெயரை கையெழுத்துப் போடுவதற்கு மட்டும் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. பத்து வயதிலேயே கொண்டுவரப்பட்டுவிட்டதனால் சிறுமிக்கு தனது உறவினர்கள் குறித்தோ அல்லது தான் எங்கு செல்வது என்பது குறித்தோ எதுவும் தெரியவில்லை.

அத்துடன், அவர்களது உறவினர்கள் வீடுகளிலும் வேலைக்கு ஆள் தேவைப்படும்போது இப்பெண்ணைக் கொண்டுசென்று கொடுத்துள்ளனர்.

இலிஸ் அஷரும் (83 வயது) அவரது மனைவி தலாத்தும் (66 வயது) மேற்படி சிறுமியை 2000ம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து பிரித்தானியாவுக்கு கடத்தி வந்துள்ளனர். கிரேட்டர் மான் செஸ்டரில் எக்கின்ஸ் எனும் இடத்திலுள்ள மேற்படி தம்பதியின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட இந்த சிறுமி அடிமையாக நடத்தப்பட்டுள்ளார். அச் சிறுமி இரவு நேரத்தில் சின்னஞ்சிறு அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டு கொங்கிறீட்

பாகிஸ்தான்

## 13 ஆயிரம் ஆபாச இணையங்களுக்குத் தடை

பாகிஸ்தானில் 13 ஆயிரத்துக்கும் அதிகமான ஆபாச இணையத் தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. பாகிஸ்தான் தகவல் தொழில்நுட்ப செயலர் நவாப் லியாகத் அலிகான் இது தொடர்பாக கூறியதாவது, இணையத் தளங்களில் ஏராளமான ஆபாசத் தளங்கள் வலம் வருகின்றன. இதனால் பெரும் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே, 13 ஆயிரத்துக்கும் அதிகமான ஆபாச இணையத் தளங்கள் உடனடியாக தடை செய்யப்பட்டுள்ளன. எனினும், எல்லா ஆபாச இணையத் தளங்களையும் அரசால் தடுக்க முடியவில்லை. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இணைய தளத்தில் ஆபாச படங்கள், செய்திகள் குறித்த புகார்கள் வந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இணையத் தளங்களில் ஆபாசங்களை தடுக்க, தானியங்கி முறையில் தணிக்கை செய்யும் தொழில்நுட்பத்தை இந்தியாவும் சீனாவும் அமுல்படுத்தி வருகின்றன. இந்த தொழில்நுட்பத்தை கொண்டு வர அதிக செலவாகும். அப்படியே இந்த தொழில்நுட்பத்தை புகுத்தினாலும், எல்லா ஆபாச இணையத் தளங்களையும் தடுக்க முடிவதில்லை. பெரும்பாலான இணையத் தளங்கள் வெளிநாடுகளை சேர்ந்தவையாக இருப்பதால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கவும் முடிவதில்லை. எனினும், முகப் புத்தகம், யூ டியூப் போன்றவற்றுக்கு பாகிஸ்தான் அரசு தடை கொண்டு வந்தது. அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால், ஆபாச இணையத் தளங்களை மட்டும் தடை செய்ய முடிவெடுக்கப்பட்டது என்று நவாப் லியாகத் கூறினார்.

எகிப்து

## ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்த முடிவு

எகிப்து நாட்டின் அதிபர் முபாரக் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு நிர்வாக பொறுப்பை இராணுவம் ஏற்றது. என்றாலும் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தலைநகர் கெய்ரோவிலும், வேறு சில நகரிலும் ஆயிரக்கணக்கானோர் திரண்டு இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். விரைவாக ஜனாதிபதி தேர்தலை நடத்தி ஆட்சியை பொதுமக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க கோரி வருகிறார்கள்.


இந்நிலையில் இராணுவ ஆட்சியாளர்களின் உயர்மட்ட குழு கூட்டம் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்துவது என்றும், மார்ச் 15ம் திகதி மனு தாக்கல் தொடங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இந்த தகவலை உயர்மட்ட ஆணைக்குழு உறுப்பினர் அப்துல் இப்ராகிம் தெரிவித்தார்.

இதற்கு முன்பு ஜனாதிபதி தேர்தல் ஏப்ரல் மாதம் மத்தியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது எடுக்கப்பட்ட முடிவுன் படி ஒரு மாதத்திற்கு முன்பு தேர்தல் நடைபெற இருக்கிறது.

ஆப்கான்

## நேட்டோ படையின் தாக்குதலில் குழந்தைகள் பலி

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் சிக்கி எட்டுக் குழந்தைகள் உயிரிழந்துள்ளன. கடந்த 9ம் திகதி ஆப்கானிஸ்தானின் கபீஸா மாகாணத்தின்



நெஜ்ராப் மாவட்டத்தில் கியாவாலா கிராமப் பகுதியில் தலிபான்களின் இலக்கு எனக் கருதி நேட்டோப் படையினர் திடீர் வான் தாக்குதல் நடத்தியதாகவும், இதன்போதே எட்டுக் குழந்தைகள் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நோட்டோ படைகளின் இத்தாக்குதலுக்கு ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் கண்டனம் தெரிவித்துள்ளார். முன்னரும் பொது மக்கள் மீதான தாக்குதல் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு கண்டனம் வெளியிடுவது வழமையானது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், இத்தாக்குதல் குறித்து விசாரிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வே

## இராணுவ விருது கோரும் கொலையாளி

நோர்வே நாட்டில் தாக்குதல் நடத்தி 77 பேரை கொன்றவர், தனக்கு விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் கடந்தாண்டு யூலை மாதம் 22ம் திகதி காரில் வைக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்தது. இரண்டு மணி நேரம் கழித்து உடோயா தீவில், நோர்வே தொழிலாளர் கட்சியின் இளைஞர் அணியினர் முகாம் மீது சரமாரி துப்பாக்கிச் சூடும் நடந்தது. அடுத்தடுத்து நடந்த இந்தத் தாக்குதலில் 77 பேர் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக 32 வயதுடைய ஆண்டர்ஸ் பெஹ்ரிங் பிரிவிக் என்பவரை காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக ஆண்டர்ஸை கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒஸ்லோ மாவட்ட நீதிமன்றத்தில் காவல்துறையினர் முன்னிலைப்படுத்தினர். அப்போது நோர்வேயில் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் குடியேறி வருகின்றனர். அத்துடன் ஐரோப்பாவின் ஆதிக்கத்தால் நோர்வே கலாசார சீரழிவை சந்தித்து வருகிறது. அதனால் தேச துரோகிகள் மீது நானே

(24ம் பக்கம் பார்க்க)

## சுற்றுச்சூழல் செயற்பாட்டில் சுவிச்சர்லாந்து முதலிடம்

சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசுகளைத் தடுப்பதிலும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும் முன்னணி வகிக்கும் நாடுகள் குறித்து சர்வதேச பொருளாதார அமைப்புடன் யேல் மற்றும் கொலம்பிய பல்கலைக்கழகம் இணைந்து ஒரு ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வின் முடிவில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் சுவிட்சர்லாந்து முதலிடம் வகிக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. 132 நாடுகளில், 22 காரணிகளை அடிப்படையாகக்



கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை, வல்லரசாகக் கருதப்படும் அமெரிக்கா 49வது இடத்திலும், சீனா 116வது இடத்திலும் உள்ளன. இந்தியா 125வது இடம் வகிக்கிறது. 'வளர்ந்து வரும் நாடான இந்தியா சுற்றுச்சூழலைக் காப்பதில் பின் தங்கி உள்ளது. இந்நிலையை மாற்ற இந்திய அரசியல் தலைவர்கள் விழித்துக் கொள்ள வேண்டும். சுற்றுச்சூழல் குறித்த அதன் கொள்கைகளை இரு மடங்கு அதிகரிக்க வேண்டும்' என்று யேல் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் மையத்தின் இயக்குநர் டானியல் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் பாடசாலைகளில் சீன மொழி

பாகிஸ்தான் நாட்டு பாடசாலைகள் அனைத்திலும் சீன மொழியை கற்பிப்பதை நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டு தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிர்தோஸ் ஆசிக் அவான் தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் மேலும் கூறியுள்ளதாவது, சீனா எமது நட்புறவு நாடு. எப்போதும் பாகிஸ்தானுக்கு ஆதரவளிக்கக் கூடியது. சர்வதேச விவகாரங்களில் பாகிஸ்தானையே சீனா ஆதரித்தும் வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்த சீன மொழியை எமது நாட்டில் கற்றுத்தருவது அவசியமானதும் கூட.

இருநாட்டு உறவுகளிடையே மொழி ஒரு முட்டுக் கட்டையாக இருந்துவிடக் கூடாது என்பதில் நாங்கள் கவனமாக இருக்கிறோம். இதனால் எமது நாட்டுப் பாடசாலைகளில் சீன மொழியை கற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கிறோம் என்றார் அவர்.

## மியன்மாரில் இருந்து 10 ஆயிரம் பேர் சீனாவில் தஞ்சம்

மியன்மார் நாட்டின் வடக்கு பகுதியில் இராணுவத்துக்கும், புரட்சி படைக்கும் இடையே போர் தொடர்ந்தும் நடந்து வருகிறது. எனவே அந்த பகுதியில் இருந்து மக்கள் அருகே உள்ள சீன நாட்டின் உன்



னான் மாநிலத்துக்குள் அகதிகளாக செல்கிறார்கள். கடந்த 8 மாதங்களாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக சீனாவில் அடைக்கலம் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அகதிகளாக வந்தவர்கள், சீனாவில் முகாம்



களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு உணவு, மருந்து, குடிநீர் போன்ற வசதிகள் குறைவாக இருக்கிறது என்று அகதிகள் தெரிவித்தனர்.

### ஒரே நாளில் 14 பேருக்கு மரண தண்டனை

ஈராக் நாட்டில் கடந்த 9ம் திகதி ஒரே நாளில் 14 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள். இவர்களையும் சேர்த்து இந்த ஆண்டில் கடந்த 40 நாட்களுக்குள் அங்கு 65 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### கடத்தப்பட்ட சீனர்கள் விடுவிப்பு


சூடானில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 29 சீனர்களை 11 நாட்கள் கழித்து விடுவிக்கப்பட்டுள்ளனர். சூடானில் கட்டமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த 47 பணியாளர்களில் 29 பேரை சூடான் தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர். இந்த சம்பவத்தில் ஒரு சீனர் உயிரிழந்தார். அவரது உடலை சூடான் அதிகாரிகள், சீனாவிடம் ஒப்படைத்தனர்.

### வணிகம் செய்ய சிறந்த நாடு சிங்கப்பூர்

வணிகம் செய்வதற்கு வசதியாக உள்ள நாடுகள் தரப்படுத்தலில் இந்த ஆண்டு சிங்கப்பூர், முதலாம் இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஹொங்கொங், நியூசிலாந்து, ஆகிய நாடுகள் இரண்டாம் மூன்றாம் இடத்தில் உள்ளன. ஐக்கிய அமெரிக்கா இந்த பட்டியலில் நான்காம் இடத்தில் உள்ளது.

ஒரு நாட்டில் வணிக முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஏற்படும் காலதாமதம், கீழ்கட்டுமான வசதிகள், முதலீட்டாளர் பாதுகாப்பு, கடன் வசதிகள் மற்றும் பிற தடைகளின் அளவினை அடிப்படையாகக் கொண்டு வசதியாக வணிகம் செய்வதற்கான சுட்டியினை


நடவடிக்கை எடுத்தேன். இதில் எந்த குற்றமும் செய்யவில்லை. என்னை விடுதலை செய்ய வேண்டும். இந்த தாக்குதலுக்காக எனக்கு இராணுவ விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்றார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. விசாரணைகளின் பின்னர் ஆண்டர்ஸை ஏப்ரல் மாதம் 16ம் திகதி வரை காவலில் வைக்கும்படி



நீதிபதி வென்சி ஜெல்ஸ்டன் உத்தரவிட்டார். அன்று முதல் விசாரணை தொடங்க உள்ளது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 21 ஆண்டு சிறை தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மனநிலை சரியில்லாதவர் என்பது நிருபணமானால் மனநல மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா

# அடுத்த ஜனாதிபதி யார்?



அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்ற கேள்வியுடன் அந்நாடே பரபரப்பாக காட்சியளிக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவி காலம் முடிவடைவதையொட்டி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஒபாமாவுக்கு போட்டியாக குடியரசுக் கட்சி சார்பில் யாரை நிறுத்தலாம் என்று அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மாநிலங்களிலும் கட்சி அளவில் தேர்தல் நடந்து வருகிறது. இதில் மிட் ரோம்னி, ரிக் சந்தோரம் ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்நிலையில், மச்சாசூசெட்ஸ் மாநில முன்னாள் தலைவரான ரோம்னி 3 மாநிலங்களில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று இருக்கிறார். மொத்தம் அவர் 4 மாநிலங்களில் வெற்றி பெற்று முன்னிலையில் இருக்கிறார். இதுபற்றி ரிக் சந்தோரம் கூறுகையில், இந்த வெற்றி தனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றாலும் இன்னும் பல மாநிலங்களில் கட்சி அளவில் நடக்க இருக்கும் தேர்தல்களில் வெற்றி பெற்று ஒபாமாவை எதிர்க்கும் வேட்பாளராக தெரிவாக வேண்டும். அதன் பின் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் காணப்படும் சீன எதிர்ப்பு நிலைப்பாடு தொடர்பாக சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் அமெரிக்க அரசை கடுமையாக எச்சரித்துள்ளார். வாஷிங்டன் டிசியில் இடம்பெற்ற தந்திரோபாய மற்றும் சர்வதேச கற்கைகள் நிலையத்தில் இடம்பெற்ற ஆராய்ச்சி மாநாடொன்றில் உரை நிகழ்த்தும்போதே சண்முகம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். அமெரிக்காவுக்கான ஒருவார உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருக்கும் கே.சண்முகம் தனது பயணத்தின் இறுதியில் இவ்வாறான கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள உள்நாட்டு அழுத்தங்களும் தேர்தல் நிபந்தனைகளும் உள்நாட்டு விவாதங்களில் சீன எதிர்ப்பு நிலைமையை வெளிக்காட்டியுள்ளதென சண்முகம் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க பயணத்தை தொடர்ந்து சீனாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில் சண்முகம் இவ்வாறு கூறியுள்ளார்.

பிராந்தியத்திற்கான குறிக்கோளற்றதும் புதியதுமான யதார்த்த நிலையினை தோற்றுவிக்கக்கூடிய பேச்சு வன்மையில் விஸ்தீரணத்தினை அமெரிக்கர்கள் குறைத்து மதிப்பிடக்கூடாதெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதை உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த மாணவரொருவர் ஒத்துக்கொண்டுள்ளார். இவர் மீது ஆயுதத்தினை வைத்திருந்தமை, சட்ட விரோதமாக அமெரிக்காவில் தங்கியிருந்தமை, ஜனாதிபதியைக் கொலை செய்யத்திட்டமிட்டிருந்தமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன. உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த உலுக்பெக் கொடிரோவ் (22) என்ற அவ் இளைஞன் அலபாமாவில் வைத்து கடந்த வருடம் யூலை மாதம் கைதுசெய்யப்பட்டார்.


இந்நிலையில் தற்போதே இவர் தன்மீதான குற்றச்சாட்டுக்களை ஒத்துக்கொண்டுள்ளார். இவர் உஸ்பெகிஸ்தானில் இயங்கிவரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பொன்றின் கட்டளைகளுக்கிணங்கவே செயற்பட்டு வந்துள்ளார். இக்குற்றச்சாட்டுகளுக்காக சுமார் 30 வருடங்கள் வரை சிறைத்தண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவருக்கு எதிர்வரும் மே மாதமளவில் தண்டனை அறிவிக்கப்படவுள்ளது.

ஐரோப்பா

# கடும் குளிரில் இரு வாரங்கள்! நதிகள் உறைந்ததால் பயணங்கள் பாதிப்பு

ஐரோப்பிய நாடுகளில் கடந்த இரு வாரங்களாக நீடிக்கும் கடும் குளிரினாலும், பனிப்பொழிவினாலும் இயல்புநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குளிர் காரணமாக இதுவரை 460 பேர் வரை பலியாகியுள்ளனர். இதுவரை இல்லாத அளவுக்கு பனிப்பொழிவு கடுமையாக உள்ளது. கடந்த வாரம் முழுவதும் நீடித்த பனிப்பொழிவு இந்த வாரமும் இருக்கும் என்றும், எனினும் இவ்வாரம் முதல் சற்று குறைவடைந்து வெப்பநிலை அதிகரிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

நதிகள் பல உறைவடைந்துவிட்டதால் ஆற்றி



னூடாக மேற்கொள்ளப்பட்ட பயணங்கள் மற்றும் பொருட்கள் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் ஜேர்ஜியா ஊடாகச் செல்லும் முக்கிய நதியான டான்யூப் (Danube) கடும் குளிரினால் உறைந்தது. மத்திய ஐரோப்பாவில் முக்கியமான நீர் வழித்தடமாக டான்யூப் ஆறு இருந்து வருகிறது. சுமார் 2,860 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த ஆறு சேர்பியா, குரோஷியா, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி, ஒஸ்ரியா உள்ளிட்ட 10 நாடுகளின் வழியாகச் செல்கிறது. மின்சார உற்பத்தி, மீன்வளம், விவசாயப் பாசனம், நகர்ப்புற குடிநீர், தொழில்நிறுவனத் தேவை ஆகியவற்றுக்கு டான்யூப் நதி பயன்படுகிறது. இந்த ஆறு உறைந்ததனால் கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இன்னும் 10 நாள்களுக்கு கப்பல் போக்குவரத்து நடைபெறாது என சேர்பிய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் பாவ்லே கலிகோ தெரிவித்தார்.

220 க்கும் மேற்பட்ட சிறுபடகுகள உறைந்த நீரில் சிக்கிக்கொண்டதாக பல்கேரிய அரசு தெரிவித்துள்ளது. கப்பல் போக்குவரத்துக்குத் தடையும் விதித்துள்ளது.

இதேவேளை, விமானப் போக்குவரத்துக்களும் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளன. இதனால் விமான நிறுவனங்கள் பல மில்லியன் ஈரோ இழப்பினைச் சந்தித்துள்ளன.

ஈரான்

# அணுசக்திச் சாதனை விரைவில் முக்கிய அறிவிப்பு

ஈரான் நாடு பாதாள அறையில் அணு உலை அமைத்து இரகசியமாக அணு குண்டு தயாரித்து வருகிறது என்று அமெரிக்கா கூறி வருகிறது. ஆனால் இதை ஈரான் மறுக்கிறது. மின்சார உற்பத்தி போன்ற ஆக்கபூர்வ பணிகளுக்கே பயன்படுத்துகிறோம் என கூறி வருகிறது. இதற்

# அண்டார்டிக்கா பனிப் படலத்திற்கு கீழே ஏரிகள்

## – ரஷ்யா விஞ்ஞானிகள் அறிவிப்பு

தென்துருவப் பகுதியான அண்டார்ட்டிக்கா பிரதேசத்தில் உறைந்த நிலையில் உள்ள பனிப்படிப்படலத்துக்கு கீழே நான்கு கிலோ மீற்றர் ஆழத்துக்கு துளையிடும் தங்களது திட்டம் வெற்றி பெற்றுள்ளதாக ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள். இந்தத் திட்டத்தை முன்னெடுத்த புனித பீட்டர்ஸ்பேர்க் நிலையம், இந்தக் கண்டுபிடிப்பை கடந்த வாரம் வெளியிட்டுள்ளது. அண்டார்ட்டிக்கா பனிப் பிரதேசத்தில், உறை நிலையிலுள்ள பனிப்படலங்களுக்கு கீழே 300க்கும் அதிகமான ஏரிகள் இருப்பதாக அறியப்படும் நிலையில், ஒரு ஏரியின் பனிப்படலம் இந்த அளவுக்கு ஆழமாக துளையிடப்படுவது இதுவே முதல் முறை. அண்டார்ட்டிகாவின் உறைந்த சரித்திரம் மற்றும் சூரிய மண்டலத்தில் வேறெங்கெல்லாம் உயிரினம் இருக்கக் கூடும் என்பதை இந்த ஏரிகள் மூலம் அறிந்து கொள்ள முடியும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.




கடந்த சில தசாப்தங்களில் அண்டார்ட்டிகாவில் முன்னெடுக்கப்பட்ட மிகப்பெரும் முயற்சிகளில் இதுவும் ஒன்று. அதிலும் குறிப்பாக இந்த ஆய்வை மேற்கொண்ட ரஷ்ய ஆய்வு மையமான வோக்டொக் (Boctok) நிலையம், அந்தக் கண்டத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.

மேலும் ஆய்வுகளை மேற்கொள்ள மிகக் கடும் சவால்களை சந்திக்க வேண்டிய ஒரு இடமும் அது.

அங்கு வெப்பநிலை சைபருக்கு கீழே 'மைனஸ் 90' பாகை வரை குறையக் கூடும். ஆனாலும் இப்படியான- மிகக்கடுமையான சுற்றுச்சூழல் நிலவும் இடத்தில் தான், விஞ்ஞானிகளும், பொறியிலாளர்களும் பனிப்படலத்தை குடைந்து அதற்கு கீழே பெருமளவில் திரவ நிலையில் இருக்கும் நீரை அடைய முயற்சி செய்தார்கள்.

தற்போது விஞ்ஞானிகளால் 3768 மீற்றர் ஆழத்தில் குடைந்து அடையப்பட்டுள்ள அந்த ஏரியின் அடிமட்டம், சிறிய ஐரோப்பிய நாடான லக்ஸம்பேர்கின் அளவைவிட ஆறு மடங்கு பெரியதாக உள்ளது என்று ராடர் மூலம் நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அந்தப் பகுதியில் இருக்கும் கற்படுகைகளின் வெப்பம் மற்றும் அந்த ஏரிக்கு மேலேயுள்ள பனிப்படலத்தின் அதீதமான அழுத்தம் காரணமாக, அந்த அளவுக்கு ஆழத்தில் உள்ள நீர் திரவ நிலையில் உள்ளது.

வோஸ்டாக் ஏரியில் தாங்கள் நடத்திய ஆய்வுகள், அண்டார்ட்டிகாவின் காலநிலை முன்னர் எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்ள உதவும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

அந்த அளவு ஆழத்தில் உயிரினங்கள் கண்டுபிடிக்கப்படக் கூடும் என்பது குறித்தும் அவர்கள் உற்சாகத்தில் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் நீர் பல ஆயிரம் ஆண்டுகளாக உலகத்துடன் தொடர்பு இல்லாத நிலையிலேயே இருந்துள்ளது. அப்படியான சூழலில் அந்த ஏரியில் இருந்திருக்கக் கூடிய நுண்ணுயிரிகள் வேறு ஒரு வடிவம் பெற்றிருக்கும். மேலும் நாம் வாழும் பூமிக்கு அப்பால் உயிரினங்கள் இருக்கக் கூடிய சாத்தியகூறுகள் குறித்தும் இந்த ஏரியிலிருந்து தெரியவரும். சூரிய மண்டலத்தில் பல கோள்களை சுற்றி வரும் துணை கிரகங்கள் பலவற்றில் உறை நிலையில் இருக்கும் பகுதிகளுக்கு கீழே இருக்கும் நீரின் தன்மைகளுக்கும், இந்த ஏரியில் இருக்கும் நீரின் தன்மைகளுக்கும் இடையே பெரிய மாறுதல்கள் ஏதும் இருக்காது. வேஸ்டாக் ஏரியில் உயிரினங்கள் வாழ முடியுமானால், வியாழனைச் சுற்றிவரும் 'ஈரோப்பா' துணைக் கோளிளோ அல்லது சனிக்கிரகத்தை சுற்றி வரும் 'என்சிலேடஸ்' துணைக் கோளிலோ உயிரினங்கள் வாழக் கூடிய சாத்தியங்கள் உள்ளன என்பது உறுதியாகக் கூடும் என்று கருதப்படுகின்றது.



கிடையில் ஈரான் ஜனாதிபதி முகமது அகமதி நிஷாத் கடந்த சனிக்கிழமை மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். அப்போது அவர், "இன்னும் சில நாட்களில் ஈரான் தனது மிகப் பெரிய அணுசக்தி சாதனை குறித்த முக்கிய அறிவிப்பை இந்த உலகுக்கு அறிவிக்க இருக்கிறது" என்றார். ஈரானின் இந்த திடீர் அறிவிப்பு உலக நாடுகளிடையே பரபரப்பை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*அமெரிக்கா*

## பிரபல சாதனைப் பாடகி மர்ம சாவு

அமெரிக்காவின் பிரபல பொப் இசை பாடகியாக விளங்கியவர் விட்னி ஹூஸ்டன் (வயது 48). இவர் மாடல் அழகியாகவும், திரைப் படங்களிலும் நடித்து புகழ் பெற்றவர். இவர் லாஸ் ஏஞ்சல்சில் பிவெர்லி ஹுஸ்ல்ஸ் பகுதியில் உள்ள விடுதியில் தங்கி இருந்தார். இந்நிலையில் விடுதியின் 4வது மாடியில் இருக்கும் அறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அவர் படுக்கையில் இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்தது.

ஆனால் அவர் எப்படி இறந்தார் என்பது மர்மமாக உள்ளது. இது பற்றி காவல்துறை அதிகாரிகள் கூறுகையில், அதே விடுதியில் அவரது உறவினர்களும், நண்பர்களும் தங்கி இருந்துள்ளனர். இவரது உடலில் சந்தேகத்திற்கான தடயங்கள் எதுவும் இல்லை. என்றாலும் அவரது சாவு குறித்து விசாரணை நடத்தி வருகிறோம் என்று தெரிவித்தார்கள். பாடகிக்குப் போதை பழக்கம் உண்டு. அதன் காரணமாகவும் அவர் இறந்திருக்கலாமா? என்று சந்தேகிக்கப்படுகிறது. மரணம் அடைந்த பாடகி விட்னி முதலில் கிறிஸ்தவ ஆலயத்தில் பாடத்தொடங்கினார். பிறகு இரவு உணவகங்களில் பாடகியாகி தனது 20 வயதில் பொப் இசை கச்சேரிகளில் நுழைந்தார். 1980ம் ஆண்டுகளில் மிகவும் பிரபலமாக உலா வந்தார். இவர் ஏராளமான இசை அல்பங்களை வெளியிட்டுள்ளார். 2 முறை எம்மி விருது, 6 முறை கிராமி விருதுகள் உள்பட சுமார் 60ற்கும் மேற்பட்ட விருதுகள் பெற்றவர். இசை உலகில் அதிக விருதுகள் பெற்ற பெண் பாடகர் என்ற கின்னஸ் சாதனை பட்டியலிலும் இடம்பெற்றவர் ஆவார்.



உலக வங்கி கணிப்பிட்டு வருகின்றது. இதன் மூலம் உலக நாடுகளை தரப்படுத்தி, அவற்றின் முன்னேற்றங்களையும் வெளிப்படுத்தி வருகின்றது.

கடந்த ஆண்டு உலகின் 183 நாடுகளின் பட்டியலில் 98வதாக காணப்பட்ட இலங்கை, இந்த ஆண்டு 89வது இடத்திற்கு வந்துள்ளது. எனினும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் வணிக முயற்சி மற்றும் சொத்துக்களை பதிவு செய்வதற்கு எடுக்கும் காலம், கட்டிடங்கள் அமைப்பதற்கான அனுமதி பெறுதல், கடன் வசதியினை பெறுதல், வரி செலுத்துதல் போன்றனவற்றில் உள்ள சிக்கல் தன்மைகள் இந்த ஆண்டில் அதிகரித்துள்ளதாக உலக வங்கியின் புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இந்தப் பட்டியலில் இந்தியா 132வது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## நபிகள் தொடர்பில் கருத்தினை வெளியிட்டவர் நாடுகடத்தல்

நபிகள் நாயகம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டமையால் தண்டனைக்கு அஞ்சி மலேசியாவுக்குத் தப்பிச்சென்ற இளம் எழுத்தாளரை மலேசியா சவூதிக்குத் திருப்பி அனுப்பியுள்ளது.

ஹம்சா கஷ்காரி (23) என்ற இளம் எழுத்தாளர் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளையொட்டி தனது டுவிட்டரில் செய்தியொன்றை வெளியிட்டார். இவர் தனது டுவிட்களை பதிவு செய்து சில மணி நேரத்திலேயே இவரது கருத்துக்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. கஷ்காரி புனித இஸ்லாம் மதத்தினை அவமதித்தாகவும், தனது மதத்திற்கே துரோகம் செய்துள்ளதாகவும் இவரின் கருத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியது. இதனையடுத்து உடனே தனது டுவிட்களை அழித்த ஹம்சா கஷ்காரி தன்னை மன்னிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

எனினும் இவரது டுவிட் படுவேகமாக இணையத்தில் பரவத் தொடங்கியது. இதனால் இவரது நிலைமை மேலும் மோசமாகியது. அவருக்கெதிராக மக்களின் எதிர்ப்பு அதிகரிக்கவே அந்நாட்டு மன்னர் கஷ்காரியை கைது செய்யும்படி உத்தரவிட்டார். இதையடுத்து ஹம்சா ஆசிய நாடொன்றுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு தப்பிச்சென்ற ஹம்சா கஷ்காரி மலேசியாவுக்கே சென்றுள்ளதாகவும் இஸ்லாமிய நாடான மலேசியா இவரை மீண்டும் சவூதிக்குத்திரும்ப அனுப்பி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காதலர் தின எதிர்ப்பு



இந்தியாவின் இந்து ராம் கட்சியினர் காதலர் தின எதிர்ப்பைக் கொண்டாடி வருகின்றனர். காதலர் தினத்தைக் காதலர்கள் கொண்டாட இவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்தியக் கலாச்சாரத்தை இந்தத் தினம் சீரழிப்பதாகக்கூறி காதலர்தின அட்டைகளை விலைகொடுத்து வாங்கி தீயிட்டுக்கொழுத்தினார்கள். இந்தச் சம்பவம் கடந்த 12ம் திகதி யம்மூ கஸ்மீர் பகுதியில் இடம்பெற்றது.





# Mohan
## Jewellery Mart

பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

**3/4 Fois sans Frais**
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord

## ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்




DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

- எலிகள் – சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

Tél.: 01 76 58 42 07
Fax: 01 48 59 09 95

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
77 bis rue Robespierre
93100 Montreuil
சுதா / விமல் : 06 34 18 80 04

## வன்னி இறைச்சிக்கடை



M°: La Courneuve
Tram T1 - Arét : Danton
105, Avenue Jean Jaurés
93120 La Courneuve
Tél : 01 48 37 20 89

## உங்கள் தேவைகள் எங்கள் சேவைகள்

**We&You**
Event management
Group Foto Elanges

- புகைப்படம்
- வீடியோ
- மணவறை
- மண்டப அலங்காரம்
- மணப்பெண் அலங்காரம்
- விழாக்களுக்கான உணவு சேவை
- விழாக்களுக்கான உடைகள்



www.fotoelanges.com
01 43 83 95 26 - 06 45 83 90 64

Discover the world with....

## Serendib Lanka Travels Ltd

| Colombo Special | |
|---|---|
| Srilankan....£515.00 | Emirate....£477.00 |
| Gulf Air.......£605.00 | Etihad.....£454.00 |

| Very popular Destination special Only on Srilankan Airlines | |
|---|---|
| Colombo | £515.00 |
| Chennai | £515.00 |
| Tirchi | £515.00 |
| Kuala Lumpur | £485.00 |
| Singapore | £485.00 |

All fares mentioned are low seasons including taxes

| Popular Destination Special | |
|---|---|
| Sydney | £855.00 |
| Melbourne | £650.00 |
| Oslo | £152.50 |
| Zurich | £116.50 |
| Geneva | £112.90 |
| Toronto | £458.53 |
| Montreal | £461.53 |
| New York | £386.93 |

பாடசாலை விடுமுறையின் போது இலங்கை செல்வோருக்கு விசேட சலுகைகள்

JET AIRWAYS Brand new Boeing 777-300 ER Flights
Colombo: £545.00 Baggage: 32 k.g + 7 k.g
Chennai: £ 475.00 Baggage: 46 k.g + 7 k.g




இலங்கை, இந்தியா, கனடா மற்றும் அனைத்து உலக விமான பயணத்தையும் குறைந்த செலவில் மேற்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
E.Mail : info@serendib-lanka.co.uk
ATOL 9667 PROTECTED · IATA

## CENTRE DE BEAUTE INDIEN



தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள் அழகு நிலையம்
தொடர்புகளுக்கு: பாலன்
33, rue Philippe de Girard
75010 Paris, M° : La Chapelle.
Tél.: 06 63 01 75 80

DRANCYஇல் புதிய உதயம்

## Délices De L'INDE

அனைத்துவகையான சைவ உணவுவகைகளையும், பலகார வகைகளையும் அனுபவம் வாய்ந்த சமையலாளர்களால் சுத்தமாக தயாரித்து வழங்குகிறோம்.

விழாக்கள் கொண்டாட்டங்களுக்கு தேவையான பலகார வகைகளையும், உணவு வகைகளையும் குறிப்பிட்ட நேரத்தில் விநியோகம் செய்கிறோம்



220 rue Anatole France,
93700 Drancy. Tél : 01 57 42 48 16